கல்ஹணர்

சோம்நாத் தர்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

கல்ஹணர்

ஆங்கில மூலம்:

சோம்நாத் தர்

தமிழாக்கம்:

எஸ். கிருஷ்ணமூர்த்தி

சாகித்திய அக்காதெமி

Kalhanar : Tamil translation by S. Krishnamoorthy of Somnath Dhar's monograph in English. Sahitya Akademi, New Delhi (1983) **Rs. 4.**

First published : 1983

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:

ரவீந்திரபவன், 35 பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001

29, எல்டாம்ஸ் சாலை, தேனும்பேட்டை, சென்னை 600 018

பிளாக் V—B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம்,
கல்கத்தா 700 029

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014

ரூ. 4.

அச்சிட்டோர்: *டயோசிசன் அச்சகம், சென்னை 600 007.*

உள்ளுறை

முன்னுரை

தெளிவான கால வரிசை வரலாறுகள் இல்லாத காரணத்தால் இந்தியாவின் பண்டைய காலம் திட்டவட்டமாக அறியப்படவில்லை. பண்டைய இந்தியாவில் உண்மையாக வாழ்ந்த அல்லது புராணக் கதைகளில் வரும் அரசர்களின் சாதனைகளின் செய்திக் கோவையே வரலாறுகக் கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக, ஆரியர்களின் வருகைக்கு முன் இந்தியாவை ஆண்ட அரச பரம்பரைகளின் வம்சாவளியும் சாதனைகளின் வருணனைகளும் புராணங்களில் காணப்படுகின்றன. ஆனால் இந்த அரசர்களைப்பற்றி அறிவியல் அடிப்படையில் வரலாறு எழுதத் தேவையான செய்திகள் மிகவும் அரிதாகவே உள்ளன. வடமொழி இலக்கியத்தின் காலம் முழுவதிலுமே நம்பகமான வரலாற்று ஆசிரியர் என்று கருதப்படக்கூடியவர் யாருமிலர்.

இந்தியாவை ஆண்ட புகழ்பெற்ற மன்னர்களைப்பற்றி சரியான செய்திக் கோவைகள் கி.பி. ஆறும் நூற்றுண்டுக்குப் பிறகே கிடைக்கின்றன. எடுத்துக்காட்டு: பாணரின் '**ஹர்ஷசரிதம்**', கல்ஹணரின் **இராஜதரங்கிணி'**, '**ஆயின்—இ—அக்பரி**', '**அக்பர் நாமா**' முதலியவை. இந்நூல்களில் காணப்படும் செய்திகளை அக்காலத்தைய வரலாற்றுச் செய்திகளாலும் கல்வெட்டுக்களிலிருந்தும் நாணயங்களிலிருந்தும் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் வரலாறு ஒன்றை எழுத்து மூலமாகவும் முழுமையாகவும் காஷ்மீர் ஒன்றுதான் பெற்றுள்ளது என்றுல் அதற்கான பெருமை கல்ஹணரையே சாரும்.

கல்ஹணரின் '**இராஜதரங்கிணி**' ('அரசர்களின் ஆறு') நமக்குக் கிடைத்துள்ள மிகத் தொன்மையான காஷ்மீரின் வரலாறு ஆகும். கி.பி. 1148 முதல் 1150–க்குள் எழுதப்பட்ட இந்தக் கவிதை வரலாறு காஷ்மீரைப் பற்றியும் இந்தியாவின் மற்ற பகுதிகளைப் பற்றியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல், சமூக, பிற செய்திகளைத் தெரிவிக்கிறது. இது ''வரலாற்றுத் துறைக்கு இந்து இந்தியா அளித்துள்ள ஒரே காணிக்கை'' என்று எச். ஜி. ராலின்ஸன் கூறுகிறுர். இதில் வருணிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் கால வரிசைச் செய்திக் கோவையின் காரணமாக, நமக்குக் கிடைத்துள்ள வடமொழிப் படைப்புகளுள் தனித்து நிற்கிறது இந்த நூல். இலக்கிய நூல்களையும் தத்துவ நூல்களையும் படைத்த பல இந்திய அறிஞர்கள் வாழ்ந்த காலத்தைக் கணக்

கிடவும் இந்த நூல் உதவுகிறது. சுருங்கச் சொன்னால், இந்தக் காவியம் பண்டைய இந்தியாவின் வரலாற்றைத் தெளிவாக எழுதுவதற்குப் பெரிதும் உதவுகிறது.

'இராஜதரங்கிணி'யில் உள்ள சரியான செய்திகளின்மூலம் பிற்கால வடமொழி வரலாறுகளில் காணப்படும் அரைகுறையான வரலாற்று விவரங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே, சிறந்த கவியும் வரலாற்று ஆசிரியருமான கல்ஹணர் காஷ்மீரின் பண்டைய வரலாற்றையும் பண்பாட்டையும் நினைவிலிருந்து அழிந்துபோகாமல் பாதுகாத்திருப்பதோடு, பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தரும் செய்திகளை முறைப்படுத்திப் புரிந்துகொள்ளவும் வரலாற்று மாணவனுக்கு உதவுகிறார். அதுமட்டுமல்ல, காஷ்மீரின் வரலாற்றைப் பயில்பவன் இந்தியாவின் மற்றெந்தப் பகுதியின் வரலாற்றையும் பயில்பவனைவிடச் சிறந்த முறையில் கடந்த காலத்துடன் தொடர்பு கொள்ளமுடிகிறது.

இரஞ்சித் சீதாராம் பண்டிட் இராஜதரங்கிணியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதியுள்ள[1] நூலுக்குத் தான் அளித்துள்ள நீண்ட முன்னுரையில் ஜவாஹர்லால் நேரு இக்காவியத்தின் கதை பற்றியும், இதில் கல்ஹணர் தன் காலத்திலும் தனக்கு முற்பட்ட காலங்களிலும் நிலவிய அரசியல், சமூக வாழ்க்கையின் உண்மை நிலையைச் சித்திரிப்பது பற்றியும் கூறியிருப்பதில் ஒரு பகுதி இது:

''இது ஒரு வரலாறு; ஒரு காவியமுங்கூட. இரண்டும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவைதாம். அதிலும் மொழிபெயர்ப்பில் இந்தப் பொருத்தமின்மை அழுத்தமாகத் தெரியும். ஏனென்றால் மொழிபெயர்ப்பில் நாம் கல்ஹணரின் கவிதையின் இசைத் தன்மையையோ, அவரது இனிய, நேர்த்தியான மொழி நயத்தையோ அனுபவிக்க இயலாது . . . இது இடைக்காலத்தைப்பற்றிய கதை; ஆயின் மகிழ்வூட்டும் கதையன்று. இதில் அரண்மனைச் சூழ்ச்சி, கொலை, அரசுக்கெதிரான சதி, உள்நாட்டுக் கலகம், கொடுங்கோன்மை இவையெல்லாம் அளவுக்கதிகமாகவே உள்ளன. சர்வாதிகாரம், இராணுவக் குழு ஆட்சி இவற்றின் கதை இது . . . இது சொல்வது அரசர்கள், அரச குடும்பங்கள், பிரபுக்கள் ஆகியோரைப் பற்றியே அன்றி, சாதாரண மக்களைப் பற்றி அன்று. எனினும், கல்ஹணரின் படைப்பு அரசர்களின் செய்கைகள் அடங்கிய வெறும் பட்டியல் அன்று. இது அரசியல், சமூக செய்திகளும் ஓரளவு பொருளாதாரம் பற்றிய செய்திகளும் கொண்ட ஒரு சிறந்த செய்திக் கருவூலமாகும். இதில் நாம்

[1] பதிப்பு—இந்தியன் பிரஸ், அலகாபாத், 1935. மறுபதிப்பு—சாகித்திய அக்காதெமி, 1968 & 1977.

இடைக்காலத்தின் செல்வச் செழிப்பு, நிலப் பிரபுத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த வீரர்களின் பளபளக்கும் போர்க் கவசங்கள் . . . சூழ்ச்சிகள், போர்கள், போர் வெறியும் காமவெறியுங்கொண்ட இராணிகள் இவற்றின் ஒரு முழுக் காட்சியைக் காண்கிறோம். பெண்கள் திரைமறைவில் மட்டுமல்ல, அரசவையில் ஆலோசகர்களாகவும், போர்க்களத்தில் தளபதிகளாகவும், போர் வீரர்களாகவும் சிறந்த முறையில் செயற்படுகிறார்கள். மனித உறவுகளையும் காதல், வெறுப்பு, நம்பிக்கை, வெறி போன்ற உணர்ச்சிகளையும் நாம் இந்நூலில் தெளிவாகக் காணமுடிகிறது. சுய்யாவின் பொறியியல், நீர்ப்பாசனத் திட்டங்கள்; லலிதாதித்தியன் தொலை நாடுகளில் நிகழ்த்திய போர்கள்; போரின் மூலம் அஹிம்சையைப் பரப்ப மேகவாஹனன் மேற்கொண்ட விநோத முயற்சி; கோவில்களும் தவச்சாலைகளும் கட்டப்பட்டமை; அவை புறச் சமயிகளாலும், தெய்வச் சிலைகளை அழிப்பவர்களாலும் சிதைக்கப்படுதல்; கோவில் கருவூலம் பறிமுதல் செய்யப்படல் ஆகிய செய்திகளைக் காண்கிறோம். பஞ்சங்கள், வெள்ளங்கள், தீவிபத்துகள் இவை மிக்கிருந்தமையும், இவற்றால் மக்கள் தொகை அழிந்தமையும், தப்பிப்பிழைத்தவர்கள் சொல்லொணாத் துயரத்துக்குட்பட்டமையும் இங்கு காணக்கிடக்கின்றன.

பழைய பொருளாதார அமைப்பு நசிந்து கொண்டிருந்த காலம் அது. காஷ்மீரிலும் இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் பழைய அமைப்பு மறைந்து கொண்டிருந்தது. மேற்கிலிருந்து கிரேக்க—உரோமானிய, பாரசீகப் பண்பாடுகளும் கிழக்கிலிருந்து மங்கோலியப் பண்பாடும் சந்திக்குமிடமாயிருந்தது காஷ்மீர். இருந்தாலும் அது பண்பாட்டுத் துறையில் பெருமளவில் இந்தியாவின் ஒரு பகுதியாகவும், இந்தோ ஆரிய மரபுப் பண்புகளின் வாரிசாகவும் இருந்து வந்திருக்கிறது. பொருளாதார அமைப்பு சீர்குலைந்த போது அரசியலமைப்பும் சீர்குலைந்து வலியற்றதாகியது. அது உள்நாட்டுக் குழப்பத்துக்கும் வெளிநாட்டுத் தாக்குதலுக்கும் எளிதாக இரையானது. பழைய இந்தோ ஆரிய இலட்சியங்கள் ஒவ்வொரு சமயம் மின்னல்போல் பளிச்சிடுகின்றன; ஆனால் அவை மாறிவிட்ட சூழ்நிலைக்குப் பொருந்தவில்லை. போர் வீரர்கள் அங்குமிங்கும் அணிவகுத்துப் போகிறார்கள்; மக்களைப் பெரும் இன்னலுக்குள்ளாக்குகிறார்கள். மக்கள் கிளர்ச்சிகள் நிகழ்கின்றன, கல்ஹணர் 'உள்நாட்டுக் கலகங்களில் திளைக்கும் நாடு' என்று காஷ்மீரை வருணிக்கின்றார். இராணுவத் தளபதிகளும் சாகசப் பிரியர்களும் இக்கலகங்களைத் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் . . .''

இரஞ்சித் சீதாராம் பண்டிட் தன் மொழிபெயர்ப்பின்மூலம் இராஜதரங்கிணிக்கு உருவம் கொடுக்கும்வரை அதன் கையெழுத்துப் படியின் வரலாறு நினைவுகூரத்தக்கது. கல்ஹணர் தன் காவியத்தின் துவக்கத்திலும் இறுதியிலும் காவியம் இயற்றப்பட்ட காலத்தைக் குறிப்பிட்டிருப்பதால், காவியத்தில் பிறரால் மாற்றங்கள் நேர வாய்ப்பில்லை. இருந்தாலும் காவியத்தில் உள்ள தவறுகளும் யாப்புப் பிழைகளும் கல்ஹணர் தம் காவியத்தைச் சரியாகத் திருத்தவில்லை என்பதைத் தெரிவிக்கின்றன. காவியத்தின் கடைசி அறுநூறு செய்யுட்களில் உள்ள பொருளற்ற பல பகுதிகளும் வேறு குறைகளும் இந்த உண்மையைப் புலப்படுத்துகின்றன.

குறைகள் எப்படியிருப்பினும் காஷ்மீரத்தின் மிகத் தொன்மையான, முழுமையான வரலாறு என்ற முறையில் இராஜதரங்கிணி பிற்கால வரலாற்று ஆசிரியர்களிடம் கவர்ச்சியை எழுப்ப வல்லதாக இருந்தது. காஷ்மீர் சுல்தான் ஜைனுல் அபேதினின் (கி.பி. 1421–72) ஆணைப்படி இதன் ஒரு பகுதி முதன் முதலில் பாரசீக மொழியில் பெயர்க்கப்பட்டது. இதன் பெயர் 'பஹ்ர்--உல்—அஸ்மார்' (கதைக் கடல்). பேரரசர் அக்பர் காஷ்மீரத்தை தன் நாட்டுடன் இணைத்துக் கொண்ட பிறகு கி.பி. 1594இல் இந்த மொழிபெயர்ப்பை நிறைவு செய்யுமாறு அப்துல் காதர் ஆல்—பாதர்யுனிக்கு ஆணையிட்டார். தன் 'ஆயின்—இ—அக்பரி'யில் காஷ்மீரத்தின் வரலாற்றைச் சுருக்கமாகச் சேர்த்துக்கொண்ட அபுல் ஃபஸல் அதற்கு ஆதாரமாகக் கல்ஹணரைக் குறிப்பிடுகிறார். பேரரசர் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1617இல் மாலிக் ஹைதர் பாரசீக மொழியில் இராஜதரங்கிணியைச் சுருக்கமாக மொழிபெயர்த்தார். டாக்டர் பிரான்சிஸ் பெர்னியர் (கி.பி. 1665) தன் 'இந்தியாவின் சுவர்க்கம்' என்ற நூலில் இம்மொழிபெயர்ப்பைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு நூற்றாண்டுக்குப்பின் பீஃபன்தாலர் பாதிரியார் இம்மொழிபெயர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஐரோப்பாவில் வடமொழி ஆராய்ச்சியில் முன்னோடியான சர் வில்லியம் ஜோன்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில்[2] 'ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ்' என்ற ஆய்விதழில், தான் ''காஷ்மீரத்தின் வடமொழி நூல் ஆதாரங்களைக் கொண்டு இந்தியாவின் வரலாற்றை'' எழுதப்போவதாகக் கூறினார். ஆனால் இந்த ஆதாரங்களைச் சேகரிக்கும் வரையில் அவர் உயிர் வாழவில்லை. கி.பி. 1805இல் கோல்ப்ருக்குக்கு இராஜதரங்கிணியின் நிறைவு

---

[2] 'ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ்', கல்கத்தா, 1825, தொகுதி XV.

பெருத ஒருபடி கிடைத்தது. ஆனால் அதைப்பற்றிய அவரது குறிப்பு கி.பி. 1825ஆம் ஆண்டில் தான் வெளிவந்தது.

கி.பி. 1823இல் அரசர் இரஞ்சித் சிங்கின் அனுமதியுடன் ஸ்ரீநகருக்குச் சென்ற மூர்க்ராஃப்ட் என்பவருக்கு இன்னும் நல்ல படி ஒன்று கிடைத்தது. அவர் சாரதா எழுத்துப் படியிலிருந்து ஒரு தேவ நாகரி எழுத்துப் படி தயாரிக்கச் செய்தார். இந்தப் படி கி.பி. 1835ஆம் ஆண்டு 'ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால்' பிரசுரித்த 'இராஜதரங்கிணி'ப் பதிப்புக்கு அடிப்படையாக இருந்தது. ''இந்தப் படியே காஷ்மீரத்தில் கிடைத்த எல்லாப் படிகளிலும் மிகவும் நம்பகமானது'' என்கிறார் ஸ்டெய்ன். எனினும் சாரதாப் படியிலிருந்து தேவ நாகரியில் படி எடுப்பதில் சில தவறுகள் நேர்ந்துவிட்டன. காஷ்மீரின் மரபு நிலை பற்றியும் நில அமைப்புப் பற்றியும் சரியாக அறியாத கல்கத்தா அறிஞர்கள் இந்தப் படியின் பாடத்தில் தங்கள் மனம் போன வாக்கில் மாற்றங்கள் செய்துவிட்டார்கள்.

இதற்குச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் டாக்டர் ஹொரேஸ் ஹேமான் வில்சன் ''காஷ்மீரத்தின் இந்து வரலாறு பற்றிய கட்டுரை''யை எழுதிப் புதிய தடத்தைச் சமைத்தார். இதில் 'இராஜதரங்கிணி'யின் முதல் ஆறு காண்டங்களின் ஆய்வுச் சுருக்கம் இடம்பெற்றது. இதன் மூலமாகத்தான் ஐரோப்பிய அறிஞர்கள் முதன்முதலாக இந்தக் காவியத்தைப்பற்றி அறிந்து கொண்டார்கள். டாக்டர் வில்சன் 'சொல்லுக்குச் சொல்' மொழிபெயர்க்கவில்லை. அவர் நிறைவு பெறுதிருந்த மூன்று தேவ நாகரி எழுத்துப் படிகளிலிருந்து செய்திகளைத் தேர்ந்தெடுத்துத் தன் மொழிபெயர்ப்பைச் செய்தார்.

மூல வடமொழிக் காவியத்தின் முழுமையான முதல் மொழி பெயர்ப்பு ஃபிரஞ்சு மொழியில் கி. பி. 1852ஆம் ஆண்டு பாரிஸ் நகரத்தின் மதிப்பு வாய்ந்த 'சொஸைட்டி ஏஷியாடிக்' நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்டது. மொழிபெயர்த்தவர் அப்போது கல்கத்தா வடமொழிக் கல்லூரியின் தலைவராக இருந்த ஏ. டிராயர் என்ற பிரஞ்சுக்காரரர். ஆனால் இவரும் 1835இல் 'ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால்' பயன்படுத்திய எழுத்துப் படியையே பயன்படுத்தினர்.

ஜோகேஷ் சந்திர தத் என்பவரும் இந்தப் படியைப் பயன்படுத்தி, '**காஷ்மீர மன்னர்கள்: கல்ஹண பண்டிதரின் வடமொழிக் காவியமான இராஜதரங்கிணியின் மொழிபெயர்ப்பு**' என்ற தலைப்பில் ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு செய்தார். இது கல்கத்தாவில் 1879—87இல் வெளியாயிற்று. இப் பதிப்பு சில முறைகளில்

டிராயர் பதிப்பைவிடச் சிறந்திருந்தாலும் 'ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால்' பதிப்பின் குறைகள் இதிலும் இருந்தன. மேலும் மொழிபெயர்ப்பாளரால் காஷ்மீரத்தின் நில அமைப்பு, மரபு முறைகள், பண்டைய நிறுவனங்கள் இவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலைமையும் இதில் புலனாயிற்று.

இக் காவியத்தில் அறிஞர்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறையவில்லை. டோக்ரா ஆட்சி ஏற்பட்ட பிறகு காஷ்மீருக்கு வருகை புரிந்த ஏ. கன்னிங்ஹாம் இராஜதரங்கிணியின் வரலாற்று அமைப்புப் பற்றிய பல்வேறு குறிப்புகளையும் அவை சம்பந்தமாகப் பழைய நாணயங்களில் கிடைக்கும் செய்திகளையும் தெளிவுபடுத்தினார். அவர் கல்ஹணர் பயன்படுத்திய வரலாற்று நிகழ்ச்சி பற்றிய கணக்கை விளக்கியதோடு, காவியத்தில் குறிப்பிடப்பட்ட எல்லா அரசர்கள் வாழ்ந்த காலத்தையும் பெரும்பாலும் சரியாகவே கணக்கிட்டுச் சொன்னார். அதே சமயத்தில் கல்ஹணர் வருணித்துள்ள முக்கிய நிகழ்ச்சிகளை நல்ல முறையில் புரிந்துகொள்ள ஜெனரல் (அப்போது 'காப்டன்') கன்னிங்ஹாம் சேகரித்துத் தந்துள்ள நாணயங்களின்[3] சான்று உதவுகிறது. இந்துக் காலத்தையப் பழங் கட்டிட நினைவுச் சின்னங்களைப் பற்றிய இவரது ஆராய்ச்சி காஷ்மீரின் அக்காலத்து நில அமைப்பை விளக்க உதவும் பல முக்கியமான இடங்களைத் திட்டவட்டமாக இனங்கண்டு கொள்ளவும் இந்தச் 'சிப்பாய்—அறிஞரு'க்கு உதவியது.

பேராசிரியர் லாஸேன் ஜெர்மன் மொழியில் 'இண்டிஷே ஆல்டர்டும்ஸ் குண்டே' (இந்தியாவின் தொல்கலைகள்) என்ற தலைப்பில் எழுதிய புகழ்பெற்ற கலைக் களஞ்சியத்தில் இராஜதரங்கிணியின் வரலாற்று உள்ளடக்கத்தைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி இடம் பெற்று, இதன் மூலம் கல்ஹணரின் காவியம் மேலை நாட்டினரின் கவனத்தை ஈர்த்தது. இருந்தாலும் பேராசிரியர் வெளியிட்ட விவரங்களில், முன்னதாக டாக்டர் வில்சனும் கன்னிங்ஹாமும் சேகரித்த செய்திகளைத் தவிரப் புதிதாக எதுவும் இல்லை.

பம்பாய் கல்வித்துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஜி. ப்யூலர் கி.பி. 1875இல் காஷ்மீர் சென்று வந்தபின் இராஜதரங்கிணியை முழுமையாக புரிந்துகொள்ளக் காஷ்மீரின் நில அமைப்பைச் சரிவரத் தெரிந்துகொள்வது அவசியமென்பதைத் தன் புகழ்பெற்ற 'அறிக்கை'யில் வலியுறுத்தியதோடு இத்தகைய அறிமுகத்துக்கான சரியான வழிமுறைகளையும் சுட்டிக்காட்டினார். இந்தத் தொல்

[3] இந்தச் சான்றும் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட குறிப்புகளும் இந்த நூற்றாண்டில் மொழிபெயர்ப்பாளர்களுக்கும் வரலாற்று ஆசிரியர்களுக்கும் வழிகாட்டி வருகின்றன.

பொருளாராய்ச்சியாளரின் காஷ்மீர் சுற்றுப்பயணம் வடமொழியின் மொழியியலுக்கே முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. இராஜதரங்கிணியைப் புரிந்துகொள்ள உதவும் நீலமத புராணம், பிற்கால வடமொழி வரலாறுகள், மற்ற காஷ்மீர மூலபாடங்கள் முதலிய வேறு பல அடிப்படை நூல்களையும் பேராசிரியர் ப்யூலர் குறிப்பிட்டார். காஷ்மீரின் மூலப் படிகள் தேவநாகரிப் படிகளைவிட நம்பகமானவை என்பதை அவர் மெய்ப்பித்து இராஜதரங்கிணியின் உண்மையான மூல பாடத்தைச் சிறந்த முறையில் அமைத்துக்கொள்ள உதவினர். காஷ்மீரின் வரலாற்றையும் இந்தியாவின் மற்ற பகுதிகளின் வரலாற்றையும் அறிந்துகொள்ளக் கல்ஹணரின் காவியத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை அவரது 'அறிக்கை' விளக்குகிறது. அவரளித்த உற்சாகத்தின் விளைவாக இ. ஹல்ட்ஜெக் கி. பி. 1885ஆம் ஆண்டு இண்டியன் ஆண்டிக்வரியின் 18, 19ஆம் தொகுப்புகளில் இராஜதரங்கிணி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிப் பத்தாண்டுகள் வரையில் ஒவ்வொருவரும் இராஜதரங்கிணியின் சில குறிப்பிட்ட பகுதிகளை விளக்கும் பாங்கில் இத்தகைய பல கட்டுரைகளை வடமொழி வல்லுநர்களான மேலைநாட்டு அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் எழுதினர்கள். ஏறக்குறைய இதே காலத்தில் எம். ஏ. ஸ்டெய்ன் என்ற அறிஞர் தொல்பொருள் ஆராய்ச்சிக்காகக் காஷ்மீரத்தில் பல சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார். பதினேழாம் நூற்றுண்டின் மூன்றுவது கால் நூற்றுண்டுப் பகுதியில் பண்டித இரஜ்ஞக இரத்தினகாந்தர் என்ற ஒரு காஷ்மீர அறிஞரால் தயாரிக்கப்பட்ட ஓர் அட்டவணைத் தொகுப்பு இவர் கவனத்துக்கு வந்தது. இத் தொகுப்பில் பண்டையோரால் செய்யப்பெற்ற திருத்தங்களும் விளக்கங்களும் அடங்கியிருந்தன. கல்ஹணரின் காவியத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்காக ஸ்டெய்ன் ஸ்ரீநகரத்தைச் சேர்ந்த பண்டித கோவிந்த் கௌல் அவர்களின் உதவியுடன் பழைய வடமொழிப் பிரதிகளை ஆராய்ந்ததுமன்றி, இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து மலைத் தடுப்புகளால் பிரிக்கப்பட்ட காஷ்மீரப் பள்ளத்தாக்கில் தனித் தன்மை பெற்று வளர்ந்து விளங்கிய மரபுப் பண்புகளையும் ஆராய்ந்து அறிந்துகொண்டார். அவரால் தொகுக்கப்பட்ட வடமொழிப் பதிப்பு 1892ஆம் ஆண்டு காஷ்மீர் அரசின் ஆதரவில் பம்பாய் கல்விக் கழக அச்சகத்தால் வெளியிடப்பட்டது.

இதே சமயத்தில் காஷ்மீரைச் சேர்ந்த பண்டித துர்க்கா பிரசாத் தயாரித்த பதிப்பு பம்பாய் நிர்ணய சாகர அச்சகத்தால்

வெளியிடப்பட்டது. ஸ்டெய்னின் ஆங்கில உரைநடை மொழி பெயர்ப்பு கி. பி. 1900இல் வெளிவந்தது. ஸ்டெய்ன் பேராசிரியர் ப்யூலரின் மாதிரி மொழிபெயர்ப்பைப் பின்பற்றினார். மொழி பெயர்ப்பாளன் மூலத்தின் உள்ளடக்கத்தைச் சிதைக்காமல் தருவது மட்டுமன்றி, தன் மொழிபெயர்ப்புப் படைப்பின் அமைப்பையும் அதன் உத்திகளையும் விளக்க வாய்ப்புக் கொண்டதாக ஸ்டெய்னின் நூல் அமைந்திருந்தது. இரண்டு பகுதிகளைக் கொண்டதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான இப் பதிப்பு பல விளக்கங்கள் மூலம் காவியத்தின் உள்ளடக்கத்தை முதன் முதலாகத் தெளிவாக்கியது.

இதற்குப் பின் வெளிவந்த முக்கியமான மொழிபெயர்ப்பு நூல் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட ஆர். எஸ். பண்டிட்டின் படைப்பாகும். இவர் பெரும்பாலும் ஸ்டெய்ன் பின்பற்றிய வட மொழி மூலத்தையே பயன்படுத்தியிருக்கிறார்; பண்டித துர்க்கா பிரசாதின் பதிப்பையும் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். ஸ்டெய்ன் கையாண்ட மொழிபெயர்ப்பு முறை 'மூலக் காவியத் தைப் படிக்க இயலாத வாசகர்களுக்கு அதன் இலக்கியத் தரத் தைச் சரியாக உணர்த்தவில்லை' என்பது ஆர். எஸ். பண்டிட்டின் கருத்து. தன் மொழிபெயர்ப்பில் ''மூலப் படியின் குறைகள் இருந்தாலும், அது மூலத்தைச் சரியாகப் பிரதிபலிக்கும் முழுமை யான மொழிபெயர்ப்பு' என்று அவர் கருதினார்.

நேருவின் முன்னுரையிலிருந்து ஏற்கெனவே மேற்கோள் காட்டியுள்ளோம். இது டேராடூன் சிறையில் 1934ஆம் ஆண்டு ஜூன் மாதம் எழுதப்பட்டது. அதற்குச் சுமார் அரை நூற் றாண்டுக்கு முன், எஸ். பி. பண்டிட் ''இதுவரை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நூல்களில் இராஜதரங்கிணி ஒன்றுதான் வரலாறாகக் கருதப்படத்தக்கது'' என்று கூறியிருப்பதை நேரு தன் முன்னுரையில் குறிப்பிட்டு, ''இத்தகைய நூல் பண்டைய இந்திய வரலாற்றையும் பண்பாட்டையும் பயில்பவனுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது'' என்கிறார். ஆர். எஸ். பண்டிட்டின் மொழிபெயர்ப்பைப் பற்றி அவர் கூறுகிறார்: ''இந்த நூலில் 'சொல்லுக்குச் சொல்' மொழிபெயர்ப்பு கையாளப்பட்டிருக்கிறது. இம்முறையால் மொழியின் நயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இத்தகைய நூலில் மூலப் படைப்பை அப்படியே சித்திரிப்பது அவசியமாதலால் இந்த மொழிபெயர்ப்பு முறையே சரியானதென்று எண்ணுகிறேன்.'' இம்மொழிபெயர்ப்பிலுள்ள குறிப்புகளும் அட்டவணைகளும் ''காஷ்மீரின் வரலாற்றில் வேத காலம், புத்தகாலம், இந்துக்களின் காலம் இவற்றின் பங்கை

விளக்குகின்றன.''[4] இந்த நூல் கல்விச் சிறப்பில் ஸ்டெய்னின் நூலுக்கு ஒப்பானது. இதன் மதிப்பு நெடுங்காலமாகத் தொடர்ந்து நிலைத்திருக்கிறது.

கல்ஹணரின் ஒரே இலக்கியப் படைப்பாக நமக்குக் கிடைத்துள்ள இராஜதரங்கிணி சிறந்த இலக்கியப் படைப்பு என்ற முறையிலும் வரலாறு என்ற முறையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் மூலம் கல்ஹணர் இந்திய இலக்கியத்தில் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறார். அவருடைய வாழ்க்கையையும் பணியையும் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. இப்போது கிடைக்கும் சான்றுகளிலிருந்து அவருடைய வாழ்க்கையையும் காலத்தையும் பற்றிய செய்திகளை சேகரித்து இந்திய இலக்கியத்துக்கு அவர் ஆற்றியுள்ள சேவையை மதிப்பிடப் பின்வரும் பக்கங்களில் முயற்சி செய்யப்படுகிறது.

---

[4] சூஃபி, ஜி. எம். டி. 'காஷ்ர்', நூல்முகம்.

கல்ஹணரும் அவர் குடும்பமும்

கல்ஹணரின் வாழ்க்கை வரலாறுபற்றிய மிகக் குறைவான செய்திகளே கிடைக்கின்றன. இந்நிலை அவர் காலத்திலும் அவருக்கு முன்னரும் வாழ்ந்த பல இலக்கிய ஆசிரியர்கட்கும் பொருந்தும். பண்டைய காஷ்மீரத்தின் வரலாற்றை நமக்கு அளித்துள்ள கல்ஹணரின் வாழ்க்கை வரலாறு கிடைக்காதது கழிவிரக்கத்துக் குரியது. ஆயினும் கல்ஹணரைப்பற்றிய சில செய்திகள் அவருடைய காவியத்திலிருந்தே பல ஆராய்ச்சியாளர்களால் பொறுமையாகச் சேகரிக்கப்பட்டுள்ளன. மகாகவி காளிதாசரைப்பற்றி ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல கட்டுக் கதைகள் வழங்கி வருகின்றன. ஆனால் காளிதாசரைப்பற்றி நமக்குக் கிடைக்கும் செய்திகளைவிட அதிகமான செய்திகள் கல்ஹணரைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ளன.

இராஜதரங்கிணி எட்டுத் தரங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ('தரங்கம்' என்றால் 'அலை' என்று பொருள்.) ஒவ்வொரு தரங்கத்தின் முடிவிலும் ''காஷ்மீரத்தின் அமைச்சரான புகழ் வாய்ந்த பிரபு சம்பகரின் புதல்வர் கல்ஹணரால்'' அந்தத் தரங்கம் இயற்றப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கல்ஹணரின் தந்தை சம்பகர் ஒரு காஷ்மீரச் சீமான். அவர் அதிர்ஷ்டங்கெட்ட காஷ்மீர அரசன் ஹர்ஷனின் 'துவாரபதி' அல்லது எல்லைப்படைகளின் தளபதியாக இருந்திருக்கிறார். கல்ஹணர் தன் காவியத்தின் முன்னுரையைக் கி.பி. 1148—49இல் தொடங்கி மறு ஆண்டில் காவியத்தை முடித்திருக்கிறார். இந்தக் காலக் குறிப்பிலிருந்தும், சம்பகர் ஹர்ஷனின் முக்கிய அதிகாரிகளில் ஒருவராக அடிக்கடி குறிப்பிடப்படுவதிலிருந்தும் சம்பகருக்கும் கல்ஹணருக்குமிடையேயுள்ள தந்தை—மகன் உறவு உறுதிப்படுகிறது. சம்பகர் பெருமதிப்புடன் குறிப்பிடப்படுகிறார்; நாட்டின் எல்லையில் தாதர்கள் செய்த கலகத்தை அடக்கியதற்காகவும், ஹர்ஷனின் வீழ்ச்சிவரையில் அவனிடம் விசுவாசமாக இருந்த ஒரு சிலரில் அவரும் ஒருவர் என்பதற்காகவும் பாராட்டப்படுகிறார். அரசனுக்குப் பெருங்கேடு நேர்ந்த அந்த இறுதி நேரத்தில் அவர் அவனுக்கருகில் இல்லை. அதற்கு முன்பே அரசன் ஏதோ ஒரு சிறப்புப்பணிக்காக அவரை வேறோரிடத்துக்கு அனுப்பியிருந்தான். அவன் தன் தலைநகரை விட்டு ஓடுவதற்குமுன் அவனுக்கும் சம்பகருக்குமிடையே நடக்கும்

உரையாடலிலும் அரசனின் சோக மரணம்பற்றிய வருணனைகளி லும் தொனிக்கும் உண்மைத் தன்மை சம்பகருக்கும் கல்ஹணருக்கு மிடையேயுள்ள உறவைத் தெளிவாக்குகிறது. ஆனால் அரசனிடம் சம்பகருக்கு இருந்த பரிவு கல்ஹணருக்கு இல்லை. சம்பகர் கிட்டத் தட்ட கி.பி. 1136ஆம் ஆண்டில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

இக்காவியத்தில் சம்பகரின் தம்பி கனகரைப்பற்றியும் கூறப் பட்டுள்ளது. ஹர்ஷனுக்கு இசையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. கனகர் அரசனிடமே இசைப்பயிற்சி பெற்றார்; இதன்மூலம் அரசனின் அன்பையும் அடைந்தார். இந்த அன்பின் அடையாள மாக அவர் அரசனிடமிருந்து ஓர் இலட்சம் பொன் நாணயங்களைப் பரிசாகப் பெற்றார். இப்பரிசின் உயர்வே கல்ஹணரின் குடும்பம் மிகவும் மதிப்பு வாய்ந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. கல்ஹணர் தன் வாழ்க்கையை நடத்துவதற்கு என்றுமே உழைத்த தில்லை என்று நூலிலிருந்து நாம் பெறும் ஊகத்துடன் இந்தச் செய்தி பொருந்துகிறது. கல்ஹணர் தம் வாழ்க்கையில் வறுமையை உணர்ந்ததில்லை.

கனகர் கடைசிவரையில் தன் புரவலனை ஹர்ஷனுக்கு உண்மையாக இருந்ததாகக் காவியம் கூறுகிறது. அவர் ஹர்ஷனின் மறைவுக்குப்பின் வாராணசிக்குச் சென்று தன் இறுதிக் காலத்தை அமைதியிலும் தியானத்திலும் செலவிட்டார். கல்ஹணர் காலத் தில் சம்பகர் மிகவும் புகழ்வாய்ந்தவராக இருந்ததால் கல்ஹணர் அவரை எவ்வித முன்னறிவிப்புமின்றித் தன் காவியத்தில் (VII, 954) அறிமுகப்படுத்துவது மேலும் கல்ஹணரைத் தம் தந்தை யுடன் அடையாளங்காட்டுவதோடன்றி, தம்மைத் தம் காலத்த வருடன் அறிமுகம் செய்வதோ, தெரிந்த ஒருவரைப்பற்றி அதிக மான செய்திகளைத் தருவதோ தேவையற்றது என்ற அவருடைய எளிமையான போக்கையும் குறிப்பாகத் தெரிவிக்கிறது. சம்பகர் அறிமுகப்படுத்தப்படும் பொருத்தமான செய்யுள் இதுதான்: ''சம்பகர் ஆண்டுமுழுதும் தானீட்டிய செல்வத்தை ஒவ்வொரு ஆண்டிலும் ஏழு நாட்கள் நந்தி க்ஷேத்திரத்தில் தங்கி நல்ல பணி களில் செலவிட்டார்.'' சம்பகர் நந்தி க்ஷேத்திரத்தைச் சார்ந்த புண்ணியத் தலங்களிடம் பக்தி கொண்டவர். கல்ஹணர் சிறு வயதில் தம் தந்தையுடன் அந்தத் தலங்களுக்கு யாத்திரை சென்றி ருந்தார் என்பது இராஜதரங்கிணியில் அவ்விடங்களைப்பற்றிய விளக்க மான வருணனைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, அவர் அந்தணர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர் தன் காவி யத்தில் காட்டும் வடமொழிப் புலமையும் இதை உறுதிப்படுத்து கிறது. காரணம், வடமொழியில் புலமை பெற்றிருப்பது அந்தணர் களின் வலிவான கூறாக இருந்தது. (மூன்று நூற்றாண்டுகளுக்குப்

பின் வந்த ஜோனராஜர் கல்ஹணரை 'துவிஜர்'—இரு பிறப்புடையவர் அதாவது அந்தணர்—என்று குறிப்பிட்டுள்ளார்.)

இக்காவியத்திலிருந்து கல்ஹணர் பிறந்த ஊரை மறைமுகமாக ஊகிக்கலாம். அதன் பெயர் பரிகாசபுரம். அங்கிருந்த ஒரு மிகப் பெரிய புத்தர் சிலையை ஹர்ஷன் ஏதோ ஒரு வெறியில் உடைக்க முற்பட்டபோது கடைசி நேரத்தில் கனகர் அவனைத் தடுத்துச் சிலையைக் காப்பாற்றிய வரலாறு நூலில் காணப்படுகிறது. நூலில் காணப்படும் வருணனைப் போக்கிலிருந்து கனகர் பௌத்த வழிபாட்டு முறையைப் பயின்றவர் என்று தெரிகிறது. பௌத்த சமயத்திடம் கல்ஹணர் காட்டிய சகிப்புத் தன்மையின் காரணமும் புரிகிறது. இக்காவியத்தில் பரிகாசபுரத்தின் புனிதக் கட்டடங்களும் ஊரின் நில அமைப்பும் விவரமாக வருணிக்கப்படுவதிலிருந்து அதுவே கல்ஹணரின் குடும்பத்தாரின் பூர்வீக ஊர் என்று தெரிகிறது.

கல்ஹணரின் குடும்பப் பாரம்பரியம் மிகப் பெருமை வாய்ந்தது. அவருடைய தந்தையின் வாழ்க்கையும் குணநலன்களும் கல்ஹணரிடம் ஆழ்ந்த தாக்கத்தை விளைவித்தன. அவர் தம் குடும்பச் சிறப்பை மிகவும் மதித்தார். அவரும் அவருடைய குடும்பத்தினரும் அந்தண வகுப்பில் பிறந்து சைவ சமயத்தைக் கடைப்பிடித்தாலும் அவர்கள் பௌத்த சமயத்திடம் சகிப்புத்தன்மையுடனிருந்தனர். அந்தணர் என்ற முறையில் கல்ஹணருக்கு சைவ சமயத்தின் மேல்நிலைத் தத்துவங்களிலும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட தாந்திரீகத் தத்துவங்களிலும் பழக்கமிருந்தது. காஷ்மீரத்தில் சைவ சமயத்தின் முக்கிய ஆசாரியர்களில் ஒருவராகத் திகழ்ந்த பட்டகாட்டரைக் கல்ஹணர் மிகவும் மரியாதையுடன் தம் காவியத்தில் குறிப்பிடுவதிலிருந்து இதனை ஊகிக்க முடிகிறது. ''தான் அணிந்துள்ள நாகங்களின் முடியிலுள்ள இரத்தினங்களின் சோதியில் பிரகாசிக்கும்'' பரமசிவனின் அர்த்தநாரீசுவர (மங்கையொரு பாக) வடிவ வணக்கத்துடன் தம் காவியத்தைத் தொடங்குகிறார் கல்ஹணர். அவரது காலத்தில் சைவ சமயம் பரவியிருந்தது என்பதை உறுதிப்படுத்தும் பாங்கில் இந்த வணக்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தும் கல்ஹணர் தன் காவியம் முழுவதும் பௌத்த சமயத்திடம் நேசப் போக்கைக் காட்டுகிறார். அசோகர் காலத்திலிருந்து கல்ஹணர் காலம்வரை நாட்டில் பௌத்த விஹாரங்களும்[1]

[1] கி.பி. 759இல் காஷ்மீருக்கு வந்த சீனப்பயணி ஔ—காங் காஷ்மீரில் முன்னூறு பௌத்த மடங்கள் இருப்பதைக் கண்டார்.

ஸ்தூபங்களும் கட்டிய மன்னர்கள் இக்காவியத்தில் போற்றப்படுகிறார்கள். தனி மனிதர்களின் இத்தகைய செயல்களும் இதே கவனத்துடன் காவியத்தில் இடம்பெறுகின்றன. ''கல்ஹணர் தம் காவியத்தில் புத்தரையும் போதி சத்துவர்களையும் எல்லா உயிர்களுக்கும் ஆறுதல் அளிப்பவர்களாகவும், பழுதற்ற அறமும் மேன்மையான உணர்வுகளுமே உருவானவர்களாகவும் அடிக்கடி வருணித்துப் பாராட்டத் தயங்கவில்லை. புத்தரும் போதி சத்துவர்களும் பாவிகளிடங்கூடப் பொறுமையும் கருணையும் காட்டுபவர்களாக, தீமைக் கலப்பற்ற நன்மையே உருவெடுத்தவர்களாகக் கல்ஹணரால் வருணிக்கப்படுகிறார்கள்'' என்கிறார்[2] ஸ்டெய்ன். பௌத்த சமய மரபுகள், கலைச் சொற்கள் இவற்றில் கல்ஹணர் நல்ல அறிமுகம் பெற்றிருந்தது அவரது நூலிலிருந்து தெரிகிறது. காஷ்மீரப்பள்ளத்தாக்கில் சைவ வழிபாட்டு முறைக்கு அடிப்படை நூலான நீலமதபுராணத்தில் புத்தரின் பிறந்தநாளன்று அவரது சிலைகள் பூசிக்கப்பட வேண்டுமென்றும் பௌத்த மடங்கள் அலங்கரிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய நாட்டில் பிறந்த கல்ஹணர் பௌத்த மதத்தின்பால் சகிப்புத்தன்மை காட்டியதில் வியப்பில்லை. ஆனால் அவரது சகிப்புத்தன்மை இத்துடன் நின்றுவிடவில்லை. நடுநிலை தவறாத தன்னுரிமையுள்ள வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் அவரது சகிப்புத்தன்மை சிலை வழிபாட்டை எதிர்த்தவர்களுக்கும் சிலைகளை உடைத்தவர்களுக்கும் கூடக் காட்டப்பட்டது.

'வினை' (கர்மா)பற்றிக் கல்ஹணரின் நம்பிக்கை பௌத்தர்களின் நம்பிக்கையை ஒத்திருந்தது. இந்த நம்பிக்கை இக்காவியத்தில் முக்கிய இடம் பெறுகிறது. விதியைப்பற்றிய குறிப்பையும் பல இடங்களில் காண்கிறோம். இராஜதரங்கிணியில் மனிதச் செயல்களுக்குக் காரணமான ஆசை, உணர்ச்சி வெறி, குற்ற உணர்வு இவை செயற்பட்டு ஒன்றையொன்று அழித்துக்கொள்வதைக் காண்கிறோம். ஆயினும் இந்தக் குழப்பத்துக்கிடையிலும் ஒவ்வொரு கால கட்டத்தின் இலட்சியத்தையும் கல்ஹணர் இனங் கண்டு கொள்கிறார். அவர் ஒவ்வொரு தரங்கத்தின் துவக்கச் செய்யுளிலும் வாழ்க்கைப் புதிரின் உள்ளார்ந்த தத்துவம்பற்றிய தன் கருத்தை வெளியிடுகிறார். இந்தக் கருத்து அந்தந்தத் தரங்கத்தின் கதைப் போக்கில் இழையோடுகிறது. இதுபோலவே கல்ஹணர் இயற்கையின் எழிலை வருணிக்கும்போதும் பொதுப்படையான தத்துவங்களைக் கூறுகிறார். ஒவ்வொரு கல்பத்தின் முடிவிலும் பிரளயம் ஏற்படும் என்ற நம்பிக்கை அவரது நூலில் பல இடங்களில் வெளியாகிறது.

---

[2] ஸ்டெய்ன், எம்.ஏ., 'கல்ஹணரின் இராஜதரங்கிணி' (மொழிபெயர்ப்பு தொகுதி I, நூல்முகம்).

கல்ஹணர் சமயத்துறையில் சகிப்புத்தன்மை கொண்டிருந்தது மட்டுமன்றி, குறுகிய கொள்கை வெறியோ நாட்டுப்பற்று வெறியோ அற்றவராகவுமிருந்தார். காஷ்மீரப் பள்ளத்தாக்கில் 'திரிக்கிராமி' என்ற இடத்தில் தங்கள் அரசன் கபடமாகக் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் பொருட்டு, கடுமையான பயணத்தை மேற்கொண்டு காஷ்மீரத்துக்கு வந்த வங்காள வீரர்களைப் பாராட்டியதில் கல்ஹணரின் தனித் தன்மை தெரிகிறது. உயிர் துறந்த கௌட (வங்காள) நாட்டு வீரர்களை அவர் இவ்வாறு பாராட்டுகிறார்: 'அவ்வீரர்கள் தங்கள் இரத்தத்தை மழையாகப் பொழிந்து தங்கள் இராஜ பக்தியை ஒளிரச் செய்தார்கள். அவர்களுடைய தியாகத்தால் பூமியும் புனிதமாயிற்று.'

ஆனால் கல்ஹணர் குருட்டுத்தனமாக வீர வழிபாடு செய்பவரல்லர். அவருடைய காவியத்தில் மிகையாகப் புகழப்பட்ட காவியத் தலைவனோ காவியத் தலைவியோ இல்லை. அவரிடம் சாதி வெறியும் இல்லை. அவர் சமய குருமார் வகுப்பைச் சேர்ந்தவர்களையும் கண்டித்திருக்கிறார். அவர்கள் அரசியலில் தலையிடுவதை அவர் வெறுத்தார். சாதியோ குடிப்பிறப்போ ஒருவனை அரசாங்கப் பதவிக்கோ இராணுவப் பதவிக்கோ தகுதியாக்கிவிடாது என்பதை அவர் குறிப்பிடுகிறார். கீழ்ச் சாதியைச் சேர்ந்த தொம்பர்களும் மேல் சாதியினரான அந்தணர்களும் படைவீரர்களாகச் சேவை செய்தபின் தளபதிகளாகப் பதவி உயர்வு பெறமுடியும். ஒரு க்ஷத்திரிய அரசன் உரோஹதக்கைச் சேர்ந்த ஒரு வைசியப் பெண்ணை மணந்துகொண்ட செய்தியும் இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. பௌத்த யுகத்தில் தீண்டாமையின் கடுமையும் குறைந்துவிட்டது. இந்தத் தாராள மனப்பான்மை காஷ்மீரில் இன்றும் தொடர்ந்து நீடித்து வருகிறது.

தன் குடும்பத்தின் உயர்நிலை காரணமாக அதிகார வர்க்கத்துடன் தொடர்பு கொண்டவராயினும் கல்ஹணர் அதிகாரிகளிடம் பாரபட்சம் காட்டவில்லை. அந்தண வகுப்பைச் சேர்ந்த காயஸ்தர்களின் குற்றங் குறைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார் அவர். கல்ஹணர் தம்மைப்பற்றி எதுவும் சொல்லிக்கொள்ளாத தன்னடக்கமுள்ளவராயினும் அவர் தம் காலத்துக் கல்வியில் தேர்ந்தவர் என்பதற்கு அவருடைய நூலில் பல சான்றுகள் உள்ளன. அவர் இரகுவம்சம், மேகதூதம் போன்ற காவியங்கள் மட்டுமன்றி இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களையும் நன்கு பயின்றிருந்தார். இந்நூல்களில் வரும் நிகழ்ச்சிகளை அவர் தம் காவியத்தில் சித்திரிக்கப்படும் நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டிருக்கிறார். தம் முன்னோரையும் சம காலத்தவரையும் போலவே கல்ஹணரும் மகாபாரதக் கதையையும் அதைச் சார்ந்த கற்பனைக் கதைகளையும்

உண்மை வரலாருகவே கருதினர். ஸ்டெய்ன் சொல்கிருர்: 'இதிகாசங்களில் வருணிக்கப்படும் நிகழ்ச்சிகள் ஓர் இந்தியனுக்கு சாதாரண வரலாற்று நிகழ்ச்சிகளைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் அவை வீரஞ்செறிந்த ஒரு காலத்தின் கவர்ச்சியோடு புனிதத் தன்மையும் வாய்ந்தவையாகும். ஆகவே கல்ஹணர் தன் காவியத்துக்கான கருவைத் தேர்ந்தெடுத்ததில் அவர் படித்த இதிகாசங்களின் தாக்கமும் செயற்பட்டது என்று ஊகிக்கலாம்.'[3]

காஷ்மீரம் மட்டுமன்றி இந்தியா முழுவதிலுமே இலக்கியத்திலும் வரலாற்றிலும் ஆழ்ந்த தாக்கத்தை உண்டாக்கிய கல்ஹணர் தம் சாதனைக்கு இன்றியமையாத இலக்கியப் பயிற்சியைப் பெற்றிருந்தார் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு. அவருடைய நூலில் அவருடைய சமகாலத்தவரும், அவருக்கு முந்தைய காலத்தவருமான கவிஞர்கள், அறிஞர்கள் இவர்களைப் பற்றிய குறிப்புகள் நிரம்ப உள்ளன. இவை இவரது பரந்த அறிவைக் காட்டுவதோடு வடமொழியின் வரலாற்றைப் பயில்பவர்களுக்கு மிகவும் உதவியாகவும் உள்ளன. கி. பி. பதினென்ரும் நூற்ருண்டின் எட்டாவது பத்தாண்டுகளில் காஷ்மீரக் கவி பில்ஹணரால் இயற்றப்பட்ட 'விக்கிரமாங்கதேவசரித'த்தைக் கல்ஹணர் பயின்றிருக்கிருர் என்று உறுதியாகக் கொள்ளலாம். கல்ஹணரின் காலத்தில் வாழ்ந்த கவி மங்கரின் 'ஸ்ரீகாந்தசரித'த்தில் கவி கல்யாணரைப் பற்றிய குறிப்பு கவனிக்கத்தக்கது. கல்யாணரின் கவித் திறமை பில்ஹணரின் கவிதையின் நயத்தைக் கண்ணுடி போல் பிரதிபலிப்பதாக மங்கர் சொல்கிருர். செவிவழிக் கட்டுக்கதைகளில் கல்யாணரின் ஆர்வத்தையும் அவர் குறிப்பிடுகிருர். மங்கர் குறிப்பிடும் கல்யாணர் கல்ஹணராகத்தானிருக்க வேண்டும். 'கல்ஹண, என்ற சொல்லே 'கல்யாண' என்ற வடமொழிச் சொல்லின் பிராக்கிருத உருவந்தான். ஸ்ரீகாந்தசரிதத்துக்குத் தான் எழுதிய உரையில் ஜோனராஜர் கல்ஹணருக்குக் கதைகளில் (அதாவது இதிகாசங்களில்) இருந்த ஆர்வத்தைக் குறிப்பிடுகிருர். எனவே, கல்ஹணரை பிராக்கிருத வடிவமான 'கல்ஹண' என்ற சொல்லிலிருந்து வந்த 'கல்யாண' (வடமொழி: மங்களகரம்) என்ற சொல்லோடு இனங்காண்டல் மேலும் கல்ஹணரின் புலமையையும் பரந்த நோக்கப் பின்னணியையும் நிலைநாட்டுகிறது.

இராஜதரங்கிணியிலிருந்து நாம் ஊகிக்க முடிகிற கல்ஹணரின் இயல்புகள் அவர் வாழ்ந்த சூழ்நிலையின் காரணமாக முக்கியத்துவம் பெறுகின்றன. அவரது சமகால நிகழ்ச்சிகளைப் பற்றிய

[3] ஸ்டெய்ன், எம். ஏ., 'கல்ஹணரின் இராஜதரங்கிணி', முன்னுரை.

அறிவும், தனித்தன்மை வாய்ந்த அரசியல் கருத்துகளும் பாராட்டுக் குரியன. இராணுவ நடவடிக்கைகளின் விவரங்களை அவர் மிகத் தெளிவாக வருணிப்பதிலிருந்து போர்க் கலையில் அவருடைய தேர்ச்சியும் புலனாகிறது. நாட்டின் நில அமைப்புப் பற்றி அவரது பரந்த அறிவு அவர் வசதியாக வாழ்ந்தவர் என்பதையும் பல இடங்களை நேரில் பார்த்தவர் என்பதையும் உணர்த்துகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் காலத்தைய மக்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றிய அவருடைய சுதந்திரமான கணிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

கல்ஹணரும் அவர் காலமும்

இராஜதரங்கிணியின் பெரும் பகுதி கல்ஹணரின் சமகால நிகழ்ச்சிகளையே விவரிக்கிறது. அவர் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தம் கவனத்துக்கு எட்டியவற்றையும் மிகவும் நுண்ணிய விவரங்களோடு வருணிப்பதால் அவர் காலத்துக் காஷ்மீரத்தின் அரசியல், சமூக நிலைகளைப் பற்றிய தெளிவான ஓவியம் நமக்குக் கிடைக்கிறது. இத்தகைய மனங்கவரும் ஒரு சித்திரம் கல்ஹணர் காலத்திலோ அதற்கு முன்போ வாழ்ந்த எந்த நூலாசிரியராலும் அளிக்கப்படவில்லை. காஷ்மீரத்தின் பண்டைய நில அமைப்புப் பற்றிய அவரது விரிந்த அறிவு வரலாற்று, புவியியல் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு தங்கச் சுரங்கம் போலப் பயன்படுகிறது. தம் காலத்து மக்களைப் பற்றியும் பழக்க வழக்கங்களைப் பற்றியும் அவர் வெளியிடும் கருத்துகள் மூலம் அவருடைய குணத்தையும் சொந்த உறவுநிலைகளையும் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம்.

கல்ஹணரின் நூலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் வருணிக்கப்படும் முறையிலிருந்து அவர் நூலை இயற்றும்போது போதிய உலக அனுபவம் பெற்றவராக இருந்தார் என்பது தெரிகிறது. கல்ஹணரே சொல்வது போல், இந்நூல் கி.பி. 1148—50-க்குள் இயற்றப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, சுஸ்ஸலனின் ஆட்சிக் காலத்து (1112–1128) நிகழ்ச்சிகளின் வருணனை நடை மக்களைப் பற்றியும், அவர்தம் உள்நோக்கங்களைப் பற்றியும் நூலாசிரியர் முதிர்ந்த அனுபவம் பெற்றிருந்தார் என்பதைக் காட்டுகிறது. ஆகவே, அவர் அந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்தவர் எனக் கொள்ளலாம்.

காஷ்மீரம் உள்நாட்டுக் குழப்பத்திலும் அரசியல் பூசல்களிலும் ஆழ்ந்திருந்த ஒரு நீண்ட காலகட்டத்தில் கல்ஹணரின் வாழ்க்கையின் பெரும்பகுதி கழிந்தது. காஷ்மீரத்தின் அரசியல் நிலையில் பெரிய தாக்கத்தை உண்டாக்கிய ஓர் அரச மரபுப் புரட்சி பன்னிரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்தது. ஹர்ஷ மன்னனின் ஆட்சிக் காலத்தின் (கி. பி. 1089–1101) தொடக்கத்தில் நாட்டில் அமைதியும் செழிப்பும் நிலைபெற்றன. ஆனால் பிற்காலத்தில் ஹர்ஷன் உரோமானியப் பேரரசன் நீரோவைப் போல் செயற்படத் தொடங்கினான். அவனால் துன்புறுத்தப்பட்ட நிலப் பிரபுக்களான

தமரர்கள் அவனுக்கெதிராகக் கலகம் செய்தார்கள். முடிவில் ஹர்ஷன் கொல்லப்பட்டான். கலகத்துக்குத் தலைமை தாங்கிய உலோகாராவைச் சேர்ந்த உச்சலன், சுஸ்ஸலன் என்ற இரு சகோதரர்கள் நாட்டைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொண்டார்கள்.

மூத்தவனை உச்சலனுக்குக் காஷ்மீரப் பள்ளத்தாக்கும், சுஸ்ஸலனுக்குக் குன்றுப் பகுதிகளும் கிடைத்தன. ஆனால் விரைவில் முழு நாட்டையும் கைப்பற்றிக்கொள்ள இருவரிடையும் போட்டி ஏற்பட்டது. ஆட்சிபீடத்துக்கு ஆசைப்பட்ட வேறு பலரும் விளைவித்த குழப்பங்கள் காரணமாக உச்சலனின் ஆட்சி காலத்தில் (கி. பி. 1101–1111) நாட்டின் பொருளாதார நிலை மிகவும் சீர் கெட்டது. உச்சலன் கொல்லப்பட்டான். கடைசியில் சுஸ்ஸலன் தமரர்களின் தலைவனை கர்க்கசந்திரனின் உதவியுடன் மற்ற வேட்பாளர்களை அடக்கித் தான் அரசனானன். அவனும் சர்வாதிகாரியாகத்தான் இருந்தான். அதுமட்டுமல்ல; அரண்மனையைச் சேர்ந்தவர்களும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டார்கள். இவற்றின் விளைவாக சுஸ்ஸலன் உலோகாராவுக்கு ஓடிப்போய் அங்கு சில மாதங்கள் தங்கவேண்டியதாயிற்று. ஆனல் தமரர்களின் ஒற்றுமையின்மை காரணமாக அவனல் கி. பி. 1121-ல் அரியணையைத் திரும்பப் பெற முடிந்தது. அதுமுதல் ஏழு ஆண்டுகள் உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடந்தது. கி. பி. 1128-ல் சுஸ்ஸலன் அரியணைக்குப் போட்டியிட்ட (ஹர்ஷனின் பேரனை) பிட்சாசரனைக் கொல்லத் தான் செய்த சதியில் தானே இறந்தான். அவனுடைய புதல்வன் ஜயசிம்மன் பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடித்துத் தமரர்களுடன் ஓரளவு சமாதானம் செய்துகொண்டான். ஆயினும் உள்நாட்டுக் குழப்பங்களும் சச்சரவுகளும் நிகழ்ந்து கொண்டேயிருந்ததால் நாட்டில் அமைதி சில குறுகிய கால இடைவெளிகளில் மட்டுமே நிலவியது.

இராஜதரங்கிணியில் விவரிக்கப்பட்ட கடைசி சில ஆண்டுகளில் (கி. பி. 1145–1149) ஜயசிம்மனின் ஆட்சியில் அமைதி நிலவியதாகத் தெரிகிறது. அவன் தன் மகன் குல்ஹணனை உலோகாராவுக்கு அரசனாக முடிசூட்டினான். பிட்சாசரன் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அரியணைக்குப் போட்டியிட்ட பலரும் இவ்வாறே அழிக்கப்பட்டார்கள். இந்தக் காலகட்டத்தில் அரசன் பல அற நிறுவனங்களை ஏற்படுத்தியதையும் பல அமைச்சர்களும் அரச குடும்பத்தினரும் இத்துறையில் அரசனைப் பின்பற்றியதையும் கல்ஹணர் குறிப்பிடுகிறார்.

உள்நாட்டுக் குழப்பங்களிடையே கல்ஹணர் வாழ்ந்தார் என்பது மேலே குறிப்பிட்ட செய்திகளிலிருந்து தெரிகிறது. ஆனல்

குழப்பம் நிறைந்த இந்தச் சூழ்நிலை அவரது எழுத்துப் பணிக்குத் தடையாக இருக்கவில்லை. அவரது வாழ்நாளில் நிகழ்ந்த பல்வேறு அரசியல் மாற்றங்கள் அவருடைய வாழ்க்கையையும் பணியையும் எவ்வாறு பாதித்தன என்பதை ஆராய்வது சுவையாக இருக்கும். ஹர்ஷனுக்குப் பின் வந்த அரசர்களைத் துதிபாடுவோரும் சூழ்ச்சிக் காரர்களும் சூழ்ந்திருந்தார்கள். ஆனால் அவர்களிடையே சம்பகரின் பெயரைக் காணோம். ஹர்ஷனின் ஆட்சிக் காலத்தில் பெரும்பதவி வகித்த சம்பகர் ஹர்ஷனின் மரணத்துக்குப் பின் தாமாகவே பதவியிலிருந்து விலகிக்கொண்டாரா என்பது கல்ஹணரின் நூலிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை.

கல்ஹணர் எந்த அரசுப் பதவியும் வகிக்கவில்லை என்பது மட்டும் அவரது நூலிலிருந்து மிகத் தெளிவாகத் தெரியவருகிறது. அவர் எந்த அரசனின் ஆதரவையும் நாடவில்லை. ஆனால் எல்லா அரசர்களிடமும் அவருக்குச் செல்வாக்கு இருந்ததாகத் தெரிகிறது. புரவலர்களைப் புகழ்ந்து பாடும் மரபைக் கல்ஹணர் பின்பற்றினர் என்பதைக் காட்டக் காவியத்தில் குறிப்பொன்றும் இல்லை; ஏனெனில் எந்தப் புரவலனின் ஆதரவையும் அவர் எதிர்பார்க்கவில்லை. ஜயசிம்மனோ அவனுக்கு முன் நாட்டை ஆண்டவர்களோ அவரை இந்த நூல் எழுதும்படி கேட்டுக்கொண்டனர் என்ற ஒரு சிறு குறிப்பும் நூலில் காணப்பெறவில்லை. (ஜயசிம்மனின் ஆட்சிக் காலத்தில்தான் இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது.) அவர் ஜயசிம்மனின் திறமைகளைப் புகழ்ந்து எழுதுவதைப் பார்த்தால் வேண்டா வெறுப்பாக ஒரு கடமையைச் செய்கிறார் என்றே தோன்றுகிறது. ஆயினும் அவர் ஜயசிம்மனின் தந்தை சுஸ்ஸலனின் பெருங் குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார்; சுஸ்ஸலனுக்கும் ஜயசிம்மனுக்கும் மிகவும் தொந்தரவு கொடுத்த பிட்சாசரனைத் தயக்கமின்றிப் புகழ்கிறார்—''பிட்சாசரன் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்ட தன் படைகளைக் காப்பாற்றுவதில் மிகவும் திறமைசாலி. அவன் நல்ல உழைப்பாளி, வீண்பெருமை பேசாதவன், இன்னல்களைப் பொறுத்துக்கொள்ளும் உறுதி மிக்கவன், வீரன். அவனையொத்தவரைக் காண்பது அரிது'' (VIII, 1017). இதே தரங்கத்தில் 1776-ஆம் செய்யுளில் அவர் மேலும் கூறுகிறார்: ''அவன் யார் யாருடைய துன்பங்களுக்கும் சீர்குலைவுக்கும் காரணமாக இருந்தானோ அவர்களே இறுதியில் அவனுடைய வீரத்தை வியந்து பாராட்டினர்கள்'' (VIII, 1776). அரியணைக்குப் போட்டியிட்ட மற்றவர்களிடையே போஜன் மாத்திரம் கல்ஹணரின் அனுதாபத்தைப் பெறுகிறான்.

காஷ்மீர மக்களை நன்கு அறிய நிறைந்த வாய்ப்புப் பெற்ற கல்ஹணர் உண்மைப் பாங்கு தோன்றும் வண்ணம் அவர்களை

வருணிக்கிருர். அவருடைய வருணனைகளில் மழுப்பல் இல்லை. அவர் ஒரு வரலாற்று ஆசிரியர் மட்டுமல்லர்; காஷ்மீரின் காடுகள், பசும் புல்வெளிகள், பனி போர்த்த மலைகள், தெள்ளிய நீரோடைகள் இவற்றை மிகவும் நேசித்த கவியுங்கூட. அவர் தம் காலத்து மக்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் உயிரூட்டுகிருர். அவருடைய நூலில் கடந்த காலம் மீண்டும் உயிர் பெற்று எழுகிறது.

காஷ்மீர மக்களை அண்மையிலிருந்து கவனித்த கல்ஹணரின் கவனத்துக்கு மக்களின்—குறிப்பாகக் கீழ்மட்டத்து மக்களின்—துணிவின்மையும் கோழைத்தனமும் தப்பவில்லை. அவர் படை வீரர்களின் தற்பெருமையையும் சவுடால் பேச்சையும் கேலி செய்கிருர். தங்களைத் தாக்க வந்த துருக்கர்களிடம் மிரண்டு படைவீரர்கள் ஓடுவதும் இராணுவ முகாம்கள் சிதறுவதும் குறிப்பிடப்படுகின்றன: ''படைத்தலைவன்—ஒரு நாய் போல—தன் உடைவாளை உடலோடு மறைத்துக்கொண்டு ஓடி மறைந்தான். உடைவாள் நாயின் வால் போலக் காட்சியளித்தது'' (VIII, 324). கல்ஹணருக்குத் தம் நாட்டு மக்களின் வீரத்தைப் பற்றி நல்ல கருத்து இல்லையென்பதும் அவர்காலத்தில் ஆட்சியாளர்களிடையே நிகழ்ந்த சூழ்ச்சிகளும் சதிகளும் அவருக்கு அருவருப்பு அளித்தன என்பதும் மேலோட்டமாக அறிய முடிகிறது. ஆனால் அவர் போரிட்ட இளவரசர்கட்கு ஊன்றுகோலாக நின்று துணை செய்த இராஜபுத்திரர்களையும் பாரதத்தின் மற்ற பகுதிகளிலிருந்து வந்து போரிட்ட கூலிப் படையாட்களையும் அவர்களுடைய வீரத்துக்காகப் பல இடங்களில் புகழ்ந்திருக்கிருர்.

அதே சமயத்தில் அவர் அரசவைச் சூழ்ச்சிகளையும் ஆட்சியைக் கைப்பற்ற நிகழ்ந்த மரபு உரிமைப் போர்களையும் மக்கள் பொறுப்பற்ற முறையில் அலட்சியம் செய்ததையும் சுட்டிக்காட்டுகிருர். ஹர்ஷனின் வீழ்ச்சிக்கும் அதைத் தொடர்ந்து காஷ்மீரில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களுக்கும் காரணமாக இருந்த தமரர்களைச் சாடுகிருர் கல்ஹணர். அவந்திவர்மன், திட்டா போன்ற பலம் பொருந்திய அரச, அரசிகள் அடங்காப்பிடாரிகளான தமரர்களை அடக்க முயன்று இம்முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்ருர்கள். இருந்தாலும் நிலப் பிரபுக்களான தமரர்களுக்கு நிலப் பிரபுத்துவ அடிப்படையில் அமைந்திருந்த சமூகத்தின் தொடர்ந்த ஆதரவு கிடைத்து வந்தது. நிலம் நிலப் பிரபுவின் சொத்தாக இருந்தது. நிலத்தில் உழைக்கும் உழவனுக்கு நில உரிமை இல்லை. நிலப் பிரபு உழவனிடமிருந்து வரிகளை எப்படியாவது தண்டல் செய்து அரசாங்க அதிகாரிகளுக்குச் செலுத்தி விடுவான். இந்நிலையில் நிலப் பிரபுக்களின் வளர்ச்சி தவிர்க்கமுடியாததுதான். நில வரிகள் மூலம் சில தமரர்கள் பெரும் பணக்காரர்களானதைக் கல்ஹணர்

குறிப்பிடுகிறார். இந்தக் கொடுங்கோலர்களின் முரட்டுத்தனத்தையும் காட்டுமிராண்டித்தனத்தையும் சிறு அதிகாரிகளான காயஸ்தர்கள் இழைத்த கொடுமைகளையும் கல்ஹணர் விவரிக்கிறார். மன வலிமையற்ற அரசர்களைத் தங்கள் விருப்பத்திற்கேற்ப ஆட்டி வைக்கும் நோக்கத்துடன் 'பிராயோபவேசம்' (சாகும்வரை உண்ணாவிரதம்) மேற்கொண்ட புரோகிதர்களின் அரசியல் அறிவையும் கணித்துச் சொல்கிறார் அவர். சில இடங்களில் இந்தப் புரோகிதர்களின் கோழைத்தனங்கலந்த அகம்பாவத்தையும் நையாண்டி செய்கிறார்.

லலிதாதித்தியன் போன்ற பலம் பொருந்திய அரசர்களின் ஆட்சியில் மக்கள் அடிமைகளாக வாழ்ந்தார்கள். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட தமரர்கள் போன்ற நிலப் பிரபுக்களும் மற்ற மேல்மட்டத்து மக்களும் வாழ்க்கையில் மிக நல்லவற்றையெல்லாம் அனுபவித்தார்கள். பிரபுக்களும் அரசவையில் செல்வாக்குள்ளவர்களும் புகழ்பெற்ற காஷ்மீரத்து உணவு வகைகளை உண்டு சொகுசு வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்கள் 'பொரித்த இறைச்சியையும் பனிக்கட்டிகளால் குளிரச் செய்யப்பட்டு மலர்களின் மணம் ஊட்டப் பெற்ற அருமையான சாராயத்தையும்' சாப்பிட்டார்கள். சாராயம் அருந்தும் பழக்கம் நீண்ட காலமாகவே இருந்தது. சடங்குகளில் சாராயம் உபயோகிக்கப்பட்டதை 'நீலமத புராணம்' குறிப்பிடுகிறது. சாதாரண மக்களுக்குக் கிடைத்தவை அரிசியும், 'ஹக்' எனப்படும் காஷ்மீரக் கீரையுந்தான். அவையும் பஞ்ச காலங்களில் கிடைப்பது அரிது. கல்ஹணர் தம் நூலில் ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அனுதாபம் காட்டுகிறார். கொடுங்கோலனும் சிற்றின்பப் பிரியனுமான அரசன் வராதித்தியன் மிலேச்சர்களுக்கு மக்களை விற்றதைக் குறிப்பிடும்போது இந்த அடிமை வாணிகத்தை 'மிலேச்சர்களுக்கேற்ற பழக்கம்' என்று சுட்டிக்காட்டுகிறார் கல்ஹணர் (IV, 392–394).[1]

கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை காஷ்மீர் அரசின் ஆதிக்கம் அதைச் சுற்றியிருந்த மலைப் பகுதிகளிலும் பரவியிருந்தது. நாட்டின் வாணிக உறவுகள் மத்திய ஆசியா வரை எட்டியிருந்தன. இந்தக் காலத்தில் வெளிநாட்டு வாணிகம் உச்சநிலையில் இருந்தது. இதன் விளைவாக வாணிக சமூகம் செழிப்

[1] இளவரசன் போஜனுடன் தோழமை பூண்டு நாட்டின் எல்லையில் வாழ்ந்த இனத்தாரை எட்டாம் தரங்கத்தில் 'மிலேச்சர்கள்' என்று கல்ஹணர் குறிப்பிடுகிறார். தற்காலத்தில் காஷ்மீரப் பண்டிதர்கள் நாஸ்திகனையும் தூய்மையற்றவனையும் முரடனையும் 'மிலேச்சன்' என்று குறிப்பிடுவதிலிருந்து மிலேச்சர்கள் நன்கு மதிக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆனால் கல்ஹணர் கிரேக்கர்களையும் இந்தப் பெயரால் குறிப்பிட்டிருக்கலாம்.

பாக இருந்தது. பத்தாம் நூற்றுண்டு முதல் வெளிநாட்டு வாணிகம் குறையவே வாணிக சமூகத்தின் செல்வமும் செல்வாக்கும் குறையத் தொடங்கின. இராஜதரங்கிணியில் வணிகர்கள் 'இயற்கையாகவே ஏமாற்றுக்காரர்கள்' என்று வருணிக்கப்படுகிருர்கள். ''தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிறருடைய செல்வத்தைக் கபளீகரம் செய்த வணிகர்கள் புண்ணிய நூல்களின் உபதேசங்களைக் கேட்பதில் எப்போதும் ஆர்வங் காட்டுகிருர்கள்!'' என்கிருர் கல்ஹணர். தமரர்களும் வாணிகத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டதால் பரம்பரை வணிகர்கள் தங்கள் தொழிலில் நிலைத்திருப்பதற்காகப் பலவகை ஏய்ப்பு வழிகளில் இறங்கவேண்டியதாயிற்று.

வேளாண் மக்களையும் வணிகர்களையுந்தவிர வேறு பல தொழில்களை மேற்கொண்டவர்களும் சமூகத்தில் இடம்பெற்றிருந்தார்கள். ஆசிரியர்கள், சோதிடர்கள், மருத்துவர்கள், தொழிலாளர்கள், வண்டியோட்டிகள், கைகளால் ஆலைகளை இயக்குபவர்கள் ஆகியோர் இராஜதரங்கிணியில் குறிப்பிடப்படுகிருர்கள். போர் வீரர்களோ ஏராளம். தொழிலாள வகுப்பினரிடையே பல பிரிவுகளும் உட்பிரிவுகளும் இருந்தன.

அரசு நிர்வாகத்தை நடத்திய அதிகாரிகளை இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்—பிரபுக்கள், அதிகாரிகள். பின்னவர் 'காயஸ்தர்' என்று வழங்கப்பட்டனர். அரசின் உயர் அதிகாரிகள் என்ற முறையில் பிரபுக்கள் நிறையச் சம்பளம் பெற்றதோடு சிலர் பெரிய பண்ணைகளுக்கும் உரிமையாளர்களாக இருந்தனர். கிருகக் கிருத்தியாதிபதி, மகத்தமர், பரிபாலகர், மார்க்கேசர் அல்லது மார்க்கபதி, சௌல்கிகர், நியோகி, நகரம் அல்லது கிராமத்தின் தீவிரர் போன்ற பதவிகளைக் காயஸ்தர்கள் வகித்தார்கள். அநேகமாக அவர்களெல்லோருடைய கடமையும் நில வரியையும் பிற வரிகளையும் வசூலிப்பதுதான். காயஸ்தர்கள் அரசுக் கருவூலத்திலிருந்து சம்பளம் பெற்றதோடு தவருன வழிகளில் உபரி வருமானமும் ஈட்டினுர்கள். ஜயாபீடனின் ஆட்சிக் காலத்தில் காயஸ்தர்கள் ஏழை மக்களிடமிருந்து வரி வசூல் செய்து அதில் ஒரு சிறு பகுதியையே அரசனுக்குக் கொடுத்ததாகக் கல்ஹணர் கூறுவார் (IV, 629). ஆட்சி மாற்றங்கள் அடிக்கடி நிகழ்ந்ததாலும் அரசு நிர்வாகமும் நிலையில்லாமலிருந்ததாலும் ஒவ்வொரு புதிய அரசனும் ஆட்சிக்கு வரும்போது அவனுக்கு வேண்டியவர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டதாலும் மற்ற அரசர்களின் காலத்திலும் இதே நிலைமை இருந்திருக்கவேண்டும்.

இராஜதரங்கிணியின் முதல் மூன்று தரங்கங்களில் காயஸ்தர்களைப்பற்றிய குறிப்பு இல்லை. நான்காவது தரங்கம் முதல் அவர்கள்

மேலும் மேலும் அதிகமாகப் புதிய புதிய பதவிகளில் குறிப்பிடப் படுகிருர்கள். மக்கட்பெருக்கம் காரணமாக நாட்டில் வேளாண் மைக்கேற்ற நிலம் அதிகமான மக்களுக்கிடையே பங்கிடப்பட வேண்டியிருந்தது. இதனுல் அரசன் வரிகளை வசூலிக்க அதிக எண்ணிக்கையில் அதிகாரிகளை நியமிக்க நேர்ந்தது. கார்க்கோடர் களின் வீழ்ச்சிக்குப் பிறகு நாட்டின் அயல்நாட்டு வாணிகம் அநேக மாக நின்றே போய்விட்டதால் அரசு தன் வருவாய்க்குப் பெரும்பாலும் நிலவரியையே நம்பவேண்டியதாயிற்று. நிலங்களை மேற்பார்வை செய்யவும் அவற்றிலிருந்து அதிக அளவில் வரிகளைக் கறக்கவும் அதிக எண்ணிக்கையில் காயஸ்தர்கள் நியமிக்கப்பட வேண்டியதாயிற்று.

அந்தணர்கள்தாம் காயஸ்தர்களாக இருந்தார்களென்று கல்ஹணர் கூறுவதிலிருந்து (VIII, 2383) 'காயஸ்த' என்ற சொல் பண்டைய காஷ்மீரில் ஒரு குறிப்பிட்ட சாதியைக் குறிக்கவில்லை என்று தெரிகிறது. எந்தச் சமயத்தைச் சேர்ந்தவரும் எந்த சாதி யைச் சேர்ந்தவரும் காயஸ்தராகலாம். ஒரு தோட்டக்காரனும் காயஸ்தனுகலாம் (VII, 39,40). சிறு பதவி வகிக்கும் காயஸ்தன் பெரிய பதவிக்கு உயர்த்தவும் பெறலாம்.

அரசன் உச்சலன் 'மக்களிடம் அன்புகொண்டிருந்தான்.' அவன் 'இயல்பாகவே பணத்துக்கு ஆசைப்படவில்லை'(VIII). அவன் 'கொலைக்கு அஞ்சாதவர்களும் ஒழுக்கங்கெட்டவர்களுமான' காயஸ்தர்களை வேருடன் அழித்து அவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற நடவடிக்கைகள் எடுத்தான். மேலும் கல்ஹணர் காயஸ்தர்களை இவ்வாறு வருணிக்கிருர்:

> அதிகாரிகள் வாந்தி பேதி, வயிற்று வலி, சூதாட்டம் இவைபோல் உலகத்தை நொடியில் தாக்குகிருர்கள். அவர்கள் மக்களைப் பீடிக்கும் மற்ெருரு தொத்து நோய். (88)

> நண்டு தன் தந்தையைக் கொல்கிறது; கறையான் தன் தாயை அழிக்கிறது; நன்றிகெட்ட அதிகாரியோ பதவியைப் பெற்றதும் எல்லோரையும் அழிக்கிருன். (89)

> . . . அதிகாரியும் நச்சு மரமும் தாங்கள் செழிப்பாக வளரும் இடத்தைப் பிறர் அண்ட முடியாதபடி செய்துவிடு கிருர்கள். இது விந்தைதான்! (91)

> . . . அரசன் மகத்தமன் சகேலனையும் வேறு பலரையும் பதவியிலிருந்து விலக்கி அவர்களைச் சிறையில் சணலால் ஆன துணியை அணியச் செய்தான். (93)

. . . அரசன் இன்னொருவனை அம்மணமாக்கி வண்டியோடு கட்டினான்; அவனுடைய தலையில் பாதியைச் சிரைத்து, மிச்சமிருந்த கேசத்தில் மண்ணைப் பூசச் செய்தான். (97)

இவ்வாறு இழிவுபடுத்தப்பட்ட அதிகாரிகள் நிந்தைப் பெயர்களாலும், பறையொலிகளாலும், அலங்கோலம் செய்யப்பட்ட தலைகளாலும் நாடறிய விளம்பரப்படுத்தப் பட்டார்கள். (98)

ஆயினும் பொறுப்புணர்வு நிறைந்த நல்ல காயஸ்தர்களும் இருந்தார்கள். ஒரு சமயம் லலிதாதித்தியன் (தரங்கம் IV) தன் தலை நகரான பரிகாச புரத்தில் குடிவெறியில் இருந்தான். தொலைவில் தெரிந்த பழைய பட்டணமான பிரவரபுரத்தின் பிரகாசமான ஒளியைப் பார்த்து எரிச்சலடைந்த அவன் அந்த நகரத்தை எரித்துவிடும்படி தன் அமைச்சர்களுக்குக் கட்டளை யிட்டான். அமைச்சர்கள் வைக்கோல் போர்களுக்குத் தீ வைத்தார்கள். அதைக் கண்ட அரசன் தன் ஆணை நிறைவேற்றப்பட்டு விட்டாகக் கருதினான். நடந்ததை மறுநாள் அறிந்த அவன் ''நான் குடிவெறியில் இடும் ஆணைகள் நிறைவேற்றப்படக் கூடாது!'' என்று சொல்லித் தன் அமைச்சர்களின் பொறுப்புணர்வைப் பாராட்டினான்.

கல்ஹணரின் பின்வரும் கருத்து இக்காலத்து அதிகார வர்க்கத்தினரும் பயன்பெறத் தக்கது:

ஒருவன் ஒரு விலை மகளின் எசமானாகச் சிறிது காலமே இருக்கமுடியும். அதுபோல் அரசனும் சிறிது காலத்துக்கே ஒரு நாட்டின் தலைவனாக இருக்கிறான். அவனைத் தங்கள் சொந்த லாபத்துக்காகவும் வசதிகளுக்காகவும் தீய பொழுது போக்குகளில் ஈடுபடுத்தும் அதிகாரிகள் நாசமாகட்டும்! தங்கள் உயிரையும் திருணமாக மதித்து, அரசன் முறையற்ற வழியில் செல்லும்போது அவனைத் தடுத்துக் காக்கும் சான்றோரால் தான் இவ்வுலகம் புனிதம் பெறுகிறது. (321)

சாதி பற்றிய பிரிவுகள் இல்லையாயினும் இராஜதரங்கிணியில் நிஷாதர், கிராதர், கைவர்த்தர், தொம்பர், ஸ்வபாகர், சண்டாளர் போன்ற பல கீழ்ச் சாதிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அந்தணர்கள் வேறு பகுதிகளிலிருந்து காஷ்மீருக்கு வந்தது முதல் உயர்ந்த சாதியினராக மதிக்கப்பட்டு வந்தனர். அவர்கள் தாம் அரசர்களுக்கு அமைச்சர்களாகவும் ஆலோசகர்களாகவும் இருந்தார்கள். இராணுவ, அரசாங்கப் பதவிகளும் அவர்களுக்கு எளிதில் கிடைத்தன. இருந்தாலும் அவர்களில் பெரும்பாலோர் புனித நூல்களைக் கற்பித்தும்

புரோகிதத் தொழில் செய்தும் வாழ்க்கை நடத்தினர்கள். கோவில் அர்ச்சகர்கள் வசதியாக வாழ்ந்தார்கள். அரசர்களின் ஆணையால் கோவில்களுக்குத் தானம் செய்யப்பட்ட கிராமங்களி லிருந்து கிடைத்த வரியை அவர்கள் அனுபவித்தார்கள் (II, 132; V, 58–62). சில சமயங்களில் அவர்கள் மலர்கள், சாம்பிராணி போன்ற பூசைக்குரிய பொருட்களை விற்ருர்கள் (V, 168).

'நிஷாதர்' என்போர் பழங்குடி மக்களாக இருக்கலாம். 'கிராதர்' காட்டு மிருகங்களை வேட்டையாடித் தின்றுகொண்டு காடுகளில் வாழ்ந்து வந்ததாகக் கல்ஹணர் கூறுகிருர். கீழ்த் தரமான வேலைகளைச் செய்து வந்த சாதியினர் 'தொம்பர்' என்றும் அவர் கூறுகிருர். சில சமயங்களில் 'சண்டாளர்' களும் இத்தகைய தொழில் செய்பவர்கள்தாம்.[2] கல்ஹணர் தொம்பப் பாடகர்களையும் இசைவாணர்களையும் குறிப்பிடுகிருர். நாட்டுப் பாடல்களைப் பாடும் தொம்பப் பாடகர்கள் இப்போதும் வாழ் கின்றனர்.

இந்தியாவின் மற்ற பகுதிகளில் நிலவி வரும் மரபு வழிப் பெரும் பிரிவை (வருணுசிரம முறை)ச் சேர்ந்த நான்கு சாதிப் பாகுபாடு காஷ்மீரில் இல்லை. க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய சாதிகள் அங்கு இல்லை. காஷ்மீர மக்கள் அவரவர் தொழிலுக்கேற்பப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிருர்கள். நிலத்துடன் தொடர்பு கொண்டவர்கள் 'தமரர்கள்.' உற்பத்தித் தொழிலும் வாணிகமும் வணிகர்கள் கையில் இருந்தன. நாட்டின் செல்வத்தை மக்களிடையே பங்கிடுவதில் அரசுக்குப் பங்கு இருந் தாலும் அது பொதுவாகத் தனி மனிதர்களின் தொழில் முயற்சி களிலோ சொத்திலோ தலையிடவில்லை. ஆனல் நாட்டின் செல் வத்தை உற்பத்தி செய்த மக்கள் தங்கள் கடும் உழைப்பின் பயனை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டிலர். சமூக அமைப்பின் காரண மாக ஒருசிலர் பிறருடைய உழைப்பின் பயனை அனுபவிக்கும் உரிமை பெற்றிருந்தனர்.

ஆசியர்கள் சிலுவைப் படையினரைப் போரில் சந்தித்த நேரத்தில் தம் காவியத்தைப் படைத்த கல்ஹணர் இளவரசர் களும் உயர்குடி மக்களும் அந்தணர்கள், அதிகாரிகள், 'மதிவதனம்' படைத்த பெண்கள் ஆகியோர் புடை சூழக்கூட்டங் கூட்டமாகப் பழைய தலைநகரான பிரவரசேன புரத்துக்கருகில் அசோகரால் நிறுவப் பெற்ற ஸ்ரீநகரத்துக்கு வருகை புரிந்ததை வருணிக்கிருர். நகரத்தின் முக்கிய எல்லைகளைக் காட்டும் அடை

[2] ஆல் பெருனியும் கல்ஹணரும் சண்டாளர்கள் கொலைகாரர்களாகப் பயன் படுத்தப்பட்டதாகக் கூறுகிருர். இப்போதும் காஷ்மீர மக்கள் அழுக்குப்பிடித்த, அருவருக்கத் தக்க மனிதனைச் 'சண்டாளன்' என்று வழங்குவதில் வியப்பில்லை.

யாளங்களை அவர் குறிப்பிடுகிறார். உள்நாட்டுக்குழப்பங்களும் அரசவைச் சூழ்ச்சிகளும்—இடையிடையே கோவில்கள் கட்டப் பட்ட நிகழ்ச்சிகளும்—நிறைந்த ஒரு கடந்தகால கட்டத்தை நினைவுறுத்திக்கொண்டு அந்த அடையாளங்கள் இன்னும் நிலைத் துள்ளன. அத்தகைய எல்லை அடையாளங்களில் சில—கோபமலை (இப்போது 'குப்கார்' என வழங்கப் பெறும் பகுதி), அதன் மேலுள்ள ஜேஷ்டருத்திரனின் பழங்காலக் கோவில் (சங்கராசாரி யார் கோவில்), சாரிகாபர்வதம் (ஹரிபர்வத்), இன்னும் சிறிது தொலைவில் 'வியக்கத்தக்க மார்த்தாண்டர் கோவில்' என்பவை யாகும்.

இராஜதரங்கிணியில் காஷ்மீரப் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிய அறிமுகம் கிடைக்கிறது. அவர்கள் தங்கள் வாழ்வின் முற் பகுதியில் பெற்றோருடன் வாழும் போது நல்லமுறையில் கல்வி கற்றார்கள். அவர்கள் வடமொழியும் பிராக்கிருதமும் சரளமாகப் பேசினார்கள். பொதுத்துறையில் அரசியரும் மற்ற பெண்டிரும் செய்த சாதனைகளிலிருந்து அவர்கள் அத்துறையில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது. தாராள மனப்பான்மையுடன் அழகையனுபவிக்கும் கலைஞர் என்ற முறையில் கல்ஹணர் பெண்ணுருவை மதித்துப் போற்றினார். பெண்ணின் வடிவழகை — குறிப்பாகத் தோள்களின் அழகை — காளிதாசரைப் போலவே அவரும் விரும்பிப்பாராட்டினார். அவர் முதல் தரங்கத்தில் (253) நாக அரசனின் பெண்ணை ''மிகநேர்த்தி யான அழகு பொருந்தியவள்'' என்றும், அவளது கை ''தாமரையை ஒத்திருந்தது'' என்றும் வருணிக்கிறார். ''அழகிய கண்களையுடைய'' அந்தணப் பெண் தன்னிடம் மயங்கிய நரனின் மேல் ''அழகிய கூம்பிய விரல்களையுடைய தன் உள்ளங்கையைப் பொன் போல் பதித்தாள்'' என்கிறார். எட்டாவது தரங்கத்தில் (366) உச்சலனின் மனைவியரை வருணிக்கும் போது அவர் சொல் கிறார்: ''ஆகா, புரிந்து கொள்ள முடியாத உள்ளம் படைத்தவர் கள் இப் பெண்கள்! அலையலையாகக் குவிந்த கேசபாரம், காத லழைப்பில் தேர்ந்த கண்கள், உருண்டு திரண்ட கொங்கைகள் இவையெல்லாம் இவர்களிடம் பொருந்திருக்கின்றன. யாரும் இவர்களைப் புரிந்து கொள்ள முடியாது'' என்று. 'பெண்' என்னும் பெரும்புதிரைப் பற்றிப் பேசும் மற்ற பெருங் கவிகளைப் போலக் கல்ஹணரும் இந்த அரசியரைப் பற்றிக் கூறுகிறார்: ''கணவனுக்குத் துரோகம் செய்யவும் அவனைக் கொல்லவும் தயங் காத இப் பெண்கள் அநாயாசமாகத் தீயில் இறங்குகிறார்கள்! இவர்களைப் பற்றி உறுதியாக எதுவும் சொல்ல முடியாது!''

கல்ஹணர் பெண்களின் அழகை மட்டும் பாராட்டவில்லை. அக்காலத்தில் பெண்கள் சுதந்திரம் பெற்றிருந்தார்கள் என்பதை யும் எடுத்துக்காட்டுகிறார். பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையில் பெண்களின் சம உரிமையும் சுதந்திரமும் ஆரியர்களால் மதிக்கப் பட்டன. காஷ்மீரில் பெண்களுக்குச் சொத்துரிமையும் சட்ட முறைப்படி சுதந்திர மதிப்பு நிலையும் இருந்திருக்கலாம். 'பர்தா' முறை இந்தியாவில் முஸ்லிம்களால் கொண்டுவரப்பட்டது. 'பர்தா' என்ற சொல்லுக்குச் சரியான வடமொழிச் சொல்லே இல்லை என்பது ஒரு சுவையான செய்தி. 'Harem' (மகளிர் பகுதி) என்ற சொல்லுக்கு நேரான வடமொழிச் சொல்லும் இல்லை. இந்தியாவின் மற்ற பகுதிகளில் போலவே காஷ்மீர அரசர்களும் பல பெண்களை மணந்து கொண்டார்கள். இந்தப் பெண்கள் வசித்த பகுதிக்கு 'அந்தப்புரம்' (உள்ளறைகள்) அல்லது 'சுத்தாந்தம்' (தூய உட்பகுதி) என்று பெயர். பெண்கள் தனிமைப் படுத்தப்படவில்லை என்பதும் அவர்கள் தங்கள் உடலை யும் முகத்தையும் மறைத்துக் கொள்ளவில்லை என்பதும் கல்ஹணரின் நூலிலிருந்து தெரிகிறது. அரசர்களின் முடி சூட்டு விழாவின்போது அவர்களின் அரசியர் அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தனர். பண்டைய வழக்கப்படி புனித நீர் அவர்கள் மேலும் தெளிக்கப்பட்டது. அரசியருக்குத் தனி ஆலோசகர்கள் இருந்தார்கள். அரசியரின் செலவுக்குத் தனியே பணமும் அளிக்கப் பட்டது. அரசி தன் ஆலோசகர்களின் உதவியுடன் அரசு நிர் வாகத்தில் நேராகப் பங்கெடுத்துக் கொண்டாள். திட்டா, சுகந்தா, சூரியமதி போன்ற அரசியர் அரசு நிர்வாகத்தில் ஆண் களுக்கு நிகராக இருந்ததில் வியப்பில்லை. அரசியரைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்த பெண்கள் கூட அரசியலில் முக்கிய பங்கு பெற்றதாகக் கல்ஹணர் கூறுகிறார். அரசனுக்குத் துணைவியரைத் தேர்ந்தெடுப்பதில் சாதியைப்பற்றிய சிந்தனைக்கு இடமே இல்லை. சக்கரவர்மன் (கி. பி. 923–933) என்ற அரசன் ஒரு தொம்பப் பெண்ணை மணந்து கொண்டு அவளைத் தன் பட்டத்தரசியாக்கிக் கொண்டான். ''கவரி எருதின் (yak) வாலாலான விசிறி யால் விசிறப்படும் உரிமையை அவள் பெற்றிருந்தாள்'' (V,387). அவள் அரசமரியாதைகளுடன் ஸ்ரீ நகரத்தையடுத்த 'இராம சுவாமி' என்ற திருமால் கோவிலுக்கு வருகை புரிந்ததையும் அவளுடைய உறவினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டதையும் கல்ஹணர் குறிப்பிடுகிறார். இந்தத் திருமணத்தை ஆதரித்தவர்கள் பின்னர் வந்த அரசர்களுக்கும் அமைச்சர்களாக இருந்தார்கள். புகழ்பெற்ற அரசர்களான லலிதாதித்தியனும் அவனுடைய சகோதரன் சந்திராபீடனும் தில்லிக்கருகில் உள்ள உரோஹ் தக்கைச் சேர்ந்த, 'விவாக ரத்து' செய்து கொண்ட ஒரு

வைசியப் பெண்ணின் புதல்வர்கள். இருந்தாலும் கல்ஹணர் அவர்களது பிறப்பைப்பற்றிக் குற்றங் காணவில்லை.

கைம்பெண் தனித்த, தூய வாழ்க்கை நடத்தவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது; அவள் ஆபரணங்களோ பகட்டான ஆடைகளோ அணிந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. (VIII, 1969). இறந்தகணவனின் அசையாச் சொத்தைக் கைம்பெண்ணே (பிள்ளைகள் அல்ல) மரபுரிமையாகப் பெறுவாள் என்று நூலில் ஓரிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி வாழ்ந்த கைம்பெண்டிர் தங்கள் கணவன்மாருடன் உடன்கட்டையேருதவர்கள். இவ்வாறு கணவன்மாரின்மரணத்துக்குப் பின்னும் வாழும் பெண்டிரைப் பற்றிக் கல்ஹணர் ஒரு கருத்தும்தெரிவிக்கவில்லை. பழங்காலம்முதல் உடன் கட்டையேறும் பழக்கம் நிலவுவதை அவர் குறிப்பிடுகிருர். சங்கரவர்மன்(V,266)இறந்தபோதுஅவனுடைய மனைவியரான சுரேந்திரவதியும் வேறு இருவரும் உடன்கட்டையேறினுர்கள். திரைலோக்கியதேவி, சூரியமதி, குமுதலேகை ஆகிய அரசியரும் இவ்வாறே செய்தார்கள். உச்சலனின் சடலம் எரிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு அவனுடைய அரசி ஜயமதி தீயில் இறங்கினுள் (VIII, 368). இந்தப் பழக்கம் அரச குடும்பத்தோடு நின்றுவிடவில்லை. சில சமயங்களில் அரசவை ஆடலணங்குகளும் காமக்கிழத்தியருங்கூட அரசர்களாகவோ, அமைச்சர்களாகவோ உயர் அதிகாரிகளாகவோ இருந்த தம் காதலர்கள் இறந்தபோது அவர்களுடன் உடன் கட்டையேறியதாகக் கல்ஹணர் கூறுகிருர். எட்டாவது தரங்கத்தில் (448) தில்ஹபட்டார்க்கா தன் சகோதரனுடன் உடன் கட்டையேறியதாகக் குறிப்பு வருகிறது.

நாணயத்துக்கு இன்னெரு பக்கமும் உண்டு. பெண்டிரில் சில பிரிவுகளில் ஒழுக்கமின்மைபற்றிய குறிப்புகள் இராஜதரங்கிணியில் நிறையவே உள்ளன. கோவில்களில் பாடவும் ஆடவும் பெண்டிரை உரிமையாக்கும் இந்திய வழக்கமான 'தேவதாசிமுறை' காஷ்மீரத்திலும் இருந்தது. எந்தக் கோவிலிலிருந்தும் தேவதாசியைத் தன் ஆசைக்கிழத்தியாக அரண்மனைக்கு அழைத்துக் கொள்ளும் உரிமை அரசனுக்கு இருந்ததாகக் கல்ஹணர் கூறுகிருர்.

கல்ஹணர் பெண்களின் ஒழுக்கக்கேடுகளைக் கவனித்து அக்கேடுகளையும், தங்கள் வசதிக்காக அப்பெண்களின் கெட்ட ஆசைகளைத் திருப்தி செய்யும் சுயநலக்காரர்களையும் சாடுகிருர். ''ஒரு மந்தை பெண் குதிரைகளைத் திருப்தி செய்யும் ஆண் குதிரைபோல்'' இளமை ததும்பும் சுகந்தாதித்தியன் (தரங்கம் V) அரசனின் இரண்டு அரசியரின் காமவெறியை நிறைவு செய்ததாகச் சொல்லுகிருர் அவர்.

இரு ஏழைப் பெண்டிரால் மாற்றி மாற்றிப் பயன்படுத்தப் பெறும் ஒரே உணவுப் பாத்திரம்போல அவன் இரு அரசியருடன் நாட்கணக்கில் மாற்றி மாற்றி உறவுகொண்டு அவர்களுடைய இன்பத்தை வளர்த்தான். (285)

தங்கள் தங்கள் புதல்வர்களுக்கு அரியணையை வாங்கித் தரும் ஆசையில் அவ்விருவரும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் அமைச்சனுடன் உடலுறவு கொண்டதுமன்றி அவனுக்கு ஏராளமான செல்வத்தையும் பரிசாக அளித்தார்கள். (286)

திட்டா என்ற இராணி (தரங்கம் VI) பல முரண்பாடுகளின் கலவையாக இருந்தாள். அவள் பல விஹாரங்களைக் கட்டினாள்; ஆனால் இப்புண்ணியச் செயல்களுக்கு நேர்மாறாக ''இன்பங்களுக்கு ஏங்குபவளாக''வும் அதிகார வெறி கொண்டவளாகவும் இருந்தாள். அவள் ''சூனியம் பற்றிய மந்திரங்களை''ப் பயன்படுத்தித் தன் பேரக்குழந்தையைக் கொல்ல ஏற்பாடு செய்ததை விவரிக்கும் போது கல்ஹணர் இவ்வாறு தன் கருத்தை அழுத்தமாக வெளியிடுகிறார்:

> புண்ணிய தீர்த்தத்தில் வசித்துக்கொண்டு மௌன விரதத்தைக் கடைப்பிடித்தாலும் திமி மீன் மற்ற மீன்களைக் கொன்று தின்னாமலிருப்பதில்லை; மேகத்திலிருந்து விழும் நீரை மட்டுமே பருகும் மயில், பாம்புகளையும் விழுங்குகிறது; தியானத்தில் ஆழ்ந்தாற்போலத்தோற்றமளிக்கும் கொக்கு ஐயமெதுவுமின்றிக் கரையை அணுகும் மீன்களை உண்டுவிடுகிறது; பாவிகள் புண்ணியச் செயல்களில் ஈடுபட்டிருக்கும் போதும் மறுபடியும் தீய வழிகளில் இறங்கமாட்டார்கள் என்பது உறுதி இல்லை. (309)

கலசன் என்ற அரசன் இறந்தபின் (தரங்கம் VII) அவனுடைய காதலி கய்யா ஒரு முரட்டுப் பட்டிக்காட்டானின் இச்சைக்கு இணங்கிய செய்தியைக் கூறும்போது கீழ்த்தர மனப்பான்மையுள்ள பெண்டிரைக் கல்ஹணர் இவ்வாறு சாடுகிறார்:

> ஒரு அரசனால் அனுபவிக்கத்தக்கதும் சொகுசான வாழ்க்கை காரணமாக மினுமினுப்பும் கவர்ச்சியுங்கொண்டதுமான தன் உடலை அவள் ஒரு பட்டிக்காட்டானுக்கு விருந்தாக அளித்தாள்! இத்தகைய கீழ்த்தரமான மனங்கொண்ட பெண்கள் ஒரு சாபக்கேடு!

தன் ''ஆணவம் நிறைந்த மனைவி''யால் பல காரியங்கள் செய்யத் தூண்டப்பட்ட (தரங்கம் VII) அனந்தன் என்னும் அரசன் பெண்கள் பற்றித் தன் கருத்தை இவ்வாறு வெளியிடுகிறான்:

என் மனைவியின் பேச்சைக் கேட்டு நடந்த நான் — தன் மானம், புகழ், அரசுரிமை, ஆற்றல், அறிவு, செல்வம் — இவற்றில் எதைத்தான் இழக்கவில்லை? (423)

பெண்கள் ஆண்களின் சொத்து என்று மக்கள் நினைப்பது தவறு. இறுதியில் ஆண்கள்தாம் பெண்களின் விளையாட்டுப் பொம்மைகளாகி விடுகிறார்கள். (424)

. . . சில பெண்கள் சூனிய மந்திரங்களாலோ அல்லது தங்கள் அழகாலோ தங்கள் கணவன்மார்களை மயக்கி, சிலருடைய பலத்தை, சிலருடைய அறிவுக் கூர்மையை, சிலருடைய உயிரைக்கூட அழித்து விடுகிறார்கள். (426)

ஆனால் பொதுவாக, கல்ஹணர் பெண்களை வெறுப்பவரல்லர். ஹர்ஷனின் அவையிலிருந்த சிறந்த பெண்மணிகளைப் பற்றிய அவரது வருணனை (தரங்கம் VII) காளிதாசரின் சிறந்த வருணனைகளோடு ஒப்பிடத்தக்கது:

மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, கொண்டையாகக் கட்டப்பட்ட கூந்தலின் அழகைத் தாழம் பூவின் பொன்னிற மடல் எடுத்துக் காட்டியது; அழகிய நெற்றியின் மேல் தொங்கிய திலக மலர்கள் மெல்ல அசைந்தாடின; கோடாகத் தீட்டப்பட்ட கண்மை கண்களின் ஓரங்களைக் காதுகளுடன் இணைத்தது; பின்னப்பட்ட கூந்தலின் நுனியில் பொன்னாலான நூல் வில்போலக் கட்டப்பட்டிருந்தது; உடலின் கீழ்ப் பகுதியை அலங்கரித்த ஆடைகளின் நுனி தரையை முத்தமிட்டது; கொங்கைகளின் வளைவை எடுத்துக்காட்டிய மார்க்கச்சு புயங்களின் மேற்பாகத்தை மறைத்தது; நேர்த்தியான புருவங்களையுடைய மாதர்கள் கற்பூரப் பொடிபோல் வெண்மையாக ஒளிரும் புன்முறுவலுடன் இங்குமங்கும் நடமாடியவண்ணமிருந்தனர்; அவர்கள் ஆணுடை தரித்தபோது மன்மதனே மாறுவேடங் கொண்டு வந்தாற்போலக் காட்சியளித்தனர். (928 – 931)

இந்தியாவின் மற்ற பகுதிகளில் உள்ளவர்களைவிடக் காஷ்மீர மக்கள் அதிக மூட நம்பிக்கையுள்ளவர்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். பில்லி சூனியம், மாயமந்திரம் முதலியன தனிப்பட்டோரின் வாழ்க்கையைப் பாதிக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். பண்டைய காஷ்மீரத்தில் பில்லி சூனியம் முதலியன அதிகம் பரவியிருந்தன என்று இராஜதரங்கிணியிலிருந்து தெரியவருகிறது. பில்லி சூனியத்துக்கு ஆளான அரசர்களைப் பற்றிக் கல்ஹணர் குறிப்பிடுகிறார். மற்ற மக்களைப் போலவே அவரும் பில்லி சூனியம், மாயமந்திரங்கள் இவற்றை நம்பியதாகத் தெரிகிறது. ஆகவே தான், அவர் தான் வருணிக்கும் நிகழ்ச்சிகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளால் பாதிக்கப்பட்டதாக நம்பினார் போலும்!

கல்ஹணர்—ஒரு கவிஞர்

பண்டைய காஷ்மீரத்தைப்பற்றி ஏராளமான செய்திகளைத் தருவதால் இராஜதரங்கிணி வரலாற்று நோக்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுதான். ஆனால் இந்நூல் வால்டேரின் 'இரஷிய வரலாறு' அல்லது கிப்பனின் 'உரோமப்பேரரசின் சரிவும் அழிவும்' போன்றதன்று. இது முக்கியமாக ஒரு கலைப்படைப்பு, ஒரு காவியம். கல்ஹணர் தம்மை ஒரு வரலாற்று ஆசிரியராக மட்டுமின்றி ஒரு கவியாகவும் கருதினர். நூலின் முன்னுரையில் தம் பணியை அவர் இவ்வாறு விளக்குகிறார்:

> உண்மைக் கவிஞர்களின் திறமை பாராட்டத்தக்கது. அது அமுதத்தைவிட வலிமையுடையது. அதன்மூலம் கவிஞர்களின் புகழுடம்பு என்றென்றும் நிலைத்திருப்பது மட்டுமல்ல; அவர்களால் வருணிக்கப்பட்ட மற்றவர்களும் அமரத் தன்மை, பெற்றுவிடுகிறார்கள். நான்முகனையொத்த இக்கவிஞர்களைத் தவிர வேறு யாரால் தங்கள் நேர்த்தியான படைப்புகள்மூலம் இறந்த காலத்தை மக்கள்முன் மீண்டும் வரவழைக்க இயலும்!

இவ்வாறு கல்ஹணர் தம் நூலின் தொடக்கத்தில் ஒரு கவிஞரின் திறமைகளை குறிப்பிடுவது ஒரு கவிஞர் என்ற முறையில் தம் கலைக்கும் தம் நீண்ட கதைப் படைப்பின் பொருளடக்கத்துக்கும் இடையே உள்ள உறவுபற்றி அவர் கொண்டிருந்த கருத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது.

கல்ஹணர் கடுமையான இலக்கியப் பயிற்சி பெற்றிருந்தார். அவர் பழங்காலந்தொட்டுச் சிறந்த இலக்கியமாகக் கருதப்பட்ட நூல்களைக் கற்றிருந்ததோடு இலக்கணத்தையும் அணியியலையும் நன்கு பயின்றிருந்தார். இராமாயண, மகாபாரதங்களிலும் பழைய வரலாற்று நூல்களிலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஆயினும் அவர் மற்ற நூல்களைவிட மகாபாரதத்திலிருந்துதான் அதிக மேற்கோள்களை எடுத்தாண்டிருக்கிறார். கன்னோசி அரசன் ஹர்ஷவர்த்தனனின் வீரபராக்கிரமங்களை வருணித்துப் பாணர் என்ற கவிஞர் இயற்றிய காவியமான ஹர்ஷசரிதமும் பில்ஹணரின் விக்கிரமாங்கதேவசரிதமும் கல்ஹணரிடம் ஆழ்ந்த தாக்கத்தை உண்டாக்கியதாகத் தெரிகிறது. தமக்கு வழிகாட்டிகளாக இருந்த கவிஞர்களுக்கு அவர் தம் நூலில் வெகுவாக நன்றி தெரிவிக்கிறார்: ''திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியாத நல்ல கவிஞர்

களின் நற்பண்பு வணக்கத்திற்குரியது. இது இனிமையிலும் சாவாத்தன்மையிலும் அமுததாரையைவிடச் சிறந்தது. இதனால் அவர்கள் தங்கள் புகழுடம்பையும் பிறர்தம் புகழுடம்பையும் பாது காக்கின்றனர்.''

பழங்கதைகளையும் செவிவழிவந்த வரலாறுகளையும் கற்பதில் கல்ஹணருக்கு எல்லையற்ற ஆர்வமிருந்ததாக அவரது காலத்தில் வாழ்ந்த மங்கர் என்ற கவிஞர் கூறுகிறார். நிர்வாகம், பொருளா தாரம், வானவியல், காதல் கலையுட்பட மற்ற மென் கலைகள் இவையெல்லாவற்றிலும் கல்ஹணருக்குப் பழக்கமிருந்தது. கல்ஹணர் வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் பொருளா தாரத்தைவிட மென் கலைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார் ஆயினும் அவரது நூலில் தானிய விலைகள், நாணயச் செலாவணி, வரி விகிதங்கள், பஞ்சம் போன்ற பொருளாதாரச் செய்திகளும் துல்லியமாக விவரிக்கப்படுகின்றன. கங்கை வானத்திலிருந்து பூமிக்கு வந்த கதை, பாற்கடல் கடையப்பட்ட கதை இவை போன்ற பழங்காலத்துப் புனைகதைகளும் இவரது நூலில் குறிப் பிடப்படுகின்றன. காஷ்மீரத்தில் காணக்கிடைக்காத மாமரம், பனைமரம், போன்ற தாவரங்களையும் சிங்கம், முதலை போன்ற விலங்குகளையும் அவர் குறிப்பிடுவதிலிருந்து இந்தியாவின் மரபு வழிக் கல்வியில் அவருக்கு நல்ல தேர்ச்சி இருந்தது தெரிகிறது என்று ஆர். எஸ். பண்டிட் கூறுகிறார்.

இராஜதரங்கிணி உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஒரு காவியம் அல்லது 'சரிதம்' (வீர நிகழ்ச்சிகளை வருணிக்கும் கவிதைப் படைப்பு). சுமார் எட்டாயிரம் செய்யுட்களைக் கொண்ட இக் காவியம் எட்டுத் தரங்கங் (அலை)களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மிகத் தொன்மையான காலத்திலிருந்து கல்ஹணரின் காலம்வரை காஷ்மீரத்தை ஆண்ட அரச மரபுகளை வரிசை தவறாமல் வருணிப்ப தால் இராஜதரங்கிணி மற்ற 'சரித'ங்களிலிருந்து வேறுபட்டிருக் கிறது. பரந்த கல்வியறிவு பெற்றிருந்த கல்ஹணரின் ஆர்வம் பழம் பெருங்காவியங்களின் கவிதைச் சிறப்பாலும் மக்களைக் கவரும் தன்மையாலும் தூண்டுதல் பெற்றது. புகழ்பெற்ற மகா கவிகளின் வழியை அவரும் பின்பற்றித் தம் நாட்டின் வரலாற்றை எழுதத் துணிந்தார். அவர் தம் காலத்து இலக்கிய வரலாற்று மரபுகளுக் கேற்பக் கவிதையுருவத்தைத் தேர்ந்தெடுத்தார். அவர் தம் நூலைச் சில இடங்களில் வலிந்து புனையப்பட்ட அணிகளாலும் அலங்கரித்தார்.

சாதாரணமாகப் பெருங்காவியங்களில் பருவங்களின் வருணனை, இயற்கை வருணனை, நீண்ட உவமைகள் முதலியன, வாசகனுக்கு அலுப்பூட்டும் கூறுகள் காணப்படுவது வழக்கம். ஆயினும் அவை

இராஜதரங்கிணியில் இல்லை. இக்காவியம் பெரும்பாலும் செயற்கையணிகளின்றி வாசகனுக்கு உற்சாகமூட்டும் நேர்முகத் தன்மையும் எளிய நடையும் கொண்டதாக இருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கிய மரபைத் தாம் உதறித் தள்ளவில்லை என்கிறார் கல்ஹணர். விரித்துரைக்கும் கவிதைக் கலை அவருக்குத் தெரியாத ஒன்றல்ல. வழக்கமான இலக்கிய அணிகளை அவர் அடியோடு ஒதுக்கிவிடவுமில்லை. அவர் தம் படைப்பின் கதைக் கருவாகக் காஷ்மீர வரலாற்றைத் தேர்ந்தெடுத்து அஃது ஒரு மரபுக் காவியத்தைப் படைக்க வாய்ப்பளித்தது என்பதற்காகவே; அதன் உள்ளார்ந்த மதிப்புக்காக அல்ல. ''இத்தகைய வரலாற்றில் விரித்துரைகள்மூலம் முக்கிய பொருளிலிருந்து அதிகம் விலகிச் செல்ல முடியாது. ஆயினும் நல்லோருக்கு மகிழ்வூட்ட இதில் ஏதாவது இருக்கும்'' என்கிறார் அவர். இராஜதரங்கிணியில் முக்கிய பொருளிலிருந்து விலகிய பகுதிகள் ஹர்ஷசரிதத்திலோ விக்கிரமாங்கதேவசரிதத்திலோ உள்ள இத்தகைய பகுதிகளைவிடக் குறைவுதான். காரணம், கல்ஹணர் தம் காவியம் அதிகம் நீண்டுபோவதைப்பற்றிக் கவலைப்பட்டார். டாக்டர் எச். எச். வில்சன் இராஜதரங்கிணியைப்பற்றிச் சொல்கிறார்: ''எல்லாத்துறைகளிலும் இயற்றப்பட்ட பெரும்பாலான நூல்களைப்போல் இதுவும் கவிதை வடிவில் இயற்றப்பட்டது. கவிதை என்ற முறையில் உணர்ச்சி வெளிப்பாட்டிலும் நடையிலும் சிறந்த பல பகுதிகள் இதில் உண்டு.'' டாக்டர் வில்சன் கி.பி. 1825-ல் 'ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ்' என்ற பருவ வெளியீட்டிதழ் ஒன்றில் வெளியிட்ட தம் பாராட்டுரையின் முன்னுரையில் கூறுகிறார்: ''வடமொழிக் காவியங்களுக்குள் 'சரித்திரம்' என்று சொல்லத்தக்க ஒரே நூல் காஷ்மீரத்தின் வரலாற்றைக் கூறும் இராஜதரங்கிணிதான்.''[1]

தாம் எடுத்துக்கொண்ட கதையின் பொருள் கவிஞர் என்ற முறையில் தம் பணியை இயக்கியது என்று கல்ஹணர் ஒப்புக்கொள்கிறார். அலங்கார சாத்திரவிதிப்படி ஒரு காவியமோ அதன் முக்கிய பகுதிகளோ ஒரு முக்கிய உணர்ச்சி (ரஸம்)யைச் சித்திரிக்க வேண்டும். அணியியல் (rhetoric) நிபுணரும், காஷ்மீரத்தைச் சேர்ந்தவரும் 'காவியப் பிரகாசம்' என்ற நூலின் ஆசிரியருமான மம்மடர் ''வாழ்க்கைக் கலையைக் கற்றுக் கொடுப்பது காவியத்தின் நோக்கங்களில் ஒன்று'' என்று கூறுகிறார். காவியம் என்பது ''ரஸத்தை உயிர்நாடியாகக் கொண்ட பேச்சு'' என்று அவர் விளக்குகிறார். ரஸங்கள் எட்டு: சிருங்காரம் (காதல்), ஹாஸ்யம் (நகை), கருணம் (சோகம்), ரௌத்ரம் (வெகுளி), வீரம், பயம்,

[1] வில்சன் எச். எச். 'காஷ்மீரத்தின் இந்து வரலாறு.' திரும்பவெளியிட்டது சுசீல்குப்தா (இந்தியா) பிரைவேட் லிமிடெட், கல்கத்தா 1960.

பீபத்ஸம் (அருவருப்பு), அத்புதம் (வியப்பு). இவையே கவிதையின் சத்து. கல்ஹணர் இந்த ரஸங்களைப் பொறுத்தமட்டில் மம்மடரை பின்பற்றினர்; ஆனால் இவ்வெட்டு ரஸங்களுடன் சாந்தம் (அமைதி அல்லது மனத்தின் பற்றற்றதன்மை) என்ற ஒன்பதாவது ரஸத்தையும் சேர்த்துக்கொண்டார். இராஜதரங்கிணியில் மிகவும் மேலெழுந்து தோன்றும் ரஸம் இதுவேயாகும். கல்ஹணர் கேட்கிறர்: ''கவிஞன் தன் தனித்திறமையால் பிறர் புரிந்துகொள்ளமுடியாத பொருள்களையும் அறியக்கூடுமானல் அவன் தெய்வீக ஒளி பெற்றவன் என்பதற்கு இதனைவிட வேறு என்ன குறிப்பு வேண்டும்?'' அவர் வாசகனைப் பொறுமையாக இருக்கும்படியும் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டாமென்றும் வேண்டுகிறர்.

கல்ஹணரால் தேர்ந்தெடுக்கப்பட்ட காவியவடிவம் அவர் விவரிக்கும் வரலாற்றின் நடையை அறுதியிடுகின்றது. ஒரு கவிஞனின் கலைத்திறனைக் காட்டும் உருவகங்கள், உவமைகள், சிலேடைகள் முதலிய கவிதையணிகள் இராஜதரங்கிணியில் மிகுதியாக விரவிக்கிடக்கின்றன. ஒவ்வொரு தரங்கத்தின் துவக்கத்திலும் முடிவிலும் காட்சி மாற்றத்துக்கு ஏற்றாற்போல் செய்யுட்களின் சந்தங்கள் மாறுகின்றன. யுதிட்டிரன் நாடு கடத்தப்படுவது, சக்கரவர்மன் அல்லது சுஸ்ஸலனின் வெற்றியுடன் கூடிய தலைநகர்ப் பிரவேசம், பிட்சாசரனின் இறுதிப்போர், ஹர்ஷனின் மரணம்—இவை போன்ற நிகழ்ச்சிகளின் வருணனையில் அணிகள் நிறைந்த கவிதை இயற்றுவதில் கல்ஹணரின் திறமை வெளிப்படுகிறது. ஆர். எஸ். பண்டிட் கல்ஹணரை ஏஷிலஸ், ஹோமர் ஆகிய கவிஞர்களுடன் ஒப்பிட்டு அவர் ''உண்மை, உலகளாவிய பொதுத்தன்மை இவற்றின் கவிஞர்'' என்று புகழ்கிறர். கல்ஹணர் இப்புகழுரைக்குத் தகுதியானவரேயாவார். அவருடைய எழுத்தில் காஷ்மீரத்தின் பழங்காலம் உயிர்பெற்று ஒளிர்கிறது; திரும்பப் படைக்கப் பெற்றுத்திகழ்கிறது. அவருடைய கவிதைத் திறமையே காஷ்மீரத்தின் பழைய வரலாற்றை மக்களின் நினைவிலிருந்து மறையாமல் காப்பாற்றியிருக்கிறது.

கதை சொல்வதில் கல்ஹணரின் இணையற்ற திறமைக்கு எடுத்துக்காட்டாக மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் வருணனைகளைக்[2] காண்போம்:

முதலாவது யுதிட்டிரனுடைய அமைச்சர்கள் அவனை அரியணையிலிருந்து இறக்கி 'நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கிறர்கள்.' அரசனும் அவனுடைய புடைசூழ்ந்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேறுவது முதல் தரங்கத்தில் இவ்வாறு வருணிக்கப்படுகிறது.

[2] இப்பகுதிகள் ஆர். எஸ். பண்டிட்டின் மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப் பட்டவை.

அழகிய மலைப் பாதைகள் வழியே சென்ற அரசன் களைத்துப்போய் மரங்களின் நிழலில் இளைப்பாறினான்; இளைப்பாறிய பிறகு தன் பயணத்தை மறுபடி தொடங்கியபோது தன் பெருந்துன்பங்களைச் சற்று மறந்தான்; ஆனால் சற்று நேரத்தில் வெகு தொலைவிலிருந்து நாகரிகம் தெரியாத மக்களின் ஒலி அவன் காதில் விழுந்தபோது அவன் வாட்டமுற்றவனாகக் காணப்பட்டான்; அவன் மனம் ஒரு நீர்வீழ்ச்சிபோல் படுகுழியில் விழுந்தது. (369)

அழகிய தாமரைக்கொடி போன்ற மென்மையான உடலைக் கொண்ட அவனுடைய பட்டத்தரசி பலவிதக் கொடிகள் மூலிகைகளின் நறுமணம்மிக்க காடுகளையும் பாசியால் வழவழப்பாக இருக்கும் பெரும் பாறைகளுடன் கூடிய மலையாறுகளையும் கடந்ததில் களைப்புற்றவளாய் அவனுடைய மடிமேல் சாய்ந்து நினைவிழந்தாள். (370)

நாட்டின் எல்லையிலிருந்த கிளைமலைத் தொடரையடைந்ததும் அரசகுலப் பெண்கள் கைநிறைய மலர்களையளித்து விடைபெற்றுக்கொண்டார்கள். அப்போது மலையிடுக்குகளில் தங்கள் கூடுகளில் இளைப்பாறிக் கொண்டிருந்த பறவைகள் கூட்டங்கூட்டமாகக் கீழே பறந்து வந்து தங்கள் சிறகுகளை விரித்தும் அலகுகளைத் தரையை நோக்கிச் சாய்த்தும் ஓலமிடத் தொடங்கின. (371)

தங்கள் தலையிலிருந்து நழுவிய மேலாடைகளை மார்பில் கட்டிக்கொண்டிருந்த அரசகுலப் பெண்கள் தங்கள் சொந்த நாட்டைத் தொலைவிலிருந்து பார்த்துக் கைகளைத் தலைமேல் வைத்துக்கொண்டு அழுத கண்ணீர் வழியிலுள்ள ஓர் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது. (372)

இசையினிமையுள்ள சொல்வளத்திற்கும் மென்மையான பண்புகட்கும் பேர்போன மூலச் செய்யுட்களின் அழகு மொழிபெயர்ப்பில் சற்றுச் சிதைந்துவிட்டது. ஆயினும் இவற்றில் வெளிப்படும் சோக ரஸம் மாபெரும் வடமொழிக் கவிஞர்கள், நாடகாசிரியர்கள், மகாகவி ஷேக்ஸ்பியர் ஆகியோரது படைப்புக்களுடன் ஒப்பிடத்தக்கது. ஒரு குடிசையில் புகலடைந்திருந்த ஹர்ஷ மன்னன் தமரர்களால் கபடமாகக் கொல்லப்படும் நிகழ்ச்சியின் வருணனையிலும் (தரங்கம் VII) இதே சோக ரஸம் மேலோங்கியிருப்பதைக் காணலாம்:

அந்த வீரன் அரசனின் ஓங்கிய வாளை விலக்கிக்கொண்டு இமைப்பொழுதில் அவனுடைய மார்பில் உடைவாளால் இருமுறை தாக்கினான். (1711)

'ஓ மகேசுவரா!' என்று இருமுறை கூவிய அரசன் பிண மாகி வேரற்ற மரம்போல் தரையில் வீழ்ந்தான். (1712)

பெரும் வல்லமையுள்ள அரசனுக இருந்த அவன் ஒரு கள்வனைப்போல் ஓடியொளிந்து, இறுதியில் ஒரு குடியிருப்பு வீட்டில் மரணத்தை எதிர்கொண்டான். (1713)

இந்தக் காலகட்டத்தில் அவனைப்போல் செல்வாக்குடன் வாழ்ந்த அரசனுமில்லன்; வேறெந்த அரசனின் சடலமும் இவ்வளவு இழிவான முறையில் தகனம் செய்யப்படவுமில்லை. (1714)

போரை விரும்பாதவன் என்ற ஒரே காரணத்தால் சிறந்த பண்புடைய அம்மன்னன் உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சி யடைந்தான். (1715)

. . . தன் சேவகர்களால் கைவிடப்பட்டு, தன் அரசு வழி முற்றிலும் அழிக்கப்பட்டு அவன் நிர்வாணமாக, ஒரு பரதேசி போல, கௌரகன் என்ற ஒரு மரக்கட்டைக் கிடங்கு அதிகாரி யால் தகனம் செய்யப்பட்டான். (1727)

ஹர்ஷனின் ''எண்ணற்ற ஆசைக் கிழத்திகளில் ஒருவரும் அவனுக்காக வருந்தவில்லை'' என்பதையும், அவனுடைய ஊழியர் களில் யாரும் ''அவனைச் சாவில் பின்பற்றவில்லை, தங்கள் பதவி களிலிருந்து விலகவுமில்லை'' என்பதையும் சொல்லும்போது கல்ஹணர் தரங்கத்தின் கடைசிச் செய்யுளுக்கு முந்தைய செய்யுளில் மனித அனுபவங்களின் நிலையில்லாமைபற்றித் தத்துவம் பேசு கிறார்:

தொடக்கத்திலும் ஒன்றுமில்லை, முடிவிலும் ஒன்றுமில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதன் இன்பதுன்ப உணர்ச்சிகளுக்கு ஆளாகிறான். தலையுங் காலுமற்ற ஒரு நடிகன்போல் அவன் தன் பாகத்தைத் திரும்பத் திரும்ப நடித்துவிட்டுக் கடைசியில் வாழ்க்கைத் திரைக்குப் பின்னால் மறைந்துவிடுகிறான்—அவன் எங்கு போகிறானே, யாருக்குத் தெரியும்! (1731)

சக்கரவர்மன் தந்திரிக் கூலிப் படைகளைத் தோற்கடித்துவிட்டு தன் தலைநகரான ஸ்ரீநகரத்துக்குள் விழாக்கோலத்துடன் நுழை வதும், ஒரு வீர இளவரசன் இச்சகம் பாடுபவன் ஒருவனால் கொல் லப்படுவதுமான கதைப் பகுதி (தரங்கம் V) வீரரஸத்தைச் சித்தி ரிப்பதில் கவிஞர் கல்ஹணரின் கலைத்திறமையைக் காட்டுகிறது:

மறுநாள் ஆற்றல் வாய்ந்த சம்புவர்த்தனன் போரில் தோல்வியுற்றுச் சிதறிப்போன தந்திரிப் படைகளை மறுபடி

சேர்க்க ஏற்பாடு செய்தான். இதற்கிடையில் சக்கரவர்மன் பிரதானிகளும், அமைச்சர்களும், மெய்க்காப்பாளர்களும் அரண்மனையின் ஆதரவு பெற்றவர்களும், வெவ்வேறு பாதைகளின் வழியே வந்து கூடி மகிழ்ச்சியோடு ஆர்ப்பரிக்கும் படைவீரர்களும் புடைசூழ விழாக்கோலத்துடன் பட்டணப் பிரவேசம் செய்தான்; அரசன் ஏறியிருந்த உயர்ந்த சாதிக் குதிரை மற்ற குதிரைகளுக்கு நடுவில் குதிநடை போட்டது; அரசனின் தலைக் கவசம் நழுவியபோது அவன் கடிவாளம் பிடித்த தன் இடதுகையால் அதைச் சரிசெய்து கொண்டான்; வியர்வையால் நனைந்த அவனது வலதுகை உடைவாளைப் பிடித்திருந்தது; வாளின் கைப்பிடியில் பிரதிபலித்த, சூரிய ஒளியில் அவனுடைய காதணிகள் பளபளத்தன. கனமாகவும் இறுக்கமாகவும் இருந்த கவசம் அவனது கழுத்தில் அழுத்தியதால் அவன் எரிச்சலடைந்து புருவங்களைச் சுளித்தபோது அவன் முகம் பயங்கரமாகக் காட்சியளித்தது; நகரத்துக் கடைகளைக் கொள்ளையடித்தவர்களை அவன் கோபத்துடன் மிரட்டினான்; மிரண்டுபோயிருந்த நகர மக்களை அவன் தலையசைவுகளாலும் கண்சாடைகளாலும் சமாதானப்படுத்தினான்; அப்போது நகர மக்களின் வாழ்த்தொலிகளை மீறிக் கொண்டு ஒலித்த போர்ப் பறைகளின் ஓசை காதைத் தாக்கியது. (341—347)

வெற்றிப் பெருமிதத்துடன் அவன் அரியணையில் அமர்ந்ததும் பூபட்டன் எங்கிருந்தோ சம்புவர்த்தனனை விலங்கிட்டு அழைத்து வந்தான். (348)

அந்தப் பாவி (பூபட்டன்) தன் உண்மையான அரசபக்தியைக் காட்டுவதற்காக, வாள் வீச்சுக்குப் பயந்து கண்களை மூடிக்கொண்ட சம்புவர்த்தனனை, ஒரு சண்டாளன்போல், மன்னனின் கண் முன்னால் கொன்றுவிட்டான். (349)

பிட்சாசரனின் கடைசிப் போர் பற்றிய வருணனையில் (தரங்கம் VIII) சோகரஸமும் வீரரஸமும் இணைகின்றன. கீழ்க்கண்ட சில செய்யுட்கள் மேலை நாட்டிலோ கீழை நாட்டிலோ இதுவரை இயற்றப்பட்டுள்ள எந்த வீரரஸக் கவிதையுடனும் ஒப்பிடத்தக்கவை:

சிங்கம் போன்ற பிட்சாசரன் தன்னைச் சூழ்ந்த அம்புகளை மீறிக்கொண்டு வந்தபோது காசர்கள் மேல்மட்டத்திலிருந்து அவன் மேல் கல்மாரி பொழிந்தார்கள். (1762)

பின்வாங்கிய அவனது உடலை இந்தக் கல் மழை தாக்க, ஓர் அம்பு அவனுடைய பக்கவாட்டில் பாய்ந்து ஈரலைச் சிதைத்தது. (1763)

மூன்றடிகள் முன்னே வைத்த அவன் திடீரென்று கீழே விழுந்தான். அந்த அதிர்ச்சியில் பூமி நடுங்கியது. அதே சமயம் வெகு காலமாக அதிகரித்துக்கொண்டே வந்த அவனுடைய எதிரியின் நடுக்கமும் மறைந்துவிட்டது. (1764)

உயர்குடி மக்களால் சூழப்பட்ட பிட்சாசரன், பூத்துக் குலுங்கும் மரங்களடர்ந்த ஒரு மலை இடியால் தாக்கப்பட்டாற் போல், சாவிலும் கம்பீரமாகக் காட்சியளித்தான். (1767)

ஹர்ஷனின் வழித்தோன்றலான பிட்சாசரன் அரசகுலத்தாரால் சூழப்பட்டு உயர்ந்த பெருமையைப் பெற்றுன். (1768)

விதி எப்போதும் அவனுக்குப் பாதகமாக இருந்தாலும் அவன் அதைத் தயக்கமின்றி வரவேற்றுன். இறுதியில் விதி அவனிடம் தன் தோல்வியை ஒப்புக்கொண்டது. (1769)

மிகுந்த செல்வமும் செல்வாக்கும் நிறைந்த முற்கால மன்னர்களுக்குமுன் அவன் எம்மாத்திரம்! ஆயினும் வாழ்வின் இறுதியில் அவன் சாதித்த வீர பராக்கிரமங்களுக்குமுன் அவர்கள் ஒன்றுமே இல்லை! (1770)

அவன் இறந்த பின்னும் பல நாழிகைகள் வரை அவனுடைய கண்களின் அசைவும், புருவத் துடிப்பும், முறுவலும் குறையவில்லை. (1777)

அவனில் ஒரு பகுதி அப்சர மாதர்கள் புடைசூழ சுவர்க்கத்தை நாடியது; இன்னொரு பகுதியோ மண்ணும் நீரும் குளிர்ச்சியானவை என்று அவற்றைப் புறக்கணித்துவிட்டுத் தீயில் இறங்கியது. (1778)

இதற்குச் சற்று முன்பு பிட்சாசரன் துரோகிகளான தன் பிரதானிகளாலும் அமைச்சர்களாலும் படை வீரர்களாலும் கைவிடப்பட்டு, சொக்கட்டான் ஆடிப் பொழுதைக் கழிக்கிறுன். அவன் ''தன்னைக் கொலை செய்ய வரப்போகிறவர்களுடன் போரிடத் துடிக்கிறுன்; அவர்கள் வரத் தாமதம் ஏற்படுவது கண்டு பொறுமை இழக்கிறுன்.'' தான் தோற்றுவிட்டோமென்று உணர்ந்த, அஞ்சாநெஞ்சம் படைத்த அவ்வீரனைப்பற்றிய வருணனை எப்போதும் நினைவிலிருக்கக்கூடிய ஒரு சொல்லோவியமாகத் திகழ்கிறது:

அவனது அடர்த்தியான கறுத்த கேசம் தொடர்ந்த கவலைகள் காரணமாக உதிர்ந்துபோயிருந்தது; அவனுடைய போருடையின் நுனி வெற்றிக் கொடிபோல் காற்றில் உற்சாகமாகப் பறந்தது; பிரகாசிக்கும் நல்முத்துக் காதணிகள் கன்னங்களுக்கு முன்னுல் ஆட, அவன் பூசியிருந்த சந்தனம்

அவனது வீரச் சிரிப்புபோல் பளபளக்க, தன் ஆச்சரியகரமான வாழ்வின் முடிவில் அவன் தோல்வியைக் காலால் உதைத்து அந்த அடக்கிவிட்டவன்போலத் தோற்றமளித்தான்; அவனுடைய வாளும் கண்களும் கீழாடைகளும் தீப்பந்தம்போல் ஒளிவீசின; அவனுடைய கீழாடைகள் மஞ்சள் நிறமாக இருந்தன; உறுதியாக முன் பக்கம் நீட்டிக்கொண்டிருந்த வெளிர் நிறக் கீழுதட்டின் ஓரங்கள் துடித்தன; அடர்ந்த பிடரியைக் கொண்ட ஒரு வீரச் சிங்கத்தை ஒத்திருந்தான் அவன்; அவனது கண்களின் அசைவு, மனோபலத்தின் வெளிப்பாடு, நடை இவை மற்ற அங்க அசைவுகளோடு நேர்த்தியாக இணைந்து வேகம், உறுதி, நளினம் போன்ற அழகுகளை வெளிக்காட்ட, அவன் கம்பீரமே உருவெடுத்தாற்போன்ற தோற்றத்துடன், மானமே உயிராகக் கருதும் வீரர்களுக்குரிய தன்னம்பிக்கையால் அலங்கரிக்கப்பட்டவனாகக் காட்சியளித்தான். அவன் தனக்கு நேரவிருக்கும் முடிவைப் பற்றிக் கவலைப்படாமல் எதிரிகளைச் சந்திக்க வெளியே வந்தபோது அவனைப் பார்த்தவர்களுக்கு இவ்வாறு காட்சியளித்தான்.

(1744–50)

காஷ்மீரத்தின் அரியணையை கி. பி. 1121இல் மீண்டும் கைப்பற்றிய சுஸ்ஸலன் ''தன் எதிரிகளை மீறிக்கொண்டு திடீரென்று தலைநகர் வாயிலில் தோன்றினான்'' (தரங்கம் VIII, 497). அவனுடைய பட்டணப் பிரவேசம் இன்னொரு வீரவருணனைக்கு இடமளிக்கிறது:

கதிரவனின் தீவிர வெப்பத்தால் தவிட்டு நிறமான உடலும், நீண்ட தாடியாலும் சுளித்த புருவங்களாலும் மறைக்கப்பட்ட முகமும், சினத்தால் சுழலும் கண்களும், விடைத்த மூக்குமாக ஸ்ரீநகருக்குள் நுழைந்த சுஸ்ஸலன் தனக்குத் துரோகம் செய்த படை வீரர்களைத் தெருக்களிலும் பொதுவிடங்களிலும் வெளிப்படையாகக் கோபத்துடன் அச்சுறுத்தினான். அவனுக்கு முன்பு அநீதியிழைத்த நகர மக்கள் இப்போது திரள் திரளாக குழுமி அவனை வாழ்த்தி அவன்மேல் மலர் மாரி பொழிந்தது கண்டு அவர்களை ஏளனமாக நோக்கினான். அவன் தன் கவசத்தைத் தோள்களின்மேல் அலட்சியமாகப் போட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய தலைக் கவசத்துக்கு வெளியே தொங்கிக்கொண்டிருந்த கேசமும் கண்ணிமைகளும் புழுதி படிந்து சாம்பல் நிறமாக இருந்தன. உருவிய வாட்களுடன் வரிசைவரிசையாக அணிவகுத்துச் சென்ற குதிரை வீரர்களுக்கு நடுவே அவன் உறையிலிடப்பட்ட வாளுடன், குதிநடைபோட்டுச் செல்லும் குதிரை

யின்மேல் பவனி வந்தான். சுஸ்ஸலன் ஸ்ரீநகரத்துக்குள் பிரவேசித்தபோது வெற்றி முழக்கங்களும், போர் வீரர்கள் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியில் கொட்டிய பேரிகைகளின் முழக்கமும் வானத்தில் எதிரொலித்தன. (947–953)

லலிதாதித்தியனின் ஆணையால் கொல்லப்பட்ட கௌட (வங்க) அரசனின் படை வீரர்களை ''வீரம் மிகுந்த கௌடர்கள்'' என்று புகழ்கிறார் கல்ஹணர். அவர்கள் 'பிணையாக வைக்கப் பட்டிருந்த தெய்வத்தின் கோவிலைச் சூழ்ந்து கொண்டார்கள்' என்று நாலாவது தரங்கத்தில் அவர் கூறுகிறார். கோவில் அர்ச் சகர்கள் அவர்கள் உள்ளே நுழைவதைத் தடுத்தபோது,

போர் வெறிகொண்ட அவர்கள் இராமசுவாமியின் வெள்ளிச் சிலையைப் பரிகாச கேசவரின் சிலை என்று தவறாக நினைத்து அதை அடியோடு பெயர்த்துத் தூள் தூளாக் கினார்கள். (327)

ஸ்ரீநகரத்திலிருந்து வெளியே வந்த காஷ்மீரப் படைகள் அவர்களைத் தாக்கிக் கொன்றுகொண்டிருக்கும்போதே அவர்கள் அச்சிலையின் தூளைத் திக்கெட்டும் இறைத்தார்கள். (328)

அந்தக் கரிய நீல வீரர்கள் கொல்லப்பட்டுத் தரையில் விழுந்தபோது, இரத்தக் கறைகள் படிந்த அவர்களுடைய உடல்கள் நீலாஞ்சனக் குன்றினின்றும் சிதறிச் செந்நிறத் தாதுக் குழம்புடன் பளபளக்கும் பாறைகளை ஒத்திருந்தன. (329)

அவர்கள் தங்கள் இரத்தத்தை மழையாகப் பொழிந்து தங்கள் தனிச் சிறப்பான இராஜ பக்தியை ஒளிரச் செய் தார்கள். அவர்களுடைய தியாகம் பூமியைப் புனிதமாக் கியது. (330)

தங்கள் தலைவனின் மரணத்துக்குப் பழிவாங்கும் பொருட்டு வங்காளத்திலிருந்து நெடும் பயணத்தை மேற்கொண்டு தங்கள் உயிரைத் தியாகம் செய்த, இராஜ விசுவாசம் மிகுந்த இவ் வீரர் களைப் பற்றிக் கல்ஹணர் தம் கருத்தைப் பொருத்தமான உருவக அணிகள் நிறைந்த ஒரு நீண்ட செய்யுளில் வெளியிடுகிறார்:

இடிபயத்தை வைரம் போக்குகிறது; சிவப்புக்கல் செழிப்பை நல்குகிறது; மரகதம் எல்லாவித நச்சுகளையும் முறிக்கிறது; இவ்வாறு ஒவ்வொரு வகை இரத்தினமும் ஒரு குறிப்பிட்ட சிறப்பாற்றலுடன் செயற்படுகிறது; ஆனால் அளவில்லாப் பெருமையுடைய மனித இரத்தினங்களால் எதைத்தான் சாதிக்கமுடியாது? (331)

போரின் நடுவிலும் தன் நிதானத்தையிழக்காத சுஸ்ஸலனைப் பற்றி எழுதும்போது கல்ஹணர் சொல்கிறார்: ''திடீரென்று நேரும் ஆபத்து பயத்தை விளைவிக்கிறது. ஆனால் ஆபத்து தலைக்கு மேல் போன பின்னர் அத்தகைய அச்ச உணர்வு இருப்பதில்லை; தண்ணீர் கைமேல் சொட்டும்போது குளிர்ச்சியாக இருக்கும்; ஆனால் தண்ணீருக்குள் முழுகிவிட்டால் குளிர் தெரியாது'' (தரங்கம் VIII, 1097). ''ஓர் அந்தண இல்லறத்தான் விழாக் காலத்தில் தன் வீட்டில் ஓர் அறையிலிருந்து வேறோர் அறைக்குச் செல்வதுபோல், பல்வேறு போர்களிடையே அரசன் சற்றும் பதட்டப்படாமல் ஒரு கவலையுமின்றி உலாவினான்'' என்ற வருணனை (1095)யில் சுஸ்ஸலனின் நிலை இந்தக் காலத்தில் தொந்தரைக்குள்ளாகும் ஒரு நாட்டுத் தலைவனுக்கு எவ்வளவு சிறந்த படிப்பினையாக அமைகிறது!

கல்ஹணர்—ஒரு வரலாற்று ஆசிரியர்

வறுமை காரணமாகவோ அல்லது ஆசையாலோ வீண் கர்வம் படைத்த மன்னர்களின் காலடியில் தங்கள் திறமையைச் சமர்ப்பிக்கும் அந்தண அறிஞர்களில் அல்லது கவிஞர்களில் ஒருவரல்லர் கல்ஹணர். இந்திய நூலாசிரியர்கள், குறிப்பாக அரசவைக் கவிஞர்கள், தங்களுக்கு ஆதரவளித்த அரசர்களை மிகைபடப் புகழ்ந்து பாடுவது ஒரு வழக்கமான இலக்கிய மரபு. இம் மரபுக்கு மாறுபட்டது இராஜதரங்கிணி. இது ஃபிர்தெளஸியின் 'ஷாநாமா'போல் செவி வழிக் கதைகளின் தொகுப்பும் அன்று.

வரலாற்று ஆசிரியனின் பணியைப் பற்றிக் கல்ஹணர் இவ்வாறு கூறுகிறார்: ''கடந்த கால நிகழ்ச்சிகளை வருணிப்பதில் ஒருதலைச் சார்பையும் காரணமற்ற வெறுப்பையும் ஒதுக்கிவிட்டு நீதிபதிபோல் எழுதுபவனே பாராட்டுக்குரியவன்.' இந்த அளவு கோலை அவர் தம் நூலில் பின்பற்றியிருக்கிறார்.

'மாஞ்செஸ்டர் கார்டியன்' புகழ்படைத்த சி. பி. ஸ்காட் பத்திரிகையின் கடமையை மனத்தில்கொண்டு ''உண்மைகள் புனிதமானவை'' என்று சொல்கிறார். பத்திரிகை என்பது தன் உயர்ந்த நிலையில் இக் கால வரலாறு ஆகும். ஸ்காட்டின் கூற்று பழங்கால வரலாற்றுக்கு இன்னும் பொருந்தும். ''விருப்பு வெறுப்புகளைத் தவிர்த்து உண்மைச் செய்திகளை விவரிப்பதில் மட்டும் தன் எழுத்தைப் பயன்படுத்தும் சீரிய கவிஞன் புகழுக் குரியவன்,'' என்ற கல்ஹணரின் கூற்று உண்மைச் செய்திகளில் அவரது ஈடுபாட்டைக் காட்டுகிறது.

தம் நூலின் பொருளான இரண்டாயிரத்து முந்நூற்று முப்பத்திமூன்று ஆண்டு வரலாற்றைப் பற்றி அவர் என்ன நினைத் தார் என்பது நூலில் தொடக்கச் செய்யுட்களிலிருந்து நன்கு தெரி கிறது:

> சுவிரதர் பண்டைய அரசர்களின் வரலாறுகளை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ள வசதியாக அவற்றைச் சுருக்கி ஒரு காவியமாக எழுதினர். இதன் விளைவாகப் பழைய வரலாறுகள் மறைந்துபோய்விட்டன. சுவிரதர் தம் கல்வித் திறமையைக் காவியத்தில் வெளிப்படுத்தி அதைக் கடினமாக வும் எளிதில் புரிந்துகொள்ள முடியாததாகவும் செய்து விட்டார்.

க்ஷேமேந்திரரின் 'அரச வரலாற்றில்' கவிதை நயம் இருந்தாலும் ஒரு விசித்திரமான கவனக் குறைவு காரணமாக அதில் எந்தப் பகுதியும் தவறுகளற்றதாக இல்லை. அவர் தம் நூலுக்கு ஆதரவாக இரண்டு காரணங்களைக் கூறுகிறார்: ஒன்று, அவர் காஷ்மீரத்தின் வரலாறு பற்றிய பல நூல்களை ஆராய்ந்து ஒப்பீடு செய்திருக்கிறார்; இரண்டு, அவர் பழைய அரசர்களின் கல்வெட்டுகள், மரபுக் கொடி வழி விவரங்கள், புகழ் பெற்றவர்களின் நினைவுக் குறிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருக்கிறார்.

நான் அரசர்களின் வரலாறு பற்றிப் பழைய அறிஞர்கள் எழுதியுள்ள பதினேரு நூல்களையும் நீல முனிவரின் கோட்பாடுகளையும் (நீலமத புராணம்) ஆராய்ந்திருக்கிறேன்.

பழைய அரசர்களின் முடிசூட்டு விழாவின்போது வெளியிடப்பட்ட ஆணைகள், அவர்களுடன் தொடர்புள்ள பொருட்களில் செதுக்கப்பட்ட செய்திகள் மரபுக் கொடி வழிப் பட்டியல்களடங்கிய மெய்கீர்த்திகள், புகழ்பெற்றவர்களின் நினைவுக் குறிப்புகள் இவற்றை ஆராய்ந்து அவற்றிலுள்ள தவறுகளால் நேரும் தொந்தரவைத் தவிர்த்திருக்கிறேன்.

இங்ஙனம் கல்ஹணர் நமக்கு முற்பட்ட வரலாறுகளைக் குறிப்பிடுவதுடன் மதிப்பீடும் செய்கிறார். காஷ்மீர மன்னர்களின் வரலாறுகளடங்கிய பழங்காலத்து நீண்ட நூல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. சுவிரதர் பண்டைய வரலாறுகளை ஒரு கையேட்டில் சுருக்கித் தந்தமையே இதற்குக் காரணம் என்று குறிப்பிடுகிறார் கல்ஹணர். பண்டைய காஷ்மீர மன்னர்களைப்பற்றிய பதினெரு அல்லது அதற்கு மேற்பட்ட வரலாறுகள் இருந்தால் இராஜதரங்கிணி இயற்றப்படவேண்டிய காரணம் என்ன? காரணத்தைக் கல்ஹணரே கூறுகிறார்: மூன்றுவது கோநந்தன் காலத்திலிருந்து தொடர்ச்சியான, முழுமையான வரலாறு கிடைக்கவில்லை. ''பழைய நிகழ்ச்சிகளின் வரலாறு துண்டுப் பட்டுக் கிடந்ததால் அதைத் தொடர்ச்சியாகத் தொகுத்தளிக்க'' விரும்பினர் அவர். விரிவான பழைய நூல்களின் சுருக்கம் எளிதில் கிடைத்தால் மூல நூல்கள் இந்தியாவில் வழக்கொழிந்து மறைவது யாவரும் அறிந்ததே. இவ் வரலாற்றில் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளின் படிப்பினையை மன்னருக்கும் மக்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறார் கல்ஹணர். 'ரஸங்களின் தெளிவான ஊற்றாகிய இந்த இராஜதரங்கிணி முத்துச்சிப்பிகள் போன்ற உங்கள் காதுகள் வழியே மனதிற்கொள்ளப்படட்டும்.'

தொடக்க காலத்திலிருந்து கல்ஹணரின் காலம் வரை காஷ்மீரத்தை ஆண்ட வெவ்வேறு அரச மரபுகளின் வரலாற்றை

இராஜதரங்கிணி வடமொழிக் கவிதையில் எட்டுக்காண்ட (தரங்க)ங்களில் கூறுகிறது. முதல் மூன்று காண்டங்களில் வருணிக்கப்படும் நிகழ்ச்சிகள் செவிவழிக் கதைகள் போன்றவை. இந்தக் காண்டங்களில் கல்ஹணர் தம் காலத்தில் வழக்கிலிருந்த கதைகளையே எடுத்துச் சொல்லியிருக்கிறார். கி. பி. 1835-ல் கண்டு பிடிக்கப்பட்ட இராஜதரங்கிணி காலத்தின் சோதனைக்கும் வரலாற்று விமரிசனத்துக்கும் ஈடுகொடுத்து வந்திருக்கிறது. கல்ஹணர் தம் காலத்தில் வாழ்ந்த முக்கிய மனிதர்களுடன் நேரடித் தொடர்பு மூலம் அறிந்த செய்திகளை அடிப்படையாகக்கொண்டு தம் காலத்து நிகழ்ச்சிகளை விரிவாக எழுதியிருக்கிறார். சற்று நீண்டுவிட்ட எட்டாவது தரங்கம் இந்தக் காரணத்தால் வரலாற்று மாணவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தொல் பொருளாராய்ச்சி வல்லுநராகவுமிருந்த கல்ஹணர் அரச சாஸனங்கள், உரிமைப் பத்திரங்கள் போன்ற மூல ஆவணங்களையும் பயன்படுத்தியிருக்கிறார். கோவில்களில் காணப்படும் படையல் கல்வெட்டுகளிலிருந்து அவர் கோவில்கள் நிறுவப்பட்ட விவரங்கள் பற்றியும், குறிப்பிட்ட புனிதச் சிலைகளின் தோற்றம் பற்றியும் சரியான விவரங்களைச் சேகரித்திருக்கிறார்.

பிரசித்தி பெற்ற வரலாற்று வல்லுநர் பேராசிரியர் ஆர். சி. மஜூம்தார் (தொகுப்பு: 'வேத காலம்', பக்கம் 49), ''வரலாற்று ஆராய்ச்சியின் புது விமரிசன முறைக்கு முன்னோடி'' என்று கல்ஹணரைப் பாராட்டுகிறார்: ''பண்டைய இந்திய இலக்கியத்தில் உண்மையான வரலாற்று நூல் என்று கருதப்படக்கூடியது இராஜதரங்கிணி ஒன்றுதான். நூலாசிரியர் தம் காலத்தில் வழக்கிலிருந்த வரலாறுகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் தம் நூலுக்கான பொருள்களை மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்தது மட்டுமன்றி, வரலாறு எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய பொது விதிகளையும் தம் நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இவ்விதிகள் அவரது காலத்துக் கருத்துகளைவிட மிகவும் முற்போக்கானவை. பத்தொன்பதாம் நூற்றுண்டுக்கு முன் முழுமையான வளர்ச்சி பெறுத ஆராய்ச்சி விமரிசன முறையை இந்த விதிகள் பெருமளவில் முன்கூட்டியே வெளியிட்டன.''

இராஜதரங்கிணியின் சில பகுதிகளில் குறைகளிருப்பினும் அது காஷ்மீரத்துக்கு—ஏன், இந்தியாவுக்கே—மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் படைப்பாகும். ஸ்டெய்ன் தம் மொழிபெயர்ப்பின் முன்னுரையில் சொல்லியுள்ளதாவது: ''இடைக்காலத்து ஐரோப்பாவிலும் இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த கீழை நாடுகளிலும் இயற்றப்பட்ட வரலாறுகளையொத்த வடமொழிப் படைப்புகளின் பிரதிநிதி என்ற தன்மையே இராஜதரங்கிணிக்கு

இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்தகைய படைப்புகளில் இது ஒன்றே நமக்குக் கிடைத்துள்ளது...தம் நூலின் உருவமோ கட்டுக்கோப்போ புதுமையானது என்று கல்ஹணர் உரிமை பாராட்டவில்லை. மாருக, காஷ்மீர அரசர்களைப் பற்றிய பல முந்தைய நூல்களைத் தாம் பயன்படுத்தியதாகவே அவர் சொல்கிருர். ஆனல் அப்பழைய நூல்கள் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. இராஜதரங்கிணிக்கு ஒப்பான பல வரலாறுகள் இருந்தனவாகப் பல குறிப்புகள் வெவ்வேறு இடங்களில் நமக்குக் கிடைத்தாலும் இந்தியாவின் எந்தப் பகுதியில் இயற்றப்பட்ட வடமொழி இலக்கியத்திலும் இப்போது அத்தகைய வரலாறுகள் நமக்குக் கிடைக்கவில்லை.''

கால வரையறை அமைப்பு

இராஜதரங்கிணியின் கால வரையறை அமைப்பில் ஒரு முக்கியமான குறைபாடு உண்டு. முதல் மூன்று தரங்கங்களில் வெவ்வேறு மன்னர்களின் ஆட்சிக் கால அளவு குறிப்பிடப்பட்டாலும் ஒவ்வொரு ஆட்சியும் எந்த ஆண்டு தொடங்கி எந்த ஆண்டு வரை தொடர்ந்தது என்ற தெளிவான விவரம் இல்லை. தனித்தனி ஆட்சிக் காலங்களின் கூட்டு எண்ணிக்கை வரலாற்றின் மொத்த காலக் கணக்குடன் பொருந்தவில்லை

சீபாத-ஜயாபீடனின் மரணத்திலிருந்து (கி.பி. 813)—நான்காவது தரங்கம், 703ம் செய்யுளிலிருந்து–சரியான ஆண்டு விவரங்களைக் கல்ஹணர் தருகிறார். காஷ்மீரத்தில் நெடுங்காலமாகப் பழக்கத்திலிருந்து வந்த 'லௌகிக' சகாப்தத்தில் இவ் விவரங்கள் தரப்பட்டுள்ளன. (லௌகிக சகாப்தக் கணக்கைக் கிருத்தவ சகாப்தக் கணக்குக்கு மாற்றிக்கொள்ள இயலும்.) ஆர்.எஸ். பண்டிட் தன் மொழிபெயர்ப்பின் முன்னுரையில் கூறுகிறார்: ''... முதன் முதலில் குறிப்பிடப்படும் ஆண்டு லௌகிக சகாப்தத்தில் 3889ம் ஆண்டு (கி.பி. 813-814). இந்த ஆண்டுக்குப் பிற்பட்ட நிகழ்ச்சிகளைக் கல்ஹணர் விவரிக்கும்போது ஆண்டுக்கணக்கில் தவறில்லை என்பதற்கு ஐயமில்லை. இதற்கு முற்பட்ட வரலாற்றிலுள்ள தவறான காலக்கணக்கு கல்ஹணருக்கு முந்தைய வரலாற்று ஆசிரியர்கள் செய்த தவறுகளின் காரணமாக ஏற்பட்டது.

உத்பல அரச மரபு தொடங்கப்பட்ட பிறகு ஒவ்வொரு அரசனின் ஆட்சியின் தொடக்கமும் முடிவும் ஆண்டு, மாதம், நாள் ஆகிய விவரங்களுடன் ஐந்தாவது தரங்கத்தில் ஓர் அறிக்கை வடிவில் தெரிவிக்கப்படுகிறது. மொத்தத்தில் இந்த விவரங்கள் நம்பத்தக்கவைதாம்; இவை சம காலத்துப் பதிவேடுகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் வேறு தனியான குறிப்புகள் கிடைக்காததால் இவ்விவரங்கள் எவ்வளவு தூரம் சரியானவை என்று வரலாற்று வல்லுநர்களால் உறுதி செய்ய முடியவில்லை.

கல்ஹணரால் குறிப்பிடப்படும் அரசர்களின் வரலாற்று முறை வரிசையும் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் தெளிவாக இல்லை. கல்ஹணர் தம் காலத்தைப் பற்றி எழுதும் போதும் தெளிவான தேதிகள் விடுபட்டுள்ளன. அவர் தம்

காலத்து நிகழ்ச்சிகளை விவரிக்கும்போது கூட, அந் நிகழ்ச்சிகள் முக்கியமானவை என்று கருதி அவற்றைப் பற்றி விரிவாக எழுதினாலும் அவை நிகழ்ந்த தேதிகளைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டார். சில சமயங்களில் அவர் மாதத்தை மட்டும் குறிப்பிட்டு விட்டு ஆண்டை வாசகனின் ஊகத்துக்கு விட்டுவிடுகிறார்.

கல்ஹணருக்குக் காஷ்மீரத்தின் நில அமைப்புப் பற்றிய நல்ல அறிமுகம் இருந்ததால் வெவ்வேறு இடங்களைப் பற்றிய அவருடைய குறிப்புகள் சரியாகவும் தெளிவாகவும் உள்ளன. ''காஷ்மீரத்தின் பரப்பையொத்த வேறெந்த நிலப்பகுதியையும் விடக் காஷ்மீரத்தின் பண்டைய நில அமைப்பை நம்மால் நன்றாக அறிய முடிவதற்குக் காரணம் கல்ஹணரின் திறமையே'' என்கிறார் ஸ்டெய்ன். ஆகவே இராஜதரங்கிணி காஷ்மீரத்தின் புவியியல் ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

மரபு வழி விவரங்களில் கல்ஹணர் மிகுந்த கவனம் செலுத்துகிறார். தங்கள் தங்கள் காலத்து நிகழ்ச்சிகளில் அதிகமான தாக்கத்தை விளைவித்த முக்கிய குடும்பங்களின் தொடக்க வரலாற்றைச் சொல்வது எவ்வளவு அவசியம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். இதனால் கடைசி இரண்டு தரங்கங்களில் விவரிக்கப்பட்டுள்ள அரசியல் நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்வது எளிதாக இருக்கிறது. புகழ் பெற்றவர்களின் மரபு வழி விவரங்களும் இராஜதரங்கிணியில் அளிக்கப்பட்டுள்ளன.

கார்க்கோட அரச மரபில் புகழ் பெற்றவனும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்த அரசுகளை ஒன்றன்பின் ஒன்றாக வெற்றி கொண்டவனுமான லலிதாதித்தியனின் ஆட்சிக் காலம் கி.பி. 724 முதல் 761 வரை என்று கல்ஹணர் கூறுவது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டாலும் சிலர் அது சரி என்று கருதவில்லை. உண்மையில் இந்தக் கால வரையறை கல்ஹணரால் நேரிடையாகக் குறிப்பிடப்படவில்லை. இது வேறு விவரங்களிலிருந்து கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த விவரங்களாவன: கல்ஹணர் இராஜதரங்கிணியை இயற்றிய காலம் சக ஆண்டு 1070 (கி.பி. 1148); மூன்றாவது கோநந்தன் ஆண்ட காலம் சக ஆண்டு 1070க்கு 2330 ஆண்டுகள் முந்தையது; இந்த இரண்டு எல்லைகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த அரசர்களும் அவர்களுடைய ஆட்சிக் காலங்களும். கல்ஹணர் தம் நூலை கி.பி. 1148ல் இயற்றினாரென்பது சரி எனக் கொள்ளலாம். ஆனால் மூன்றாவது கோநந்தன் காலத்திலிருந்து கி.பி. 1148 வரையிலுள்ள காலத்தைப் பற்றிய விவரங்களும், லலிதாதித்தியனின் காலம் வரை ஆண்ட மன்னர்களின் ஆட்சிக் காலம் பற்றிய கணக்கும் சரியென்று கொள்ள இயலாது.

சீனுவில் 'தாங்' மரபினரின் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட சீன வரலாறுகளுக்கு முரண்பட்டாலும் லலிதாதித்தியன் உள்ளிட்ட கார்க்கோட மரபு வழியின் கால வரையறையைச் சரியென்றே கொள்ளலாம். கல்ஹணரின் கணக்குக்கும் சீன வரலாறுகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு இருபத்தைந்து ஆண்டுகளாகும். கார்க்கோட மரபினரின் ஆட்சிக் காலத்தில் இந்த இருபத்தைந்து ஆண்டுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்டெய்ன் கூறுகிறார். இவ்வாறு செய்தால் வேறொரு தடை எழுகிறது. இதனால் கார்க்கோட ஆட்சி கி.பி. 880 வரை நீடிக்கும். ஆனால் அந்த ஆண்டில் காஷ்மீரத்தில் அவந்திவர்மனின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. கல்ஹணர் சில கார்க்கோட அரசர்களின் ஆட்சிக் காலத்தைச் சற்று நீட்டி எழுதி விட்டார் என்றே நாம் நினைக்க வேண்டியுள்ளது.

கார்க்கோட மரபு வழிக்கு முற்பட்ட அரசர்களைப் பற்றிய கல்ஹணரின் வரலாற்றில் சில பகுதிகள் நம்பத்தக்கவையல்ல என்பது வரலாற்று ஆசிரியர்களின் ஒருமனப்பட்ட கருத்து. சில அரசர்களின் ஆட்சிக்கால அளவு ஒப்புக்கொள்ள முடியாததாக உள்ளது. எடுத்துக் காட்டாக, இரணுதித்தியனின் ஆட்சிக் காலம் முந்நூறு ஆண்டுகள் தொடர்ந்தது என்ற செய்தி! நம்பவியலாத சில அற்புத நிகழ்ச்சிகளும் இராஜதரங்கிணியில் வருணிக்கப்படுகின்றன. ஆயினும் ஆர். எஸ். பண்டிட் சொல்வதுபோல், ''கல்ஹணரின் வரலாற்றில் பல குறைகளிருக்கலாம். ஆனல் அதில் எந்தப் பகுதியும் தவறானது என்று ஐயமற மெய்ப்பிக்கக் கூடிய கல்வெட்டுகளோ, நாணயங்களோ, வரலாறுகளோ அல்லது வேறு தனிப்பட்ட சான்றுகளோ கண்டுபிடிக்கப்படவில்லை...கல்ஹணர் தம் காலத்து வரலாறுகளையோ வேறு செய்திகளையோ பயன்படுத்துவதில் தவறு செய்திருக்கிருரென்றும் மெய்ப்பிக்கப் படவில்லை.''[1]

கல்ஹணர் தம் காலத்துக்கு முற்பட்ட வரலாறுகளைக் கவனத்தோடு பயன்படுத்தியிருப்பதால் அவர் கொடுத்துள்ள கால வரையறைக் கணக்கை மாற்றக் கூடாது என்று வாதிக்கப்படுகிறது. வரலாறுகளில் தெளிவாகக் குறிப்பிடப்படாத சில மன்னர்களின் காலத்தை அவர் ஊகித்து எழுத நேரிட்டிருக்கலாம். நூலின் பிற்பகுதியில்–குறிப்பாக 5, 6, 7, 8ஆம் தரங்கங்களில்–அவர் குறிப்பிட்டுள்ள தேதிகள் சரியானவை என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. காஷ்மீரத்தின் பழங்கால மன்னர்களைப் பற்றிய காலக்கணக்கில் அவர் தம் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழைய ஐதிகங்களைத்

[1] ஆர். எஸ். பண்டிட்டின் 'இராஜதரங்கிணி' (மொழி பெயர்ப்பு); சாகித்திய அகாதமி, 1968 பதிப்பு, அனுபந்தம் 'ஏ', பக்கங்கள் 720–721.

தாமும் ஏற்றுக் கொண்டதோடு, தம் காலத்தில் கிடைத்த கல்வெட்டுகளையும், நாணயங்களையும், அப்போது வழக்கிலிருந்த பழைய வரலாறுகளையும் பயன்படுத்தியுள்ளார். கோநந்தர்களுக்குப் பிறகு கார்க்கோட மரபு கி.பி. 596ல் ஆட்சிக்கு வந்தது என்ற கல்ஹணரின் கூற்று சீன யாத்திரிகர் ஹியூன் சாங்கின் குறிப்பின் மூலம் உறுதிப்படுகிறது. ஹியூன் சாங் கி.பி. 631ல் காஷ்மீரத்துக்கு வந்ததாக ஜெனரல் கன்னிங்ஹாம் மெய்ப்பித்துள்ளார். பல நூற்றாண்டுகள் வரை தொடர்ந்த கோநந்தர்களின் ஆட்சிக்குப்பின் 'கி—ளி—தோ' மரபினர் (இவ்வாறுதான் கார்க்கோடர்கள் சீனர்களால் வழங்கப்பட்டார்கள்) காஷ்மீரத்தில் ஆட்சிக்கு வந்ததாகவும் இந்த மரபைச் சேர்ந்த மன்னனுக்கு பௌத்த சமயத்தில் அதிக நம்பிக்கையில்லையென்றும் ஹியூன் சாங் கூறுகிறார்.

ஆகவே, கல்ஹணரின் நூலின் எழுத்துப்படி திருப்திகரமாக இல்லையென்று பிரபல இந்தியத் துறை வல்லுநர் ப்யூலர் கூறியிருப்பதை ஆர்.எஸ். பண்டிட் மறுத்திருக்கிறார். ஆர். எஸ். பண்டிட்டின் கூற்று இராஜதரங்கிணியில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறை பற்றிய பிரச்சினைக்கு முடிவு கட்டுகிறது. அவர் கூற்றை அப்படியே தருவது பொருத்தமாகும்—''இந்த நூலின் மதிப்பு மறுக்க முடியாதது. ஏனெனில் நமக்குக் கிடைத்துள்ள ஒரே வரலாற்று நூல் இதுதான். சிறந்த அறிஞர்கள் சிலர் இந்நூலைப் பாராட்டியுள்ளார்கள். இதன் சில பகுதிகளில் சொல்லப்பட்டுள்ள செய்திகளை உறுதிப்படுத்த வேறு தனிப்பட்ட சான்றுகள் இல்லாமையால் நாம் அவற்றைச் சரி என்று ஏற்றுக்கொள்ளத் தயங்கலாம். சில கதைகளை வெறும் புனை கதைகள் என்றும் தள்ளி விடலாம். ஆனால் திறமையும் பொறுமையுமுள்ள ஆராய்ச்சியாளர்களால் இது கவனமாகத் தொகுக்கப்பட்டு இதன் தூய்மையான மூல உருவம் கண்டுபிடிக்கப்படும் வரையில் (தொடக்கப் பகுதிகள் உட்பட) இந்நூலின் வரலாற்று மதிப்பைப் பற்றித் தீர்ப்பளிப்பதை நாம் ஒத்தி வைக்கவேண்டும். வேறு தனிப்பட்ட சான்றுகள் மூலம் இந்த நூலில் சொல்லப்படுவதெல்லாம் தவறென்று மெய்ப்பிக்கப் பெறும் வரையில் நாம் இந்நூலின் தொடக்கப் பகுதிகளைக்கூட ஒதுக்கிவிடக் கூடாது.'' தாம் சொல்லும் வரலாறு தம் காலத்துக்கு அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும்போது உண்மை வரலாறாகவும், பின்னோக்கிச் செல்லச் செல்ல செவிவழிக்கதை அல்லது ஐதிகமாகவும் ஆவதைக் கல்ஹணரே குறிப்பாக, ஆனால் தெளிவாக, உணர்த்தியுள்ளார்.

கதை கூறும் கல்ஹணர்

வரலாறு என்பது இரண்டு கூறுகளின் சேர்க்கை—ஒன்று, கடந்த காலம் அல்லது அதன் பருப்பொருள், நுண்பொருள் உருவங்கள்; இரண்டு, எழுதும் காலத்தில் கடந்த கால நிகழ்ச்சிகளை விவரிக்கப் பயன்படுத்தப்படும் கற்பனைத் திறமை. வரலாற்று ஆசிரியனுக்குக் கிடைக்கும் மூலப் பொருள்கள் அவனுக்கு வெளியிலிருப்பவை. அவற்றை அவன் கூட்டவோ மாற்றவோ செய்தால் அவனது படைப்பு புரட்டாக அல்லது போலி வரலாருக ஆகிவிடும். கல்ஹணர் தம் நூலின் முன்னுரையில் தாம் பயன்படுத்திய மூலங்களைப் பற்றிக் குறிப்பிடுகிருர். ஆனல் அவர் அவற்றுக்கு எவ்வளவு தூரம் மதிப்பளித்தார் என்பதைத் தெளிவாகச் சொல்லவில்லை. கல்ஹணர் பயன்படுத்திய பழைய வரலாறுகள் எதுவும் இப்போது நமக்குக் கிடைக்காததால் நாம் இராஜதரங்கிணியை அவற்றுடன் ஒப்புநோக்க வழியில்லை. ஆகவே இராஜதரங்கிணியில் உள்ள அகச் சான்றுகளைக் கொண்டுதான் கதை சொல்பவர் என்ற முறையில் கல்ஹணரின் பணியையும், வரலாறு பற்றி அவரது கருத்தையும் மதிப்பிட முடியும்.

தம் காலத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மரபாகிவிட்டிருந்த அற்புதக் கதைகளையும் கட்டுக் கதைகளையும் கல்ஹணர் சொல்லும் முறையிலிருந்து அவை தோன்றக் காரணமாயிருந்த வெகுளித்தனமான நம்பிக்கை அவருக்கும் இருந்தது என்று தெரிகிறது. ''பொது வழக்கில் வரலாற்று நினைவுகளோடு கலந்துவிடுகிற நடக்கவியலாத நிகழ்ச்சிகள், மிகைப்படுத்தப்பட்ட விவரங்கள், மூடநம்பிக்கைகள் இவற்றைக் கல்ஹணர் தம் நூலில் எவ்வித ஐயமோ, அறிவுபூர்வமான அவநம்பிக்கையோ இன்றி அப்படியே ஏற்றுக்கொண்டு விவரித்திருக்கிருர்'' என்று ஸ்டெய்ன் சொல்வது சரியே. ஆனல் மேகவாகனனும் மற்ற பழங்கால மன்னர்களும் நிகழ்த்தியனவாகச் சொல்லப்படும் அற்புதச் செயல்களை நம்பாத சந்தேகப் பேர்வழிகள் தம் காலத்தில் இருந்ததாகக் கல்ஹணர் சொல்வதற்காக அவரைப் பாராட்ட வேண்டும் (தரங்கம் VII, 1137). அவர் நம்புபவர்களோடு தம்மைச் சேர்த்துக்கொள்கிருர். தற்கால வரலாற்று ஆசிரியனுக்கு இன்றியமையாத ஆராய்ச்சி மனப்போக்கு கல்ஹணரின் வரலாற்று நோக்கில் இடம்பெறவில்லையென்பது உண்மையே. மேலைநாட்டு ஆசிரியர்கள் சொல்வதுபோல், இந்திய மனம் கட்டுக் கதைகளையும்

செவிவழிச் செய்திகளையும் கொண்ட மரபினை வரலாற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதில்லை.

உண்மை வரலாறு பற்றிய இந்தியக் கருத்து மரபு கீழைநாடுகளுக்கே பொதுவானது. இடைக் காலத்தைச்சேர்ந்த இந்திய வரலாற்று ஆசிரியன் புராணக் கதைகளையும், பழங்கால வீரர்களைப் பற்றிய மரபுவழிக் கதைகளையும் எடுத்துச் சொல்லும்போது தன் அவநம்பிக்கையைத் தற்காலிகமாக ஒதுக்கிவைத்து விடுவான். ஏனெனில் அவனுக்கு இந்தக் கதைகள் அண்மைக் காலத்து நிகழ்ச்சிகளைப் போலவே உண்மையானவை. ஆகவே இந்தியாவில் வரலாறு (மேலை நாடுகளில் உள்ளது போன்ற) அரசியல் வரலாருக எழுதப்படவில்லை. இந்திய வரலாறு சமய உணர்வில் பிறந்த கற்பனை, புராணக் கதைகள், ஐதிகங்கள் இவற்றின் கலவையாகும். கட்டுக்கதை, மரபு வழக்கு இவற்றை வரலாற்று உண்மையினின்றும் பிரித்தறிவதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்யப்பெறவில்லை. ஆகவேதான் கல்ஹணர் கோநந்த மரபின் தொடக்கக்கால மன்னர்களுக்கு மகாபாரதப் பெரும் போருடன் தொடர்பு இருந்ததாகச் சொல்லும்போதும், தம் காலத்துக்கு அண்மையில் ஆட்சி செய்த லலிதாதித்தியன் அல்லது ஜயாபீடனின் வீரதீரச் செயல்களைக் கவர்ச்சிகரமான விவரங்களுடன் வருணிக்கும் போதும் கடந்தகால அற்புதங்களிலும் கட்டுக் கதைகளிலும் அவருக்கிருந்த நம்பிக்கையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

காஷ்மீரத்தின் இமாலயப் பள்ளத்தாக்கு வரலாற்றுத் தொடர்பினின்றும் துண்டிக்கப்பெற்றிருப்பதும் நினைவு கூரத்தக்கது. மிகப் பெரிய மலைகளால் சூழப்பட்டிருக்கும் காரணத்தால் காஷ்மீரப் பள்ளத்தாக்கு வெளிநாட்டினரின் படையெடுப்புக்கு ஆளாகாமல் இருந்தது மட்டுமன்றி, வரலாற்று நோக்கில் தன் தனித்தன்மையையும் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. காஷ்மீர வரலாற்றின் இத்தனித்தன்மை கல்ஹணரின் நூலில் செவ்வனே பிரதிபலிக்கிறது. காஷ்மீரம் இயற்கையாக அமைந்த எல்லைகளோடு கூடியதாக இருந்ததால் கல்ஹணர் எளிதில் அதன் நில அமைப்பு, மக்கள், பழக்கவழக்கங்கள் இவற்றை நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. நாட்டின் குறுகிய பரப்பால் நேரும் குறைகளிருந்தாலும், ஆசிரியரின் இந்த அறிவு அவருடைய நூலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் கல்ஹணர் தம் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டார். தாம் வருணித்த அரசர்களின் குறைகளையும் பலவீனங்களையும் சுட்டிக்காட்ட அவர் தயங்கவில்லை. மக்களின் உள்ளங்களை ஊடுருவிப் பார்த்து அவர்களுடைய செய்கைகளின் காரண காரியங்களை ஆராய்வதில்

அவருடைய தற்காலத் தன்மையைக் காண்கிறோம். காஷ்மீரத்தின் வரலாற்றில் நீரோ மன்னனுக்கொப்பான ஹர்ஷனின் சோக முடிவின் வருணனை உள்ளத்தையுருக்குவதாக இருந்தாலும் அந்த முடிவிலும் நியாயமிருப்பதை நாம் உணரச் செய்கிறார் கல்ஹணர். துங்கன், சுஸ்ஸலன், அனந்தன் போன்ற அரசர்கள் பொதுப்படையான பாத்திரங்களாக அன்றி, தனித்தன்மை கொண்டவர்களாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். இராஜதரங்கிணி என்ற வரலாற்று நாடகத்தில் சிறிய பங்கினை ஏற்றுள்ள மனிதர்கள்கூட உயிரோட்டமுள்ளவர்களாகக் காட்டப்படுகிறார்கள். உண்மையாகச் சித்திரிக்கப்பட்டுள்ள இந்தப் பாத்திரங்கள் காவியங்களிலும், வரலாறுகளிலும், 'சரித'ங்களிலும் காணப்படும் உயிர்க்களையற்ற உருவகப் படைப்புகளுக்கு முற்றிலும் மாறாக உள்ளன.

கல்ஹணர் தம் நூலின் பாத்திரங்களைச் சித்திரிப்பதில் கையாளும் உண்மைத் தன்மை அவர் வருணிக்கும் நிகழ்ச்சிகளிலும் காணப்படுகிறது. தற்கால வரலாற்று ஆசிரியன் வாழ்க்கைக்குப் பயன்படும் வரலாற்றையே ''உண்மை வரலாறு'' என்று கருதுகிறான். இந்த நோக்கில் இராஜதரங்கிணியை ஆராயும் வாசகன் இந்நூலின் பின் பகுதியில் சில நிகழ்ச்சிகளுக்குக் கல்ஹணர் மிகையான முக்கியத்துவம் கொடுத்து அவற்றை நீட்டிப்பதைக் குறை கூறலாம். ஆனால் கல்ஹணர் இந்த நீண்ட வருணனைகளை நூலின் ''அரச ஆருகிய'' கதைக்கருவோடு பொருந்தியதாகவே கருதினார். கலசனின் மரணம், இராணி சூரியமதியின் தீக்குளிப்பு, சுஸ்ஸலனின் படுகொலை போன்ற உருக்கமான நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தவர்களின் வருணனைகள் மூலம் விவரித்து அவற்றுடன் ஒரு நேரடித் தொடர்பை உண்டாக்கிக்கொள்கிறார் கல்ஹணர். ஆகவே இந்த நிகழ்ச்சிகள் அதிக விவரங்களோடு சொல்லப்படுகின்றன. ''ஹர்ஷனின் இறுதிப் போராட்டங்கள், அவன் நாட்டைவிட்டு வெளியேறுதல், அவனது மரணம், பிட்சாசரனின் சோக முடிவு, உலோகாராவின் வீழ்ச்சி போன்ற உருக்கம் நிறைந்த நிகழ்ச்சிகள் நமக்கு உண்மையாகத் தோன்றுவதற்குக் காரணம் அவற்றின் விரிவான வருணனை மட்டுமல்ல'' என்று கூறுவார் ஸ்டெய்ன். கல்ஹணர் கதை சொல்வதில் கையாளும்—காவியங்களில் சாதாரணமாக இடம்பெறும் மிகைகளோ, கவிதையணிகளோ அற்ற—நேரடித் தன்மையே அந் நிகழ்ச்சிகளை உண்மையாகத் தோன்றச் செய்கிறது. கல்ஹணர் காஷ்மீரத்தின் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளை இராமாயண, மகாபாரத நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டு எழுதுகிறார். இயற்கையின் அற்புத அழகுகள் நிறைந்த காஷ்மீரப் பள்ளத்தாக்கின்பால் கல்ஹணர் கொண்டுள்ள காதல் பல இடங்களில் உணர்ச்சிகரமான கவிதையில் வெளிப்படுகிறது. கல்ஹணர் காலத்து ஆண்களும் பெண்களும் பார்க்க எப்படிக்

காணப்பட்டார்கள், அவர்கள் எவ்வித உடைகள் அணிந்தார்கள், எவ்விதம் உண்டார்கள், அவர்களுடைய நம்பிக்கைகள் யாவை, ஆண்—பெண் உறவு பற்றிய முடிவில்லாப் பிரச்சினைக்கு அவர்கள் கண்ட தீர்வு என்ன—இவை போன்ற நாம் அறிய விரும்பும் செய்திகளைக் கல்ஹணர் நமக்கு அளிக்கிறார். ஆகவே, கல்ஹணர் வாழ்ந்த காலத்து அரசியல், சமூக நிலையைப்பற்றிய—வேறெந்தப் பழைய இந்திய நூலாசிரியரிடமிருந்தும் கிடைக்காத—அறிமுகம் நமக்கு இந்த நூலிலிருந்து கிடைக்கிறது.

நகைச்சுவையுணர்வும் மனித பலவீனத்தைக் கண்டுபிடிக்கும் திறமையும் காஷ்மீர நாட்டின் முக்கிய சிறப்புகளாகும். இவை கல்ஹணரிடமும் நிறையவே இருந்தன. அவர் மனிதர்களை—குறிப்பாக, சூழ்ச்சிகள் மூலம் கீழ்நிலையிலிருந்து சமூக ஏணியில் ஏறிய அற்பர்களைச் சித்திரிப்பதில் வல்லவர். சில சமயங்களில் இவ் வருணனைகளைப் ஃபிரஞ்சு நாட்டு நகைச்சுவை எழுத்தாளர் ராபலேஸின் நகைச்சுவையுணர்வுடன் அழகுபடுத்துகிறார் கல்ஹணர். காஷ்மீரப் போர்வீரர்களோடு கூடப்பிறந்த கோழைத்தனத்தையும் வீண்பெருமையையும் வருணிக்கும்போது அவருடைய கூரிய ஏளனத்தைக் காணலாம். உறுதிவாய்ந்த, பயங்கர எதிரியைப் பார்த்ததுமே—அல்லது அத்தகைய எதிரியைப் பற்றிய வதந்தியைக் கேட்டதுமே—போர்க்களத்தை விட்டு ஓட்டமெடுக்கும் சேனைகள் வருணிக்கப்படுகின்றன. ஒன்றிடமொன்று கொண்டுள்ள பயத்தால் நடுங்கும் படைகளைப்பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம். வட இந்தியச் சமவெளிகளிலிருந்து வந்த கூலிப்படைகளே கல்ஹணர் காலத்து அரசர்களின் முக்கிய பலமாக இருந்தன. இப்படைகளும் இராஜபுத்திர வீரர்களும் காட்டிய வீரத்தோடு காஷ்மீரப் படைகளின் வீரத்தை ஒப்பிட்டுக் காட்டுகிறார் கல்ஹணர். அரசர்கள் மற்றும் புரோகிதர்களின் கேலிச் சித்திரங்களும் அவர்களுடைய ஒழுக்கமற்ற நடத்தை பற்றிய கண்டனங்களும் செயல்முறைகளும் இந்நூலில் உள்ளன.

அறியாமையும் அதற்கொப்பான அகம்பாவமும் குடிகொண்டிருந்த புரோகித வகுப்பினரிடம் தமக்கிருந்த அருவருப்பைக் கல்ஹணர் மறைக்கவில்லை. அரசு விஷயங்களில் அவர்களுடைய தலையீட்டால் விளைந்த கேடுகளை அவர் விவரிக்கிறார். அவர் அவர்களுடைய புனிதப் பதவிகளைப் பொருட்படுத்தாமல் அவர்களுடைய அகம்பாவத்தையும் கோழைத்தனத்தையும் தம் வருணனைகளில் தாராளமாக எள்ளி நகையாடுகிறார்.

அவர் எள்ளல் குறிப்புகளில் திறமைசாலிதான். ஆனால் வரலாற்று நிகழ்ச்சிகளை வருணிப்பதில்தான் அவருடைய முழுத்

திறமையும் தெரிகிறது. ஹர்ஷனின் சோக முடிவு, அனந்தனின் ஈமக்கிரியை, அவனுடைய பட்டத்தரசி சூரியமதி உடன்கட்டை ஏறியது—இத்தகைய நிகழ்ச்சிகளை வருணிக்கும்போது அவர் கவிதைக் கலையின் கொடுமுடியை எட்டிவிடுகிறார். நம்பிக்கைத் துரோகிகளான தன் உதவியாளர்களால் கைவிடப்பட்டு, சமாளிக்கமுடியாத ஆபத்தில் அகப்பட்டுக்கொண்ட ஹர்ஷனின் அவல நிலையையும், இறுதிப் போராட்டத்தில் அவன் அசாதாரண வீரங்காட்டித் தான் இழந்த புகழைத் திரும்பப் பெற்றதையும் வருணிக்கும்போது அவரது எழுத்து சிறந்த நாடகங்களின் தரத்தை எட்டிவிடுகிறது. துன்புறுத்தப்பட்ட அந்தணர்களிட்ட சாபம் ஜயாபீடனின் மரணத்தில் முடிவதை வருணிக்கும் கதையும் இதுபோலவே மனதில் பதிந்துவிடுகிறது. இந்த வருணனையின் எளிமையும் நேரடியான உருவகமும் சொல்வளமும் இந்த உருக்கம் நிறைந்த நிகழ்ச்சியின் நாடகத் தன்மையைச் சிறப்பித்துக் காட்டுகின்றன.

இந்தியா முழுதும் போர்கள் பல நிகழ்த்தியதால் அதிகச் செலவுக்குள்ளான ஜயாபீடன் என்ற அரசன் (தரங்கம் IV) 'பேராசைக்கொண்டு' கோவில் சொத்துகளையும் நிலங்களின் விளைச்சலையும் அப்படியே பறிமுதல் செய்ய ஆணையிட்டான். இதை எதிர்த்து அந்தணர்கள் கூட்டங் கூட்டமாக ''உயிர்விடத் துணிந்தார்கள்.'' கிரேக்க நாடகாசிரியர் ஏஷிலஸிடம் நாம் காணும் எளிமை செறிந்த கவிதையில் இந்த நிகழ்ச்சியை வருணிக்கிறார் கல்ஹணர்:

> ஆகா, இந்த அந்தணர்களின் துணிவுதான் என்னே! . . . . . . பல அந்தணர்கள் நாட்டை விட்டு வெளியேறிய பின் எஞ்சியிருந்தவர்கள் அரசனின் ஆணையை எதிர்த்துத் தங்கள் உயிரை விடவும் தயங்கவில்லை. . . . . . (632)
>
> ''எந்த நாளிலாவது உயிரை விடும் அந்தணர்களின் தொகை நூறில் ஒன்று குறைந்தாலும் எனக்குச் செய்தி தெரிவிக்கப்படவேண்டும்''—என்று ஆணையிட்டான் கொடுமையில் எல்லோரையும் மிஞ்சிய அரசன். (633)
>
> . . . . . . (அந்தணத் தன்மையுடன் தேசுடன் விளங்கிய இத்திலா என்ற அந்தணனிடம்) அரசன் கேலியாகச் சிரித்துக் கொண்டே, சொன்னான்—''விசுவாமித்திரர் போன்றவர்களது கோபத்தால் அரிச்சந்திரன் முதலானோர் அழிந்தது உண்மையே! நீ கோபித்தால் என்ன நடந்துவிடும்?'' (650)
>
> கோபங்கொண்ட அந்தணன் தரையைக் கையால் ஓங்கியடித்துப் பதிலிறுத்தான்: ''நான் கோபித்துக்கொண்டால் என் சாபம் ஒரு நொடியில் உன்னைத் தாக்காதா?'' (651)

இதைக் கேட்ட அரசன் பகையுணர்வுடன் கள்ளப் புன்னகை செய்தவாறே சொன்னுன்—"உம். பிராமண சாபம் என் மேல் விழட்டுமே! தாமதம் ஏன்?" (652)

"பிடி சாபம், கொடியோனே!" இவ்வாறு அந்தணன் சொன்னதும் ஒரு தங்கக் கம்பம் விதானத்திலிருந்து நழுவி மன்னனின் மேல் விழுந்தது. (653)

விழுந்த கம்பத்தால் அரசனின் உடலில் காயம் ஏற்பட்டது; அந்த இடத்தில் வீக்கம் கண்டது. புண் புரையோடிப் போய் அதில் புழுக்கள் புழுத்தன. புழுக்களைச் சாமணங் கொண்டு எடுத்தெறிய வேண்டியதாயிற்று. (654)

நரகத்தில் தான் அனுபவிக்கவிருக்கும் வேதனையைக் குறிப்பாக உணர்த்தும் சித்திரவதையைப் பல இரவுகள் அனுபவித்த அவனுடைய உயிர் உடலை விட்டுப் பிரிய ஏங்கிக் கடைசியில் ஒரு வழியாக நீங்கியது. (655)

கதையின் நீதியைத் தாங்கியவண்ணம் ஒரு செய்யுள் தொடர்கிறது:

சேறு கலந்த தண்ணீருக்காக ஆசைப்படும் மீன்கள் தங்கள் சொந்த இருப்பிடத்தை விட்டு வெளியேறி, தவருன வழிகளில் செல்லும்போது மீனவர்கள் அவற்றுக்கு ஆசை காட்டி, அவற்றைத்திசை திருப்பித் தங்கள் வலைகளில் பிடித்து விடுகிருர்கள். அதுபோல் செல்வத்துக்காகப் பேராசைப் படும் மன்னர்கள் தங்கள் உரிய நிலையை விட்டுப் பெயர்ந்து, தவருன முறைகளைக் கடைப்பிடித்து, விதியால் அலைக்கழிக்கப் பட்டுக் கடைசியில் நரகத்தில் விழுகிருர்கள். (658)

தான் செய்ய விருந்த போர்கள் முடியும் வரை காஷ்மீரத்துக்குத் திரும்ப இயலாத நிலையிலிருந்த லலிதாதித்தியன் அரசு நிர்வாகம் பற்றித் தன் அமைச்சனுக்கு செய்த புகழ் பெற்ற கோட்பாட்டு ஆணை கல்ஹணரால் அணிகள் நிறைந்த கவிதையில் சொல்லப்படுகிறது (தரங்கம் IV):

கிராம மக்கள் தங்கள் ஆண்டுத் தேவைக்கதிகமாகத் தானியங்களும், தங்கள் நிலங்களின் பரப்பின் தேவைக்கதிகமாக எருதுகளும் வைத்துக்கொள்ளாதபடி அடிக்கடி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். (347)

ஏனெனில் அவர்கள் அதிகச் செல்வம் திரட்டிவிட்டால் ஒரே ஆண்டில் பயங்கரத் தமரர்களாகி அரசனின் ஆணையை மீறுமளவுக்கு வலிமை பெற்று விடுவார்கள். (348)

தலைநகர மக்களுக்குரிய ஆடையாபரணங்கள், பெண்கள், கம்பளிப் போர்வைகள், உணவு, சொற்ப விலையுள்ள அணிகள், குதிரைகள், வீடுகள் இவற்றைக் கிராம மக்களும் மூலதனம் போலச் சேர்த்து வைத்துக்கொள்ளுதல்; நன்கு பராமரிக்கப்படவேண்டிய கோட்டை கொத்தளங்கள் அரசனின் இறுமாப்பால் அலட்சியப்படுத்தப்படுதல்; அரசன் தன் ஊழியர்களின் குணத்தைப் புரிந்துகொள்ளத் தவறுதல்; படைகளைப் பராமரிப்பதற்கான பணம் நாட்டின் ஒரே பகுதியிலிருந்து வரியாக வசூலிக்கப் படுதல்; அரசு ஊழியர்கள் திருமண உறவுகள் மூலம் தங்களுக்குள் கூட்டு அமைத்துக் கொள்ளுதல்; அரசு நிர்வாகத்தில் ஊழியர்களின் கருத்தை அரசன் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் — இவையெல்லாம் நிகழ்ந்தால் குடிமக்களின் அதிருஷ்டம் மாறிப் போய்விட்டது என்று ஐயமின்றித் தெரிந்து கொள்ளலாம். (349—352)

கல்ஹணர் தம் நூலுக்கு அணியாக ஆங்காங்கே சேர்த்துள்ள நீதிகள் அவருடைய காலத்துக்கு மட்டுமல்ல, இக் காலத்துக்கும் பொருந்துவன ஆகும்:

யானைகள் குளித்த பின் தங்கள் உடலில் புழுதியைப் பூசிக் கொள்வது போல் அரசர்கள் புகழாகிய அருவிகளில் தங்களைச் சுத்தம் செய்து கொண்டபின் ஒழுக்கங் கெட்டுச் சீரழிந்து போவது வியப்பே! (V, 164)

மோசம் செய்வதில் தேர்ந்த காகம் வேறொரு பறவையின் குஞ்சுகளைத் தன்னுடையவை என்று நம்பிவிடுகிறது; நீரிலிருந்து பாலைப் பிரித்தெடுக்கும் திறமையுள்ள அன்னம் நீரில்லா மேகத்தைக் கண்டு அஞ்சுகிறது; மக்களை ஆளும் அனுபவத்தால் அறிவாளியாக இருக்கும் அரசன் ஒரு போக்கிரியின் பேச்சை உண்மையென்று நம்பிவிடுகிறான். இவ்வாறு அறிவுத் திறமையோடு முட்டாள் தனத்தைக் கலந்து விடுகிற விதி நாசமாகட்டும்! (VI, 275)

வீரத்தால் தன் நோக்கத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று வீரன் நினைக்கிறான். அதையே விழிப்புடைமையால் சாதிக்க எண்ணுகிறான் கோழை. இப்படியில்லாவிட்டால் அவர்களிடையே எவ்வித வேற்றுமையுமிருக்காது. (VI, 363)

தீயில்லாத வெறுங்கட்டையே குரங்குகளைக் குளிரிலிருந்து பாதுகாக்கப் போதுமானது; மான்களின் தோலைத் தூய்மைப் படுத்த நீரும் காற்றுமே போதுமானவை. ஆகவே ஓர் உயிரின் நோக்கம் நிறைவேறுவது அதன் தன்மையைப் பொறுத்த

தாகும். பொருள்களில் அவற்றுக்கேயுரிய தன்மை எதுவுமில்லை. (VI, 364)

பாம்பு காற்றையுண்டு உயிர் வாழ்கிறது; கண்ணைக் குருடாக்கும் இருட்டுப் பொந்தில் உறங்குகிறது; நிர்வாணமாக இருக்கும் அது காதலின்பத்தைச் சுவைக்கும் போது தன் கூச்சத்தைப் போக்கிக் கொள்ள வேறொரு பாம்பின் உதவியை நாடுகிறது; இத்தகைய கஞ்சத்தனத்தைக் கடைப்பிடிக்கும் அது பிறருக்காகப் புதையலைக் காக்கிறது. லோபியைவிடப் பரோபகாரி யார்தானிருக்க முடியும்! (VII, 502)

ஆறுகள் மிகுந்த வேகத்துடன் பெருகிப் பூமியின் ஆழத்தில் ஊடுருவிச் சென்று அங்குள்ள ஊற்றுகளை நிரப்புகின்றன; வானத்திலிருந்து மழை பெய்து பல திசைகளிலிருந்தும் வாய்க்கால்கள் வழியே நீர் பாய்கிறது; காய்ந்துகிடக்கும் ஏரி இவ்வாறு மழைக் காலத்தில் பல விதங்களில் நீரைப் பெற்று நிரம்பிவிடுகிறது. அது போல் நற்காலம் வந்தால் செல்வம் நூறு வழிகளில் சேர்ந்துவிடும். அப்போது செல்வம் வந்து சேர வழி எது தான் இல்லை? (VII, 505)

மிகவும் குறைவாகவே புல் வளர்ந்துள்ள இடத்தில் விதி தீவைத்து அங்கே செழிப்பான பசும் புல்வெளியை உண்டாக்குகிறது; நாள் முழுதும் கொடிய சூரிய வெப்பத்தால் சுட்டுவிட்டுப்பிறகு மழையைப் பொழிவிக்கிறது; வியத்தகு பல்வேறு மாற்றங்களை விளைவிக்கும் விதி சட்டதிட்டங்களுக்கு உட்படாதது; அதன் செய்கைகளை நம்பவியலாது; அதன் ஆணைகள் நிச்சயமற்றவை. (VIII, 1970)

அமைதியின் உயர்வைச் சுவைத்து அனுபவிக்க உயர்ந்த உள்ளம் வேண்டும்; இல்லாவிடில் மனத்தின் போக்குகள் மென்மையாகவோ குரூரமாகவோ அமையும். சந்திரகாந்தக் கல் காலில் பட்டால் கடினமாகத் தான் தோன்றும். ஆனால் அதே கல் சந்திரனின் குளிர்ச்சியான அமுதம் போன்ற கதிர்கள் பட்டதும் உருகத் தொடங்கிவிடுகிறது. (VIII, 3030)

நடன அரங்கில் கோமாளி; நகைச்சுவை நாடகங்களில் நாடகாசிரியன்; மாட்டுக் கொட்டிலில், அங்கு காவல்காக்கும் நாய்; மலைச்சரிவிலுள்ள தன் பொந்தில் அணில்; அரண்மனையில் ஆனந்தமாக வாழும் துதிபாடி — இவர்களெல்லோரும்

தங்கள் வீரத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்வார்கள். எனினும் தங்கள் தங்களுடைய இடங்களை விட்டு வெளியே வந்தால் அவர்களது நிலை குளத்தை விட்டு வெளியே இழுத்து வரப்பட்ட ஆமையின் நிலையைப் போலத்தானிருக்கும்.

(VIII, 3139)

இராஜதரங்கிணியைப் பயில்வது மிகவும் எளிதான செயலல்ல. இந்நூலின் மிக நீண்ட பகுதியான எட்டாவது தரங்கத்தில் (3449 செய்யுட்கள்) கல்ஹணர் காலத்தில் நிகழ்ந்த பல தரப்பட்ட நிகழ்ச்சிகளும் விவரிக்கப்படுகின்றன. சிக்கலான வாக்கிய அமைப்பும் கவிதையில் தெளிவின்மையும் இந்தத் தரங்கத்தின் நடையைக் குழப்பிவிடுகின்றன. வரலாற்று ஆசிரியனுக்குச் சிரமத்தைத்தரும் இன்னொரு விஷயம், கல்ஹணர் தம் காலத்துக் காஷ்மீரத்தை நன்கு அறிந்த வாசகர்களுக்காவே தம் நூலைப் படைத்திருப்பதுதான். அவர் தம் காலத்தில் வாழ்ந்த அதிக முக்கியமில்லாத மனிதர்களைப் பற்றிக்கூட வாசகர்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைத்து மேலே விவரங்களைச் சொல்லிக் கொண்டு போகிறார்; சிலருடைய பெயரைச் சொல்லாமலே அவர்கள் வகித்த பதவிகளை மட்டும் குறிப்பிடுகிறார். வேண்டுமென்று நேராவிட்டாலும் இக்குறைகள் நூலின் மிக விரிவான, நம்பகமான பகுதியின் மதிப்பைக் குறைத்து விடுகின்றன.

இவ்வரலாற்றின் பெரும் பகுதி சாதாரண நிகழ்ச்சிகள், அடிக்கடி நிகழும் அரண்மனைச் சதிகள், அரச பதவிக்கு ஆசைப்படும் பேர்வழிகளும் படைத்தலைவர்களும் செய்யும் கலகங்கள், மக்களின் தொடர்ந்த இன்னல்கள் இவற்றை வருணிப்பதால் நாடகத் தன்மை மிகுந்த கவிதைக்கு இதில் அதிக வாய்ப்பில்லை. ஆகவே நூலின் பெரும் பகுதி வசன கவிதையாக எழுதப்பட்டிருப்பது தவிர்க்க முடியாதது. வாசகனுக்கு அலுப்புத்தட்டாமலிருப்பதற்காகக் கல்ஹணர் இடையிடையே கவித்தன்மை நிரம்பிய உவமைகள், கவனத்தை ஈர்க்கத்தக்க முரண்அணிகள், சிலேடையுட்படப் பல்வகைக் கவிதையணிகள் இவற்றைப் பயன்படுத்துகிறார்; ஆயினும் வெறும் சொல்லணியால் பிறக்கும் விளைவை உண்டாக்க முயலவில்லை. உரைநடையில் ஏற்படும் அலுப்பைப் போக்குவதற்காக அவர் சிறிய—ஆனல் சக்தி வாய்ந்த—சொற்பொழிவுகளையும் உரையாடல்களையும் சேர்த்திருக்கிறார். இதன் மூலம் வாசகன் கதைமாந்தர்களின் உள் நோக்கங்களையும், கூட இருப்பவர்களின் மேல் ஏற்படும் எதிர்த்தாக்கங்களையும் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. வாசகனின் கவனத்தைக் கவர்வதற்காக ஆசிரியர்

காவியத்தின் வழக்கமான சந்தத்துக்கு மாறுபட்ட மிகவும் சிக்க லான சந்தங்களில் நீதிகளையும் பொது விதிகளையும் கூறும் செய்யுட் களை இடையிடையே புகுத்தியிருக்கிறார். சுவையற்ற அன்றாட விஷயங்களை விவரிப்பதில் கூட அவர் உயர்ந்த தரமுள்ள கவிதைக் கற்பனையைக் கையாண்டு நேர்த்தியான நடையில் அவற்றை வருணித்துள்ளார். ஆகவேதான் இந்தியர்களாலும் வெளி நாட்டாராலும் வெளியிடப்பட்டுள்ள பழைய தொகை நூல்களிலும் புதிய தொகைநூல்களிலும் கல்ஹணருக்கு ஓர் உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது அவரது கதை சொல்லும் திறமைக்குச் செய்யப்படும் புகழுரையாகும். அவர் பயன்படுத்திய பழமொழிகளில் பல இன்றும் காஷ்மீரத்தில் வழக்கில் உள்ளன.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பும் வரலாற்றுக் காலத்தின் தொடக்கமும்

இலெளகிக ஆண்டு 4224க்கு நேரான சக ஆண்டு 1070 (கி. பி. 1148)ல் தம் நூலைத் தொடங்கி இலெளகிக ஆண்டு 4225 (கி. பி. 1150)ல் அதை முடித்ததாக கல்ஹணர் கூறுகிறார். நூலின் முதல் மூன்று தரங்கங்கள் 3050 ஆண்டுகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விவரிக்கின்றன. இவற்றில் பல செவிவழிச் செய்திகளோடு ஐம்பத்திரண்டு ஆட்சிகளின் கொடிவழிப் பட்டியல்கள் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

கல்ஹணர் சிவபெருமானுக்கு வணக்கம் தெரிவித்துத் தம் நூலைத் தொடங்குகிறார். அவர் வாசகனை ''இனிய வாசகனே!'' என்று விளித்து, ''உணர்ச்சிப் பிரவாகமாகப் பெருகும் இந்த இராஜதரங்கிணியாகிய ஆற்றில் . . . விருப்பம்போல் பருகு''மாறு அவனுக்கு அழைப்பு விடுக்கிறார். காஷ்மீரப் பள்ளத்தாக்கு முதலில் சதி (பார்வதி)யின் ஏரியாக (சதி சரஸ்) இருந்ததாகவும், ஜலோத்பவன் என்ற அசுரனைக் கொன்ற பிரஜாபதி கசியபரின் வருகையால் காஷ்மீர அரசு நிறுவப்பட்டதென்றும் அவர் கூறு கிறார். மற்ற இடங்களைச் ''சுட்டெரிக்கும் சூரியன் கோடை காலத்தில்கூட இந்த நாட்டை மிதமாக வெப்பமாக்கி இதற்கு மரியாதை செலுத்துகிறான்.'' இந்த நாடு ''நாகர்களின் அதிபதி யான நீலனின் பாதுகாப்பில் உள்ளது''; ''ஆத்ம பலத்தால் அன்றி படை பலத்தால் வெல்லமுடியாதது.'' கல்ஹணர் காஷ்மீரப் பள்ளத்தாக்கின் சிறப்பான பண்புகளை இவ்வாறு கூறு கிறார்: ''கல்வி[1], உயர்ந்த வீடுகள், குங்குமப் பூ, பனிபோல் குளிர்ந்த நீர், திராட்சை—சுவர்க்கத்தில் கிடைக்காத பொருள் கள்கூட இங்கு மிக எளிதில் கிடைக்கும்.''

நூலின் தொடக்கத்தில் அடிக்கடி காணப்படுகின்ற செவிவழிச் செய்திகளும் குட்டிக் கதைகளும் கல்ஹணரால் தம் காலத்தில் வழக்கிலிருந்த மரபுவழி அறிவுக்குவையிலிருந்து எடுத்துக்

---

[1] பழங்காலத்திலிருந்தே காஷ்மீரம் வடமொழிக் கல்வியில் சிறந்து விளங்கிய தென்று கூறியிருப்பவர்களுள் சீன யாத்திரிகர் ஹியூன் சாங்கும் ஒருவர். கல்ஹணருக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் காஷ்மீரத்திற்கு வந்த அவர் கூறுகிறார்: ''காஷ்மீர மக்கள் கல்வியில் ஆர்வமுள்ளவர்கள், சிறந்த பண்பாளர்கள். காஷ்மீரத்தில் பல நூற்றாண்டுகளாகக் கல்வி மிகவும் போற்றப்பட்டு வந்திருக்கிறது.''

கொள்ளப்பட்டவை. ''கல்ஹணரோ அல்லது அவர் பின்பற்றிய ஆசிரியர்களோ நம்பிய கதைகளிலிருந்து மாறுபட்ட செவிவழிக் கதைகளை அவர் சில இடங்களில் குறிப்பிடுகிறார்'' என்று கூறுவர் ஸ்டெய்ன்.

மிகப் பண்டைய காலத்தில் ஐம்பத்திரண்டு அரசர்கள் காஷ்மீரத்தை ஆண்டதாகக் கல்ஹணர் கூறுகிறார். இவர்களுள் நால்வரே—முதலாவது கோநந்தன், அவனுடைய மகன் தாமோதரன், அவனுடைய இராணி யசோவதி, அவளுடைய மகன் இரண்டாவது கோநந்தன்—நீலமத புராணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். தம் காலத்தில் வழக்கிலிருந்த மரபுவழி அறிவுக்குவையைப் பின்பற்றிக் கல்ஹணர் இந்த அரசர்கள் மகாபாரதக் கதையுடன் தொடர்புகொண்டவர்களென்று கூறுகிறார். முதலாவது கோநந்தன் மகத மன்னன் ஜராசந்தனின் உறவினன்; கிருஷ்ண—ஜராசந்தப் போரில் ஜராசந்தனுடைய உதவிக்குச் சென்று அந்தப் போரில் மாண்டான். அவனுடைய மகன் முதலாவது தாமோதரன் தன் தந்தையின் மரணத்துக்குப் பழிவாங்க விரும்பிக் கிருஷ்ணனுடன் காந்தாரத்தில் போர்செய்து மாண்டான். கிருஷ்ணனின் ஆலோசனைப்படி காஷ்மீரப் பிரபுக்கள் அப்போது சூலுற்றிருந்த அவனுடைய இராணி யசோவதியை இராணியாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். அவளுடைய மகன் இரண்டாவது கோநந்தன் குழந்தைப் பருவத்திலேயே முடிசூட்டப்பட்டான். மகாபாரதப் போர் நடந்தபோது அவன் சிறுவன். மகாபாரதத்தில் காஷ்மீரமோ அதன் அரசனோ குறிப்பிடப்படாததற்கு ஒரு வேளை இது காரணமாக இருக்கலாம்.

பிறகு கல்ஹணர் கூறுகிறார் (தரங்கம் I, 83): ''இரண்டாவது கோநந்தனுக்குப் பிறகு ஆண்ட முப்பத்தைந்து மன்னர்களின் பெயர்களும் அவர்களுடைய செயல்களைப்பற்றிய குறிப்புகளும் அழிந்துபோனதால் அவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.''

ஒரு நகரம் வூலார் ஏரி (இந்தியாவின் மிகப் பெரிய நல்ல நீர் ஏரி)யில்[2] அமிழ்ந்துபோனதாகச் சொல்லும் கதைகளும் ஹிமால், நாக்ரே, பாம்பூர், லோலார் ஆகிய இடங்களில் மக்களிடையே வழங்கும் கதைகளும் இந்த அரசர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

[3]பாண்டவ மரபுவழியைச் சேர்ந்த மன்னர்கள் ஒரு காலத்தில் காஷ்மீரத்தை ஆண்டதாகவும் மேலே குறிப்பிடப்பட்ட மன்னர்

---

[2] இதுபற்றிச் சில முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் கூறியிருப்பது நம்பத்தக்கதாக இல்லை.

[3] இப்போது இடிந்துபோயிருக்கும் மார்த்தாண்டர் கோவிலும் வேறு சில பழைய கோவில்களும் இப்போதும் 'பாண்டவ—லாரி' (பாண்டவர்களின் கட்டடங்கள்) என்று மக்களால் வழங்கப்படுகின்றன.

களுள் இருபத்து மூவர் பாண்டவ மரபினரென்றும் ஒரு நம்பிக்கை காஷ்மீர மக்களிடையே நிலவுகிறது. அருச்சுனனின் ஒரு பேரனான ஹரண தேவன் சூழ்ச்சியால் இரண்டாவது கோநந்தனைக் கொலை செய்ய ஏற்பாடு செய்து காஷ்மீரத்தில் பாண்டவ மரபு வழியை நிறுவியதாகச் சொல்லப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட அரசர்களுக்குப் பிறகு லவன், குசன், ககேந்திரன், சுரேந்திரன், கோதரன், சுவர்ணன், ஜனகன், சசீநரன் என்ற எட்டு அரசர்களின் ஆட்சி நடந்தது. இவர்களுள் முதல் நால்வர் ஒரு மரபுவழியையும் மற்ற நால்வர் வேறொரு மரபுவழியையும் சேர்ந்தவர்கள். இவர்களால் நிறுவப்பட்ட சில நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவர்களைப்பற்றிய திட்டவட்டமான வரலாறு ஒன்றும் கிடைக்கவில்லை.

வரலாற்றில் காணப்படும் முதல் அரசன் அசோகன். இவன் ஜீனரின் (அதாவது புத்தரின்) சமயத்தைப் பின்பற்றியதாகவும், பல தூபிகளையும் விஹாரங்களையும் கட்டியதோடு ஸ்ரீநகரம் என்ற பட்டணத்தையும் நிறுவியதாகவும் கல்ஹணர் கூறுகிறார். இவன் அசோகேசுவரம் எனப்படும் ஒரு சிவன் கோவிலையும் கட்டினான். இந்த மன்னனைக் காஷ்மீர அரசனாகவே கல்ஹணர் குறிப்பிட்டாலும் வரலாற்று ஆசிரியர்கள் (ஆண்டுக்கணக்கில் வேற்றுமை இருந்தாலும்) இவன் மகத நாட்டு மாமன்னன் அசோகன்தான் என்று கூறுகிறார்கள். அசோக மாமன்னனின் பேரரசு கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே இந்துகுஷ் வரையில் பரவியிருந்தது என்பது நினைவுகூரத்தக்கது.

அசோகன் காஷ்மீரத்தில் ஹர்முகுட கங்கைக் கோவிலில் பூதேசன் சிவனைத் தொழுது, ''அவனுடைய நோன்பால் மகிழ்ந்த கடவுளிடமிருந்து பிள்ளைவரம் பெற்றதாக''க் கல்ஹணர் சொல்கிறார். அசோகனுக்குப் பின்வந்த அவன் மகன் ஜலௌகன் சுதந்திர அரசனாக ஆட்சி செய்தான். கல்ஹணர் அவனைப்பற்றிப் பல மரபுக் கதைகளைக் கூறுகிறார். அவன் நாடோறும் பூதேசர் கோவிலிலும் விஜயேசுவரர் கோவிலிலும் தொழுவது வழக்கம். சிறந்த வீரனான ஜலௌகன் நாட்டிலிருந்த மிலேச்சர்களை விரட்டினான் (இவர்கள் காஷ்மீரத்தின் எல்லையையொட்டிய பகுதிகளைக் கைப்பற்ற முயற்சி செய்த இந்தோ–கிரேக்கர்களாக இருக்கலாம்). அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு ஜலௌகன் பட்டத்தைத் துறந்துவிட்டுத் தன் இராணியுடன் சிரமோசனம் என்ற இடத்துக்குச் சென்று அங்கு தன் இறுதி நாட்களைத் தியானத்தில் கழித்தான்.

ஜலௌகனுக்குப்பின் அரசனானவன் இரண்டாவது தாமோதரன் (இவன் அசோகனின் வழித் தோன்றலாக இருக்கலாம்). இவன்

ஒரு மேட்டு நிலப்பரப்பில் "தாமோதர் உதர்" என்ற பெயரில் ஒரு நகரத்தை நிறுவினுன். இந்த இடத்தில்தான் இப்போது ஸ்ரீநகர விமான நிலையம் இருக்கிறது. இந்த இடம் இன்னும் இதன் பழைய பெயராலேயே வழங்கப்படுகிறது.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் வடமேற்கு இந்தியா வெளிநாட்டினரின் படையெடுப்புகளுக்கு உட்படலாயிற்று. காஷ்மீரப் பள்ளத்தாக்கு இப்படையெடுப்புகளிலிருந்து தப்பியிருக்க முடியாது. ஆனுல் இராஜதரங்கிணியில் இரண்டாவது தாமோதரனின் மரணத்துக்கும் குஷான் (துருஷ்க) அரசர்களின் வருகைக்குமிடையே இரண்டு நூற்றுண்டு இடைவெளி காணப்படுகிறது. குஷான் அரசர்கள் ஹூஷ்கன், ஜூஷ்கன், கனிஷ்கன் (கல்வெட்டுகளின்படி இவர்கள் முறையே ஹுவிஷ்கன், வசிஷ்கன், முதலாவது அல்லது இரண்டாவது கனிஷ்கன்—அநேகமாக முதலாவது கனிஷ்கன்தான்) ஆகியோருடைய வரலாறு உண்மை வரலாருகும். ஒரே சமயத்தில் ஆட்சி செய்ததாகச் சொல்லப்படும் இந்த அரசர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பெயரில் ஒரு நகரத்தை நிறுவினுர்கள். அவை இன்றும் ஹூஷ்கபுரம், ஜூஷ்கபுரம், கனிஷ்கபுரம் என்ற பெயர்களைத் தாங்கியுள்ளன.

குஷான் அரசர்களைப்பற்றிய கல்ஹணரின் வருணனை அவர்கள் காஷ்மீரப் பள்ளத்தாக்கை ஆண்டதை உறுதிப்படுத்துகிறது. (அவர்கள் காஷ்மீரத்தில் பௌத்த சமயத்தைப் பரப்பினுர்கள் என்பதை ஹியூன் சாங்கும் ஆல்பெருனியும் உறுதிப்படுத்தியிருக்கிருர்கள்). பௌத்த வரலாற்று மரபுப்படி கனிஷ்கன் காஷ்மீரத்தில் மூன்ருவது பௌத்தப் பேரவையைக் கூட்டினுன். குஷானர்கள் பல மடங்களையும் 'சைத்திய'ங்களையும் கட்டியது உறுதி. ஆனுல் அவற்றில் ஒன்றுகூட இப்போது இல்லை. மூன்ருவது பௌத்தப் பேரவை பௌத்த சமய வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பமாகும். இந்தப் பேரவை காஷ்மீரத்தில் தோன்றி வளர்ந்த மகாயானக் கொள்கைக்கு ஆதரவளித்தது.

மகாயானத்தின் தலைசிறந்த ஆசாரியரான நாகார்ஜுனர்[4] (இவர் அசுவகோஷருக்கு அடுத்தபடி பௌத்த சமயத்தின் மிகப் பெரிய ஆசானுகக் கருதப்படுகிருர்.) சாரதார்த்வன் (தற்காலத்தில் 'ஹர்வன்'—இங்கு பௌத்த சமயத் தொடர்புள்ள இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.) பல்கலைக் கழகத்தில் தன் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்ததாகக் கல்ஹணர் கூறுகிருர்.

மாபெரும் அரசர்களாகிய குஷானர்களுக்குப் பிறகு முதலாவது அபிமன்யு போன்ற உள்ளூர் அரசர்கள் ஆட்சி புரிந்ததாகத்

[4] ஜப்பானிய அறிஞர் சிலரின் உரைகள் காரணமாக நாகார்ஜுனரின் தத்துவங்களில் அண்மைக் காலத்தில் அக்கறை பிறந்திருக்கிறது.

தெரிகிறது. அவர்கள் சமயத் துறையில் குஷானர்களைப் பின்பற்றினாலும் அவர்களால் பௌத்தர்களுக்கு எதிரான இயக்கத்தைத் தடுக்க முடியவில்லை. அடுத்த அரசன் மூன்றாவது கோநந்தனும் அவனுக்குப் பின்வந்த நான்கு மன்னர்களும் காஷ்மீரத்தின் பரம்பரை சமயமான சைவத்துக்கே ஆதரவளித்தார்கள். அவர்களுக்குப் பிறகு இன்னும் ஐந்து அரசர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

அடுத்தாற்போல் கல்ஹணரால் குறிப்பிடப்படும் முக்கிய அரசன் வன்குலனின் மகன் மிகிரகுலன் ஆவான். குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு வடஇந்தியாவின் பெரும் பகுதியை ஆண்ட வெள்ளை ஹூண அரசன் இவனே என்பதில் ஐயமில்லை. இவன் காஷ்மீரப் பள்ளத்தாக்கைக் கைப்பற்றினான் என்பது ஹியூன் சாங்காலும்[5], கல்வெட்டுகள் போன்ற பிற சான்றுகளாலும் உறுதிப்படுகிறது. மிகிரகுலன் பேராசை மிக்க கொடுங்கோலனென்றும் அவன் பௌத்தர்களைத் துன்புறுத்தி அவர்களுடைய தூபிகளையும் மடங்களையும் இடித்து மகிழ்ந்ததாகவும் கல்ஹணர் குறிப்பிடுகிறார். அவன் இலங்கை மன்னனைப் போரில் நன்றாகத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. அவன் ஸ்ரீநகரத்துக் கருகில் ஒரு சிவன் கோவிலை[6] நிறுவியதாகவும், தன் பெயரில் ‘மிகிரபுரம்’ என்ற பட்டணத்தையும் உண்டாக்கியதாகவும் கல்ஹணர் சொல்கிறார். மிகிரகுலன் மனநோயால் பீடிக்கப்பட்டுத் தற்கொலை செய்துகொண்டான்.

மிகிரகுலனின் மரணத்துக்குப் பின் சுமார் ஒரு நூற்றாண்டு காலம் காஷ்மீர வரலாறு மீண்டும் இருளில் அமிழ்ந்துபோய்விடுகிறது. மிகிரகுலனுக்குப் பின்வந்த அரசர்களில் ஒருவன் கோபாதித்தியன். இராஜதரங்கிணியில் குறிப்பிடப்பட்ட மற்ற பல அரசர்களைவிட இவன் வரலாற்றில் குறிப்பிடத் தக்கவன். ஏனெனில் இவன் ஸ்ரீநகரத்திலுள்ள கோபா குன்றில் (இப்போது இது ‘சங்கராசாரியார் குன்று’ என்று வழங்கப்படுகிறது.) ஜியேஷ்டேசுவரர் கோவிலைக் கட்டினான். இவனுடைய பேரனை கிங்கிலாதரன் தன் நாணயங்களில் தன்னை ‘‘தேவ சஹி கிஹிங்கிலன்’’ என்று வழங்கிக்கொண்ட ஹூண அரசன் ஆவான்.

இரண்டாவது தரங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு அரசர்கள் வேறு மரபு வழிகளைச் சேர்ந்தவர்கள். முதலாவது யுதிட்டிரனை அரியணையிலிருந்து இறக்கி நாடுகடத்திய பிரபுக்கள் விக்கிர

[5] ‘ஸி—யூ—கி’ (பீல் என்பவரின் மொழிபெயர்ப்பு) I, பக்கம் 167.

[6] வி. ஸ்மித் ‘‘இந்திய அரும் பொருட் காட்சியகத்திலுள்ள நாணயங்களின் அட்டவணை’’யில் மிகிரகுலனின் நாணயங்களிலிருந்து அவன் ஒரு சைவ வழிபாட்டாளன் என்ற கல்ஹணரின் கூற்றை உறுதிப்படுத்துகிறார்.

மாதித்தியனின் உறவினன் ஒருவனை அழைத்து அவனுக்கு 'முதலாவது பிரதாபாதித்தியன்' என்ற பெயரில் முடிசூட்டினார்கள். உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாகக் காஷ்மீரம் சிலகாலம் ''ஹர்ஷன் போன்ற வெளிநாட்டு அரசர்களின்'' ஆட்சியில் இருந்தது. இந்த 'ஹர்ஷன்' கி. பி. ஆறும் நூற்றாண்டின் முன்பாதியில் உஜ்ஜயினியை ஆண்ட ஹர்ஷவிக்கிரமாதித்தியன் என்று ஊகிக்கப்படுகின்றான்; ஆனால் கல்ஹணரின் கால வரிசைக் கணக்கில் தவறு இருக்கலாம். முதலாவது பிரதாபாதித்தியனும் அவனுடைய புதல்வனான ஜலௌகனும் ஆளுக்கு முப்பத்திரண்டு ஆண்டுகள் நாட்டை நீதியோடு ஆண்டதாகக் கல்ஹணர் கூறுகிறார்.

அவர்களுக்குப் பிறகு அரசனானவன் நாடுகடத்தப்பட்ட யுதிட்டிரனின் மரபு வழியைச் சேர்ந்த துஞ்சினன். இவனுடைய ஆட்சிக் காலத்தில் மிகுந்த உயிர்ச் சேதத்தை விளைவித்த கொடிய பஞ்சத்தை மிக விளக்கமாக வருணிக்கிறார் கல்ஹணர். துஞ்சினனுடைய கடவுட்பற்று மிக்க இராணி வாக்புஷ்டா கதிமுஸா (இப்போது 'கைமூ'), கிராமுஸா (இப்போது 'இராமூ') ஆகிய நகரங்களை நிறுவினாள். இராஜதரங்கிணியின் இரண்டாவது தரங்கத்தில் குறிப்பிடப்பெறும் கடைசி அரசனான ஆரிய ராஜனின் முடிதுறப்புக்குப்பின் கோநந்த மரபு மீண்டும் காஷ்மீரத்தில் அரியணை ஏறியது.

முதல் அரசன் மேகவாகனன் கோபாதித்தியனின் மகன். இவன் அஸ்ஸாம் மன்னனின் மகளான அமிருதப் பிரபையின் சுயம் வரத்துக்குச் சென்றான். அவள் இவனைத் தன் வாழ்க்கைத் துணைவனாகத் தேர்ந்தெடுத்தாள். திறமையும் கடவுட்பற்றும் மிக்க இந்த அரசன் இலங்கைவரையில் தன் படைகளை நடத்திச் சென்று பல நாடுகளை வென்றான். இவன் மேகவனம் என்ற நகரத்தை நிறுவினான். இராணி அமிருதப் பிரபை வெளிநாட்டு பிட்சுக்கள் (துறவிகள்) வந்து தங்குவதற்காக அமிருத பவனம் என்ற மடத்தை நிறுவினாள்.

மற்றொரு முக்கிய அரசன் உஜ்ஜயினி மன்னன் விக்கிரமாதித்தியனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவி மாத்ருகுப்தன்.[7] கவியரங்கேறிய இந்த அரசன் கல்விக்கு மிக்க ஆதரவு அளித்தான். இவன் 'ஹயக்கிரீவவதம்' எழுதிய பத்ரிமெந்தர் (அல்லது

---

[7] புகழ்பெற்ற வடமொழிக் கவிஞரும் நாடகாசிரியருமான காளிதாசர்தான் இந்த மாத்ருகுப்தன் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆராய்ச்சியாளர் டாக்டர் பௌதாஜி சொல்கிறார்: ''காளிதாசர் உஜ்ஜயினியில் வாழ்ந்தாலும் அவர் காஷ்மீரத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அவருடைய வருணனைகள் பெரும்பாலும் வடஇந்தியாவின்—குறிப்பாகக் காஷ்மீரத்தின்—இயற்கைக் காட்சிகளையும் நில அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.'' டாக்டர் எல். டி. கல்லாவும் காளிதாசர் காஷ்மீரத்தில் பிறந்தவர் என்று சொல்கிறார்.

'மெந்தர்') என்ற பெருங் கவிஞரை ஆதரித்ததாகக் கல்ஹணர் குறிப்பிடுகிறார். வைணவ சமயத்தைப் பின்பற்றிய மாத்ருகுப்தன் விஷ்ணு மாத்ருகுப்த சுவாமிக்குக் கோவில் எழுப்பினான். விக்கிரமாதித்தியனின் மரணத்தால் வலியிழந்த மாத்ருகுப்தன் இரண்டாவது பிரவரசேனனுக்கு[8] ஆதரவாகத் தானே முடிதுறந்தான். வீரனான பிரவரசேனன் காஷ்மீரப் பள்ளத்தாக்குக்கு வெளியே படையெடுப்புகள் நடத்தி கங்கை—யமுனைச் சமவெளியையும், சௌராஷ்டிரத்தையும், திரிகர்த்தா நாட்டையும் கைப்பற்றினான். இதன் விளைவாக உஜ்ஜயினி அரசனின் ஆதிக்கத்திலிருந்தும் விடுதலை பெற்றான். இப்போது ஸ்ரீநகரம் இருக்குமிடத்தில் பிரவரபுரம் என்ற நகரத்தையும் அவன் நிறுவினான்.

பிரவரசேனனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நான்காவது அரசன் இரணாதித்தியனைப்பற்றிக் குறிப்பிடும் கல்ஹணர் அவன் முன்னூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படும் கதையை மேற்கோளாகக் காட்டுகிறார். ''இயற்கைக்குப் புறம்பான இவ்வளவு நீண்ட ஆட்சிக் காலம் அந்தக் காலத்தின் உண்மையான வரலாறு அழிந்துவிட்டதென்பதையே காட்டுகிறது'' என்கிறார் பேராசிரியர் ஆர். சி. மஜும்தார் ('கிளாஸிகல் ஏஜ்'—பக்கம் 132). இந்த நீண்ட ஆட்சிக் காலத்துக்கு ஏதாவது யோகவலிமை காரணமாக இருக்கலாம் என்று சொல்லும் [9]திரிவேதா ''இந்த இடைவெளியில் ஒரு குடியரசு இருந்திருக்கலாம்'என்று பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்'' என்றும் கூறுகிறார். இரணாதித்தியன் சோழ மன்னன் இரதிசேனனின் பெண் இரணரம்பையை மணந்ததாகச் சொல்லப்படுகிறது. அவன் கட்டிய சிவன் கோவிலைப்பற்றியும் நிறுவிய மற்ற அறநிறுவனங்களைப்பற்றியும் பாராட்டி எழுதுகிறார் கல்ஹணர்.

இரணாதித்தியனின் புதல்வன் விக்கிரமாதித்தியன் நாற்பத்தோரு ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவன் நிறுவிய சில புனிதக் கட்டடங்களைப்பற்றிக் கல்ஹணர் கூறியிருக்கிறார். மூன்றாவது தரங்கத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசன் துர்லபவர்த்தனன் திறமையும் கூரிய அறிவும் படைத்தவன். அவன் தன் அமைச்சன் கங்கனுடன் விபசாரம் செய்த தன் மனைவியை மன்னித்துவிட்டான். அவனுடைய மரணத்துடன் காஷ்மீரத்தில் கோநந்த மரபு வழி ஆட்சி முடிவுற்றது.

---

[8] பிரவரசேனனின் நாணயங்கள் அவனது வரலாற்றை உறுதிப்படுத்துவதோடு குஷான எப்தால அரசர்களுடன் அவனது உறவையும் காட்டுகின்றன. கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை காஷ்மீர அரசர்கள் 'கிடார குஷானர்கள்' (அதாவது 'சிறிய குஷானர்கள்') என்றழைக்கப்பட்ட மரபுவழியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

[9] டி. எஸ். திரிவேதா—'தி ஜர்னல் ஆஃப் தி பீகார் & ஒரிஸ்ஸா ரிசர்ச் சொஸைட்டி', 1938. மேற்கோள் காட்டியவர்—டாக்டர் கே. எஸ். சாக்ஸேனா, 'காஷ்மீரத்தின் அரசியல் வரலாறு', (1974) என்ற நூலில்.

கார்க்கோடர்களும் அவர்களுக்குப் பின்பும்

கார்க்கோடர்கள் காஷ்மீரத்தில் ஆட்சிக்கு வந்தது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஏனெனில் அவர்களது ஆட்சி பல நூற்றுண்டுகள் தொடர்ந்தது. இதே சமயத்தில் இந்தியாவின் வடபகுதியில் பல இராஜபுத்திர அரசுகள் தோன்றி மறைந்து போய்விட்டன என்பது நினைவு கூறத் தக்கது.

'கார்க்கோட' என்ற மரபுப் பெயர் துர்லபவர்த்தனனிடமிருந்து வந்ததாகும். துர்லபவர்த்தனன் நாடெங்கும் வழிபாடு செய்யப் பெறும் நாக தேவதையான கார்க்கோட நாகத்தின் மரபில் பிறந்தவன் (தரங்கம் III 529—30) என்று சொல்லப் பட்டது. துர்லபவர்த்தனனின் முன்னோர் புகழ்பெற்றவர்களாக இல்லாததால் அவனுடைய மரபுக்குப் பெருமையளிப்பதற்காக இந்தக் கதை கற்பனை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

துர்லபவர்த்தனனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 625—661) காஷ்மீரத்துக்கு வந்த சீனப் பிரயாணி ஹியூன் சாங் காஷ்மீரப் பள்ளத்தாக்கைத் தவிர (சிந்து நதிக்குக் கிழக்கே உள்ள) தட்சசீலமும், உரசா (ஹஜாரா)வும், சிம்மபுரமும் (உப்பு மலைத் தொடரும், இராஜபுரி, பூஞ்சு குன்றுப் பகுதிகளும்) காஷ்மீர அரசில் சேர்ந்திருந்தன என்று கூறுகிறார். அவன் காலத்தில் கன்னோசியில் ஆட்சி செய்த புகழ்பெற்ற அரசன் ஹர்ஷவர்த்தனனைப்போல் துர்லபவர்த்தனனும் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவன். அவனுடைய மகன் இரண்டாவது பிரதாபாதித்தியன் துர்லபகன் தந்தைக்குப் பின் ஆட்சிக்கு வந்தான் (கி.பி. 661—711). அவனுக்குப் பின் வந்தவன் அவனுடைய மூத்த மகன் சந்திராபீடன். கி.பி. 715 முதல் 720 வரையில் காஷ்மீரத்தை ஆண்டதாகச் சீன வரலாற்றில் கூறப்படும் 'ச்செந்—தோ—லோ—பி—லி' இவன்தான் என்று கருதப்படுகிறது. பக்தியிலும் நீதியிலும் தலைசிறந்த இவனைப் பற்றிக் கல்ஹணர் பல கதைகள் கூறியுள்ளார்.

கார்க்கோட அரசர்களுள் மிகவும் சக்திவாய்ந்த ஓர் அரசன் முக்தாபீட லலிதாதித்தியன் (கி.பி. 699—736). அவனது ஆட்சி

காஷ்மீரத்தையும் அதையடுத்த பகுதிகளையும் கடந்து வெகு தொலைவு வரை பரவியிருந்தது. மேலும் மேலும் நாடுகளை வெல்ல விரும்பிய அவன் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் படையெடுப்புகளிலேயே கழித்தான். அவனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் ஜலம்தாரா (இப்போது 'காங்க்ரா') உலோகாரா ('பூஞ்சு') பகுதிகளை ஆண்டார்கள். அவன் தொலைவிலிருந்த அரசுகளான[1] கன்னோசி, வங்காளம், ஒரிஸ்ஸா, காம்போஜம் (கிழக்கு ஆப்கனிஸ்தானம்) ஆகியவற்றின் மேலும் படையெடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அவன் ஒரிஸ்ஸாக் கடற்கரையிலிருந்து மேற்கே திரும்பி, இரத்தா இராணியின் உதவியுடன் விந்திய மலையைக் கடந்ததாகக் கல்ஹணர் சொல்கிறார். அவனுடைய படைகள் சென்ற வழி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் செய்த போர்களில் முக்கியமானது யசோவர்மனுடன் நிகழ்த்தியதாகும். இந்தப் போரில் வெற்றி பெற்றதால் லலிதாதித்தியன் கன்னோசியைக் கைப்பற்றியதோடு ஒரு பெரிய நிலப்பரப்பில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டுவிட்டான். அவன் மாளவத்தையும் கூர்ஜரத்தையும் வென்றதாகவும் சிந்துவைச் சேர்ந்த அராபியர்களைத் தோற்கடித்ததாகவும் தெரிகிறது.

தங்கள் அரசன் துருக்கர்களைத் தோற்கடித்ததாகக் காஷ்மீர மக்கள் நம்புகிறார்கள்.[2] லலிதாதித்தியன் 'துகரர்'களின் நாட்டிலிருந்து சங்குனன் என்பவனை அழைத்து வந்து அவனைத் தன் அமைச்சனுக்கிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. கல்ஹணரின் கூற்றுப்படி சங்குனன் இரண்டு விஹாரங்களையும்[3] ஒரு தூபியையும் கட்டினான். லலிதாதித்தியனின் பெரும் வெற்றிகள்[4] காரணமாக, குப்தர்களின் காலத்துக்குப் பிறகு இந்தியாவின் ஆற்றல் மிக்க ஒரு பேரரசாக அவனுடைய பேரரசு திகழ்ந்தது. அவன் கட்டிய மார்த்தாண்டர் கோவிலின் இடிபாடு இன்றும் காஷ்மீரத்தின் மிகப் பெருமை வாய்ந்த பண்டையச் சின்னமாகத் திகழ்கிறது.[5] 'அவன் காலத்தில் கட்டப்பட்ட சில தூபிகளும் விஹாரங்களும் சைத்தியங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

---

[1] லலிதாதித்தியனின் நாணயங்கள் கன்னோசி, பண்டா, பைஜாபாத், வாராணசி (இராஜ்காட், சாரநாத்), நாளந்தா, மாங்கிர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. அவன் படைகளுடன் கிழக்கு நோக்கி வெற்றிகரமாக முன்னேறிய பாதையை இந்த நாணயங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

[2] ஆல் பெருனியின் நூலில் காஷ்மீர அரசன் 'முட்டை' (முக்தாபீடன்) துருக்கர்களை வெற்றி கொண்டதாக உள்ளூர் மரபு ஒன்று குறிப்பிடப்படுகிறது.

[3] இவற்றில் ஒரு விஹாரத்துக்குச் சீனப் பயணி 'ஔ-காங்' சென்றிருக்கிறார். கல்ஹணரின் காலத்தில் ஓர் அமைச்சனின் கடவுட்பற்று நிறைந்த மனைவி சுஸ்ஸலாவினால் ஒரு விஹாரம் பழுது பார்க்கப்பட்டது.

[4] லலிதாதித்தியன் பிற்காலத்தில் 'பௌட்டர்' (திபெத்தியர்)களை வெற்றி கொண்டதைத் 'தாங்' காலத்துச் சீன வரலாறுகள் உறுதிப்படுத்துகின்றன.

[5] எஸ். சி. ராய்: 'காஷ்மீரத்தின் தொடக்ககால வரலாறும் பண்பாடும்,' பக்கம் 49.

அவற்றின் இடிபாடுகள் கட்டடங்கள் எழுப்புவதில் அவனுக்கேற் பட்ட புகழ் நியாயமானது என்பதை மெய்ப்பிக்கின்றன.' லலிதாதித்தியன் கட்டிய பரிகாசபுரத்தில் பௌத்த விஹாரங் களும் இந்துக் கோவில்களும் அருகருகே இருந்தன. இன்னும் எஞ்சியிருக்கும் அவற்றின் இடிபாடுகள் அவனுடைய சகிப்புத் தன்மையை மெய்ப்பிக்கின்றன. ஒரு மாபெரும் வீரனுகவும், திறமை வாய்ந்த அரசனுகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ள இந்த அரசன் தன் படையெடுப்பு ஒன்றின்போது இறந்துபோனுன். மனுபோன்ற இந்துச் சட்டவல்லுநர்களின் கொள்கைப்படி அரசு ஏழு அங்கங்கள் ('சப்தாங்கம்') கொண்டது. இந்தக் கொள்கைக் கேற்ப, தானிறந்து போனுல் அரசு எப்படி நடத்தப்படவேண்டும் என்பது பற்றி லலிதாதித்தியன் தன் அமைச்சர்களுக்குக் கட்டளை யிட்டிருந்தான்.

லலிதாதித்தியன் வீரத்திலும் இராணுவத் திறமையிலும் சிறந்தவன் மட்டுமல்லன்; அவன் ஒரு சிறந்த ஆட்சியாளனும், கலை, கல்வி இவற்றின் ஆதரவாளனுங்கூட. அவனுல் வெற்றிக் கொள்ளப்பட்ட யசோவர்மனின் அரசவைக் கவிஞர்களான பவபூதிக்கும் வாக்பதிராஜருக்கும் அவன் ஆதரவளித்ததாகக் கல்ஹணர் கூறுகிருர். அவன் காலத்தில் காஷ்மீரம் வெளிநாட்டு அறிஞர்களுக்கு ஒரு புண்ணியத்தலமாக இருந்தது. வெளிநாடு களிலிருந்து பல பண்பாட்டுக் குழுக்கள் காஷ்மீரத்துக்கு வந்து அரசனுல் வரவேற்கப்பட்டன. கிரேக்க, காந்தார, குப்தர்களின் கலைப்பாணிகள் ஒருங்கிணைந்த காஷ்மீரத்துப் பாணி லலிதாதித் தியனுல் தோற்றுவிக்கப்பட்டது.

காஷ்மீர மக்கள் பல நூற்ருண்டுகள் வரை லலிதாதித் தியனின் வெற்றிகளைப் பாராட்டி, மன்னிக்கத்தக்க மிகையோடு அவனை 'உலகத்துக்கு அரசன்' என்று கொண்டாடினுர்கள். ஆயினும் அவனிடமும் குறைகள் இருந்தன. அவற்றைக் கல்ஹணர் மறைத்திலர். அவன் மதுவிலும் மங்கையரிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் என்று அவருடைய நூலிலிருந்து தெரி கிறது. முப்பத்தாறு ஆண்டுகள் அரசு செலுத்திய பின் அவன் கி.பி. 736ல் காலமானுன். அவனுக்குப்பின் வந்தவர்கள் பல மற்றவர்களாகவும் சோம்பேறிகளாகவும் இருந்தார்கள்; அவர் களால் கார்க்கோட மரபின் ஆற்றலையும் பெருமையையும் காப் பாற்ற முடியவில்லை.

கார்க்கோட மரபின் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்த வனும் லலிதாதித்தியனின் பேரனுமான ஜயாபீடன் (கி.பி. 751–782) காஷ்மீரத்தின் இழந்த பெருமையைத் திரும்பப் பெறத் தீவிர முயற்சி செய்தான். அவன் எண்பதாயிரம் வீரர்கள்

கொண்ட படையை நடத்திக்கொண்டு பிரயாகை (அலகாபாத்), கன்னோசி, நேபாளம் வரையில் சென்று பெற்ற வெற்றிகளைக் கல்ஹணர் விவரமாக வருணித்துள்ளார். அவன் வங்காளத் துக்குச் சென்று அங்கு ஆண்ட ஜயந்தன் என்ற இளவரசனின் மகளை மணந்து கொண்டான். ஜயாபீடனும்[6] லலிதாதித்தியனைப் போல் 'உலகத்தை வெற்றிக் கொள்ள'ப் புறப்பட்டான். அவனும் வூலார் ஏரிக்கரையில் ஜயபுரம் (இப்போது இதன் பெயர் 'ஆண்டார் கோட்') என்ற நகரத்தை நிறுவினான். அவனுடைய அவையில் தாமோதர குப்தர், மனோரதர், சங்கதந்தர் போன்ற அறிஞர்கள் இருந்தார்கள். பாணினியின் புகழ்பெற்ற இலக்கணத் துக்குப் புகழ்பெற்ற உரையான 'காசிகாவர்த்தி'யின் ஆசிரியர்களில் ஒருவரான வாமனர் ஜயாபீடனின் அமைச்சர்களில் ஒருவர். அவ னுடைய பாட்டனாரைப்போல் ஜயாபீடனைப் பற்றியும் பல செவி வழிக் கதைகள் வழங்குகின்றன.

தன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் தன் ஆற்றலுக்கு அதிக மான படையெடுப்புகளில் ஈடுபட்டதால் கருவூலம் காலியாகி விடவே ஜயாபீடன் பேராசை கொண்டு குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலிக்கத் தொடங்கினான். வூலார் ஏரியின் நாக தேவதை பக்கத்திலிருந்த ஒரு செம்புச் சுரங்கத்தைப்பற்றி அவ னுக்குக் கூறியதாக ஒரு கதை வழங்குகிறது. இந்தக் கதை அரசன் செல்வம் சேர்த்துக்கொள்ள விரும்பியதைக் குறிப்பிடு கிறது. படை வீரர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அரசு நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது. அரசன் தன்னுடைய நிதி ஆலோசகன் சிவதாசனின் உதவியுடன் உழவர்களின் பங்கு உட்பட நிலங்களின் விளைச்சல் முழுவதையும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தானே எடுத்துக்கொண்டான். அவனுடைய கொடுமைக்கு முக்கியமாக ஆளான அந்தணர்கள் பெருமளவில் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். அரசனின் மனத்தையும் நடத்தையையும் மாற்றுவதற்காக அந்தணர்கள் உண்ணா நோன்பு நோற்று மரணத்தை எதிர்கொண்டார்கள். 'பிராயோபவேசம்' எனப்படும் இந்த முறை அரசியலில் அஹிம்சைப் போராட்டத் துக்கு மிகப் பழமையான ஓர் எடுத்துக்காட்டாகும். துன்புறுத்தப் பட்ட அந்தணர்களின் சாபத்தால் பிடிவாதக்கார அரசன் ஒரு விபத்துக்குள்ளான நிகழ்ச்சி அரசனின் இறப்பில் முடிகிறது என் பதைக் கல்ஹணர் ஒரு நாடகம்போல் சித்திரிக்கிறார். இந்த நிகழ்ச்சியை வருணிக்கும் சில செய்யுட்கள் 'கதை கூறும் கல்ஹணர்' என்ற இயலில் (இயல்—7) தரப்பெற்றுள்ளன.

---

[6] ஜயாபீடனின் மறுபெயரான 'விணாதித்தியன்' என்ற பெயர் பொறிக்கப் பட்ட, கலப்பு உலோகத்தாலான கார்க்கோட நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. ஆனால் கல்ஹணர் குறிப்பிட்டுள்ள அளவுக்கு ஜயாபீடன் பெரும் வெற்றிகள் பெற்றதற்குச் சமகாலத்துச் சான்றுகள் இல்லை.

ஜயாபீடனின் மகன் லலிதாபீடன் மதுவிலும் மங்கையரிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு அரசுக் கடமைகளைப் புறக்கணித்தான். அவனுடைய அரசு 'ஒழுங்கீனத்தால் சிதறி'ப் போனதாகக் கல்ஹணர் சொல்கிறார். லலிதாபீடனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த அவனுடைய தம்பி இரண்டாவது சங்கிராமபீடன் ஏழு ஆண்டுகள் எவ்விதச் சிறப்புமின்றி ஆட்சி செய்தான். அவனுக்குப் பிறகு பலர் அரியணையைக் கைப்பற்ற முயன்றார்கள். போர்கள் நிகழ்ந்தன. போர்களில் வென்றவர்கள் தங்கள் தங்கள் கைப்பாவையாகச் செயற்படுபவர்களை அரியணையில் அமர்த்தினார்கள்.

லலிதாதித்தியனின் ஆட்சிக் காலத்தில் கார்க்கோடர்களின் புகழ் உச்சநிலையை எட்டியது. அதுவரையில் குறுநிலமாக இருந்த காஷ்மீரம் அவன் காலத்தில் ஒரு பேரரசாக வளர்ந்தது. பொதுவாக, கார்க்கோடர்களின் ஆட்சிக் காலத்தைக் காஷ்மீரத்தின் பொற்காலங்களில் ஒன்றாகக் கருதலாம். தொடக்க காலத்துக் கார்க்கோடர்களின் வெற்றிகளைப்பற்றிக் கல்ஹணர் மிகையாகக் கூறினாலும் அவர்கள் காஷ்மீரத்தைச் சார்ந்த பகுதிகளையும் வட இந்தியாவின் பெரும் பகுதியையும் கைப்பற்றினார்களென்பதை மறுக்கமுடியாது. ஆனால் இரண்டாவது சங்கிராமபீடனின் புதல்வன் அனங்காபீடன் ஆட்சிக்கு வந்தபோது அரசு நிர்வாகம் முற்றிலும் வலுவிழந்து சீர்குலைந்துவிட்டது. சூழ்ச்சிகளின் பலனாக உத்பலாபீடன் அரசனானான். கார்க்கோடர்களின் புகழ் மங்கி விட்டது. காஷ்மீர அரசர்கள் இந்திய வரலாற்றில் தங்கள் முக்கியத்துவத்தை இழந்துவிட்டார்கள்.

சூரன் என்ற அறிவுக் கூர்மையுள்ள அமைச்சனொருவன் உத்பலாபீடனை அரியணையிலிருந்து இறக்கி, உத்பலகனின் பேரனான அவந்திவர்மனை அரசனாக்கினான். அவந்திவர்மனின் ஆட்சிக் காலத்திலிருந்து (கி.பி. 855/6—883) இராஜதரங்கிணியில் காஷ்மீரத்தின் உண்மையான வரலாறு கிடைக்கிறது. அவந்திவர்மனால் நிறுவப்பட்ட அவந்திபுரத்தில் இருந்த அவந்தீசுவரர் கோவில், அவந்திசுவாமி கோவில் ஆகியவற்றின் இடிபாடுகள் மூலம் நமக்கு அவந்திவர்மனின் நினைவு பசுமையாக நிலைத்திருக்கிறது. இவை 'அளவில் லலிதாதித்தியனின் கூட்டங்களுக்கு இணையாக இல்லாவிட்டாலும் பண்டைய காஷ்மீரத்தின் கட்டடக் கலையின் வலுவான நினைவுச் சின்னங்களாகத் திகழ்கின்றன.' அவந்திவர்மனை அரசனாக்கியவன் என்ற முறையில் சூரனுக்கு அரசில் நல்ல செல்வாக்கு இருந்தது. அவன் அரசனுடன் போட்டி போட்டுக்கொண்டு பல அறக்கட்டளைகளை நிறுவினான். அவன் சிறந்த அறிஞர்களுக்கு அரசவையில் இடமளித்து அவர்களைக் கௌரவித்தான். இவ்வாறு மன்னனால் ஆதரிக்கப்பட்டவர்களில் புகழ்பெற்ற

முக்தகணர், கவிஞர்களான சிவசுவாமி, இரத்திஞகரர், திறமை வாய்ந்த தத்துவ ஞானி பட்டகல்லடர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

தன்வன் என்பவன் தலைமையில் கோவில் சொத்துகளைக் கைப் பற்றிய தமரர்களை சுரன் கடுமையாக அடக்கினன். மற்றபடி பொதுவாக அவந்திவர்மனின் ஆட்சியில் அமைதி நிலவியது. அரசன் பொருளாதார முன்னேற்றத்துக்கு அதிக முக்கியத்துவ மளித்தான். பள்ளத்தாக்கில் அடிக்கடி நேரும் வெள்ளங்களையும் பஞ்சங்களையும் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை அவன் தன் இன்னொரு அமைச்சனும் பொறியியல் வல்லுநனுமான சுய்யனிடம் அளித்தான். சுய்யன் ஆறுகளில் பல பெரும் பொறியியல் சாதனைகள் செய்தான். வெள்ளத் தண்ணீரை வடியச் செய்யவும், பரந்த நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும் பாராமூலாவுக்குக் கீழே விதஸ்தா (ஜீலம்) ஆற்றின் போக்கு மாற்றியமைக்கப்பட்டது. மக்கள் பேரிழப்பை விளைவிக்கும் வெள்ளங்களிலிருந்து காப்பாற்றப்பட்டு மிக்க நன்மை யடைந்தார்கள். இந்த ஏற்பாடுகளோடு காஷ்மீர மக்களின் முக்கிய உணவான அரிசியின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நீர்ப் பாசன வசதிகள் பெருகவும் சுய்யன் பாடுபட்டான். சுய்யனின் நினைவுக்கு அடையாளமாக ஜீலம் நதிக்கரையில் சுய்யபுரம் (இப் போது 'சோபோர்') என்ற நகரம் நிறுவப் பெற்றது.

திரிபுரேசுவர (இப்போது 'திரிபார்') மலையில் அவந்திவர்மன் இறந்த முறையும் அவனுடைய வாழ்க்கைக்குப் பொருத்தமாக இருக்கிறது. உள்ளூறவைணவஞக இருந்தாலும் அவன் தன் அமைச்சனின் பொருட்டுச் சிவனை வழிபட்டு வந்தான். அவன் இறக்கும் தறுவாயில் இந்த இரகசியத்தை சுரனுக்குச் சொன்னன். 'கடைசியில் பகவத் கீதையைக் கேட்டுக்கொண்டு, விஷ்ணுவின் பேரொளியைத் தியானித்தவாறு, ஆத்ம ஞானம் பெற்று வாழ்வி லிருந்து விடுபட்டான்'[7] என்கிருர் கல்ஹணர் (தரங்கம் V, 125).

அவந்திவர்மனின் ஆட்சிக்காலத்தில் வெற்றிகரமான படை யெடுப்புகளின் பகட்டு இல்லைதான். இருந்தாலும் அவன் ஒரு சிறந்த அரசஞகவும் நிர்வாகியாகவும் திகழ்ந்தான். உத்பலமரபின் புகழை உண்மையில் நிலை நாட்டியவன் இவனே.

அவந்திவர்மனின் மகனும் வாரிசுமான சங்கரவர்மனின் காலத்திலிருந்து (கி. பி. 883—902) காஷ்மீரத்தில் ஆட்சி செய்த அரசர்கள் காலத்து நாணயங்கள் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. இந்த நாணயங்களின் சான்று இராஜதரங்கிணி என்ற வரலாற்று

[7] பாராயணத்துக்குகந்த சமய நூலாக பகவத்கீதை பயன்படுத்தப்படுவது வர லாற்றில் இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது.

நூலின் மதிப்பை உயர்த்துகிறது. பிரவரசேனன், லலிதாதித்தியன், ஜயாபீடன் ஆகிய தன் முன்னோர்களின் வெற்றிச் செயல்களைத் தானும் செய்ய விரும்பிய சங்கரவர்மன் ஒரு பெரும் படையை (இப் படையில் ஒன்பது இலட்சம் பேர் இருந்தனரென்று கல்ஹணர் கூறுவது மிகையாகத் தோன்றுகிறது)த் திரட்டிக் கொண்டு புறப் பட்டான். வழியில் அவனுடைய சிற்றரசர்களின் படைகளும் அவனுடன் சேர்ந்து கொண்டன. கார்கோட ஆட்சியின் இறுதிக் காலத்தில் காஷ்மீர அரசு இழந்துவிட்டிருந்த தெற்கு மலைப்பகுதி களை அவன் மீண்டும் கைப்பற்றினான். அவனுடைய மாபெரும் வெற்றி பஞ்சாப் நாட்டில் கூர்ஜர (ஜீலத்துக்கும் சீனுவுக்கும் இடை யிலுள்ள பகுதி) அரசன் அலகாமனைத் தோற்கடித்துத் தன் அரசை விரிவுபடுத்திக் கொண்டதாகும்.

அவன் சிந்துநதியை நோக்கித் தன் படைகளுடன் சென்றபோது பல மன்னர்கள் அவனுக்குத் திறையளித்தார்கள். உரஸா (இப்போது ஹஜாரா மாவட்டம்) வழியே அவன் திரும்பிச் செல்லும்போது உடம்பில் காயம்பட்டு இறந்தான். சங்கரவர் மனின் வெற்றிகள் காஷ்மீரத்தின் எல்லையைச் சார்ந்த பகுதிகளைக் கடந்து போகவில்லையென்றாலும் அவனுடைய கருவூலம் காலியாகி விட்டது. ஆகவே, அவன் மக்களிடமிருந்து பணம் தண்டப் பல ''தந்திர ஏற்பாடுகள்'' செய்தான். 'பேகார்' என்ற கட்டாய உழைப்பு முறையை (குறிப்பாக, போக்குவரத்து வேலைக்காக) முதன் முதலாகத் திட்டமிட்டுத் தொடங்கியவன் இவனே. இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பேகார் காஷ்மீர அரசு நிர்வாகத் தின் ஒரு முக்கியக் கூறாகத்தொடர்ந்து இருந்தது. பேராசைக்கார அதிகார (காயஸ்த) வர்க்கங்களுக்கு ஊக்கமளித்து, ''கல்வியிற் சிறந்தவர்களுக்கு'' ஊதியமளிக்காத ஆட்சியின் வருந்தத்தக்க விளைவுகளை நொந்த மனத்துடன் விரித்தெழுதுகிறார் கல்ஹணர்.

சங்கரவர்மனுக்குப் பிறகு அரசுரிமைப் போராட்டங்கள் நிகழ்ந்தன. அவற்றின் விளைவாக மக்கள் துன்புற்றனர், சங்கரவர் மனின் இராணி சுகந்தா அரசப்பிரதிநிதியாக ஆட்சி செய்ய அவனுடைய மகன் கோபாலவர்மன் (கி. பி. 902—904) அரியணையிலமர்ந்தான். ஓர் அமைச்சனின் பில்லி சூனியத்தால் அவன் கொல்லப்பட, சுகந்தாவே (கி. பி. 904) அரசியானாள். அவளுடைய ஒழுக்கமின்மை காரணமாக அவள் இரண்டே ஆண்டு களில் தந்திரிகளால் பதவியிலிருந்து விலக்கப்பட்டாள். அவளால் நிறுவப்பெற்ற சுகந்தபுரம் என்ற நகரம் அவளை நினைவுறுத்துகிறது.

கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முதல் இருபத்தைந்து ஆண்டு களில் தந்திரிகள் என்ற வீர இனத்தினர் காஷ்மீர மன்னர்களின் மெய்க்காப்பாளர்களாக ஆகிவிட்டார்கள். இவர்களுடைய முன்—

மரபுபற்றி ஒன்றும் தெரியவில்லை. காஷ்மீரப்பள்ளத்தாக்கில் இலையுதிர் காலத்து நெற்பயிர் வெள்ளத்தால் அழிந்துபோனதால் கி. பி. 917–918ல் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. இவ்வாறு மனிதனின் கொடுமையுடன் இயற்கையின் சீற்றமும் சேர்ந்து கொண்டதால் மக்கள் பட்ட துன்பத்துக்கு அளவில்லை. தந்திரிகளும் அவர்களைப் போன்ற படைவீரர்களான ஏகாங்கர்களும் தங்கள் விருப்பப்படி அரசர்களை ஆக்கவும் நீக்கவும் செய்தார்கள். அரசவையைச் சேர்ந்தவர்கள் நேர்மையற்றவர்களாகவும் ஒழுக்கங் கெட்டவர்களாகவும் இருந்தார்கள். சங்கரவர்மன் தந்திரிகளைத் தோற்கடித்துத் தன் அரியணையை மூன்றும் முறையாகக் கைப்பற்றினன். அவன் கீழ்ச்சாதியான தொம்ப இனத்தைச் சேர்ந்த ஹம்ஸி என்ற பெண்ணை மணந்துகொண்டு அவளைத் தன் பட்டத்து இராணியாக்கினன். அவனுடைய அவையோரும் ஒழுக்கங்கெட்ட நடத்தையில் அவனுக்கு நிகராகவே இருந்தார்கள், சங்கரவர்மன் தன் அரசைத்திரும்பப்பெற உதவிய தமரர்களில் சிலர் அவனிடம் வெறுப்புக்கொண்டு அவனை ஹம்ஸியின் அறையில் கொன்று விட்டார்கள் (கி. பி. 937).

அடுத்த அரசன் 'உன்மத்தஅவந்தி' (பைத்தியக்கார அவந்தி) யும் கொடுங்கோலனுகவும் ஒழுக்கங் கெட்டவனுகவும் இருந்தான். அவன் தன் மாற்றுந்தாய் வயிற்றுப் பிள்ளையைப் பட்டினி போட்டுக் கொன்றதுமன்றித் தன் தந்தையான பார்த்தனையும் படுகொலைசெய்தான்.வயதுமுதிர்ந்தபார்த்தன் அழுதுகொண்டிருக்கும் தன் மனைவியிடமிருந்து பிரிக்கப்பட்டு, தெருக்களில் கேசத்தைப் பற்றி இழுத்துச் செல்லப்பட்டான். ''நிராயுதபாணியாகவும் நிர்வாணனுகவும் பட்டினியால் பலங்குன்றியுமிருந்த அவன் அழுது கொண்டிருக்க அவர்கள் அவனைக் கொன்முர்கள்'' (தரங்கம் V, 432–434) என்று கல்ஹணர் எழுதுகிருர். பார்த்தனின் பிணத்தை ஓர் அதிகாரி அடிப்பதைப் பார்த்து அவந்தி சிரித்தானும். கொந்தளிப்பு மிகுந்த இரண்டாண்டு ஆட்சிக்குப்பின் அவந்தி கி. பி. 939ல் என்புருக்கி நோயால் மாண்டான்.

இதன் பிறகு போரிட்டு அரசைக் கைப்பற்றிய ஒருவனுக்கெதிராக சேனைத்தலைவனுன கமலவர்த்தனன் கலகம் செய்தான். இதன் விளைவாக அந்தணர்கள் அவை கூடி கல்வி கேள்வியில் சிறந்த யசஸ்கரன் என்ற ஓர் ஏழையை அரசனுக்கினர்கள். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து துன்புற்ற மக்களுக்கு யசஸ்கரனின் நல்லாட்சி (கி. பி. 939-948) ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது, யசஸ்கரன் ஜீலம் ஆற்றங்கரையில் அமைந்த ஐம்பத்தைந்து சிற்றூர்களை அறிவிற்சிறந்த அந்தணர்களுக்குத் தானம் செய்தான்; தன் பூர்வீக நகரமான பரிகாசபுரத்தில் 'ஆரிய தேச' (வட

இந்தியா)த்திலிருந்து கல்வி கற்கவரும் மாணுக்கர்களுக்காக ஒரு மடம்[8] கட்டினுன். அவனுடைய மரணத்துக்குப்பின் அவனுடைய குழந்தைப் பருவ மகன் அரசனுனுன் (கி. பி. 948). ஆனுல் பர்வகுப்தன் என்ற அமைச்சன் அவனைக் கொன்று தானே முடி சூட்டிக்கொண்டான் (கி. பி. 949). அடுத்த ஆண்டில் அவன் இறந்துபோகவே அவனுடைய மகன் க்ஷேமகுப்தன் அரியணை யேறினுன். க்ஷேமகுப்தன் பேராசை பிடித்தவன்; ஒழுக்கங் கெட்ட வனுங்கூட. இவன் உலோகாராவின் தலைவன் சிம்மராஜனின் பெண்ணும் தாய்வழியில் புகழ்பெற்ற ஷாஹி அரசன் பீமபாலனின் பேத்தியுமான திட்டா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். இந்தத் திருமணம் காஷ்மீரத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதன் விளைவாகக் காஷ்மீரம் உலோகாராக் குடும்பத்தின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. உலோ காராவிலும் காஷ்மீரத்திலும் இந்த ஆதிக்கம் கல்ஹணரின் காலத்துக்குப் பிறகுங்கூடத் தொடர்ந்து இருந்தது. தன் மனைவி யிடம் அளவற்ற ஆசை கொண்டிருந்த க்ஷேமகுப்தனுக்கு மக்கள்[9] 'திட்டா க்ஷேமன்' என்ற கேலித்திருநாமம் சூட்டினுர்கள்.

முதலில் அரசப்பிரதிநிதியாக ஆளத்தொடங்கிய திட்டா க்ஷேமகுப்தனின் மரணத்துக்குப்பின் தானே இராணியாகி ஆட்சி செய்தாள். ஆதிக்கவெறி கொண்ட அவளது கடுமையான ஆட்சி இருபத்து மூன்று ஆண்டுகள் தொடர்ந்தது. அவள் கொடியவளா கவும் நேர்மையற்றவளாகவும் ஒழுக்கங்கெட்டவளாகவும் இருந் தாலும் அவளிடம் அறிவும் அழகும் நிர்வாகத் திறமையும் இணைந் திருந்தன. அவள் சில அமைச்சர்களைத்தன் காதலர்களாகக் கொண்டிருந்தாள். அவர்களில் ஒருவனுன துங்கனை விரட்டுவதற் காக அந்தணர்கள் உண்ணுநோன்பு நோற்ருர்கள். ஆனுல் திட்டா வின் தந்திரத்தாலும் கையூட்டாலும் துங்கனின் வீரத்தாலும் இந்த முயற்சி தோல்வியுற்றது. துங்கன் காஷ்மீரத்தின் ஆதிக் கத்தை எதிர்த்த இராஜபுரி அரசன் பிருதிவிபாலனைத் தோற் கடித்து அவன் காஷ்மீர அரசுக்குக் கப்பங்கட்டும்படி செய்தான். திட்டாவின் ஆட்சிக்காலத்தின் இறுதியில் கலகம் செய்த ''தமரர் களாகிய பெருநோயை அழித்தான்'' துங்கன்.

திட்டா கி. பி. 1003ல் இறப்பதற்கு முன்னுல் தன் சகோ தரனும் உலோகாராவின் அரசனுமான உதயராஜனின் மகன் சங்கிராமராஜனுக்குக் காஷ்மீர அரசை அளித்தாள். இவ்வாறு

---

[8] பத்தாம் நூற்ருண்டில் காஷ்மீரத்துக்கும் வட இந்தியச் சமவெளிக்கு மிடையே பண்பாட்டு உறவுகள் தொடர்ந்து வந்தமைக்கு இந்த மடம் சான்ருக விளங்குகிறது.

[9] க்ஷேமகுப்தன் காலத்து நாணயங்கள் சிலவற்றில் 'தி' என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருப்பது இச் செய்தியை உறுதிப்படுத்துகிறது.

அமைதியான முறையில் காஷ்மீரத்தின் ஆட்சி ஒரு புதிய மரபினரின் கைக்கு மாறியது.

புதிய உலோகாரா அரசன் சங்கிராமராஜனின் ஆட்சிக் காலத்தில் முதலமைச்சன் துங்கன் கஜினிமுகம்மதுவுக்கு எதிராக ஷாஹி அரசன் திரிலோசன பாலனுக்கு (ஆனந்த பாலனின் மகன்) உதவி செய்ய ஒரு படையுடன் சென்றான். அவன் சில சிறிய வெற்றிகள் பெற்றாலும் இறுதியில் முறியடிக்கப்பட்டான். துங்கனின் ஆதரவை நம்பியிருக்க விரும்பாத சங்கிராமராஜன் அவனைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தான். தமரர்களும் தரதர்களும் செய்த கலகத்துக்குச் சிறிது காலத்துக்குப்பின் கி. பி. 1025ல் சங்கிராமராஜனும் இறந்தான்.

சங்கிராமராஜனுக்குப்பின் அவனுடைய மூத்த மகன் ஹரிராஜன் அரசனானன். அதிகார வெறியும் சிற்றின்பத்தில் நாட்டமுங்கொண்ட அவனுடைய தாய் ஸ்ரீலேகா இருபத்திரண்டே நாட்களில் அவனைக் கொல்ல ஏற்பாடு செய்தாள். அவனுடைய தம்பி அனந்தன் அரியணையேறினன் (கி. பி. 1028). அவன் குறுநிலத் தலைவர்கள் செய்த கலகம் ஒன்றையடக்கியதோடு முகம்மதியர்களும் தரதர்களும் நடத்திய ஒரு படையெடுப்பையும் முறியடித்தான். கடவுட்பற்று நிறைந்த அவனுடைய மனைவி சூரியமதி அரசு நிர்வாகத்தில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டாள். அவளுடைய நிர்வாகம் உறுதியாகவும் திறமையோடும் நடந்தது. தன் மனைவிக்கு அடங்கி நடந்த அனந்தன் தன் நேரத்தின் பெரும் பகுதியைத் தியானத்தில் கழித்தான். சூரியமதி அனந்தனை முடிதுறந்து அவர்களுடைய மகன் கலசனை அரசனாக்கும்படி தூண்டினள் (கி. பி. 1063). நாடு செழிப்பாக இருந்ததால் கலசனால் அண்டை நாடுகளைத் தாக்கப் படைகளை அனுப்ப முடிந்தது. இராஜபுரியும் உரஸாவும் கைப்பற்றப்பட்டன. அவன் காஷ்மீர அரசை விரிவாக்கிப் பலப்படுத்தினலும் அவனுடைய இறுதிக் காலத்தில் அவனுக்கும் அவனுடைய மகன் ஹர்ஷனுக்குமிடையே சுமுகமான உறவு இல்லை. அவன் தன் இளைய மகன் உத்கர்ஷனை அரசனாக்கும் நோக்கத்துடன் ஹர்ஷனைச் சிறையிலிட்டான். கலசன் கி. பி. 1089ம் ஆண்டு இறந்தான்.

ஹர்ஷன் சிறையிலிருந்து தப்பித் தன் பிறப்புரிமையாகிய அரசாட்சியைக் கைப்பற்றினன். அவனுடைய ஆட்சிக் காலம் (கி. பி. 1089—1101) கல்ஹணரால் மிக விரிவாக வருணிக்கப்படுகிறது. ஹர்ஷன் சிறந்த வீரமும் பல கலைகளில் தேர்ச்சியும்பெற்ற வாலிபன். அவன் மொழியியல் வல்லுநனகவும் பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற கவிஞனகவுமிருந்தான். அவன் தன் அவையில் பல புதுமைகளைப் புகுத்தியதோடு, ஆயிரம் விளக்குகள் பொருத்தப்

பட்ட ஒரு விசாலமான அரங்கில் கவிஞர்களையும் அறிஞர்களையும் கூட்டி அவர்களைச் சிறப்பித்தான். அருகிலிருந்தும் தொலைவி லிருந்தும் எண்ணற்ற அறிஞர்களும் புலவர்களும் இசை வல்லுநர் களும் அவனுடைய அவைக்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் கருநாடக இராகங்களும்[10] இசைக் கருவிகளும் காஷ்மீரத்துக்கு வந்ததாகக் கல்ஹணர் கூறுகிறார். சாளுக்கிய அரசன் பரமாதியின் அவையில் இருந்த புகழ்பெற்ற கவிஞராகிய பில்ஹணர் கவிஞர் களுக்கும் அறிஞர்களுக்கும் ஹர்ஷன் அளித்த ஆதரவைக் கண்டு, தான் கலசனின் காலத்தில் நிலவிய குழப்ப நிலைக்குப் பயந்து காஷ்மீரத்தை விட்டு வெளியேறிவிட்டதற்காக வருத்தப்பட்டா ராம்.

சிறந்த நிர்வாகியும் தாராள மனத்துடன் கலைகளை ஆதரித்த வனுமான ஹர்ஷன் தன் ஆட்சியை நல்ல முறையில் தொடங் கினான். அவன் தன் அதிகாரிகளிடையே ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் நிலைநாட்டியதோடு அவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் தானும் தன் கடமைகளைச் செய்வதிலும் அந்தணர் களை ஆதரிப்பதிலும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கடைப் பிடித்தான். அவனுடைய பட்டத்தரசி வசந்தலேகா பல அறக் கட்டளைகளை ஏற்படுத்தினாள்.

ஹர்ஷனின் குணச் சிறப்புகளைப் பாராட்டும் கல்ஹணர் அவனுடைய குறைகளையும் பலவீனங்களையும் குறிப்பிடுகிறார். அவர் ஹர்ஷனை விசித்திரமான எதிர்மறைகளின் கலப்பு என்று கூறி இவ்வாறு வருணிக்கிறார்: ''கொடுமை, இரக்கம்; தாராள குணம், பேராசை; அபரிமிதமான பிடிவாதம், அளவுக்கு மீறிய சோம்பல்; தந்திரம், முன் யோசனையின்மை—இவையும் இவை போன்ற ஒன்றுக்கொன்று எதிர்மாறான குணங்களும் மாற்றங்கள் பலவற்றுக்கு உள்ளான ஹர்ஷனின் வாழ்வில் காணப்படுகின்றன''.

இராஜபுரியின் தலைவன் சங்கிராமபாலனை அடக்குவதற்காக ஹர்ஷனால் அனுப்பப்பட்ட திறமைமிக்க படைத் தலைவன் கந்தர்ப்பன் சங்கிராமபாலனைத் தோற்கடித்து அவனிடமிருந்து கப்பம் வசூலித்தான். இது கண்டு அவனிடம் பொறாமை கொண்ட சிலர் ஹர்ஷனின் மனத்தைக் கெடுத்து ஹர்ஷன் அவனை நாடு கடத்தும்படி செய்தார்கள். அரசவையிலும் நாட்டிலும் சதிகளும் சூழ்ச்சிகளும் தாண்டவமாடின. அரச மரபைச் சேர்ந்த பலர் அரசுரிமைக்கு ஆசைப்பட்டு ஹர்ஷனுக்கெதிராகச் சூழ்ச்சி செய்த தால் ஹர்ஷன் அவர்களை அழித்தான்; அவனுடைய இராணுவ நடவடிக்கைகளால் அதிகப்பணம் செலவானதாலும், அவன்

[10] ஹர்ஷனின் நாணயங்களிலுள்ள யானையுருவங்கள் அக்காலத்துக் கருநாடக நாட்டு நாணயங்களின் தாக்கத்தைக் காட்டுகின்றன.

ஊதாரித்தனமாக இன்பங்களையனுபவித்ததாலும் (தொம்ப, சண்டாள சாதிகளைத் தவிர மற்ற சாதிகளைச் சேர்ந்த ஆசைக் கிழத்திகள் முந்நூற்றறுபது பேர் அவனுடைய அந்தப்புரத்தில் இருந்தார்களாம்!) பண நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்டான். மக்களைக் கசக்கிப் பிழியப் புதுப் புது வரிகள் விதிக்கப்பட்டன. கல்ஹணர் ஏளனமாகச் சொல்கிறார்— 'கழிவுப் பொருள்கூடத் தனி வரி விதிப்புக்குள்ளாயிற்று', ஹர்ஷன் கோவில்களில் சேமிக்கப்பட்டிருந்த செல்வத்தையும் அபகரித்துக்கொண்டான். அவனுடைய முந்தைய தாராளம் இப்போது பேராசையாக மாறியது. அரசு முழுவதும் இருந்த கோவில்களின் தங்க, வெள்ளிச் சிலைகளைக்கூட அவன் உருக்கிவிட்டான்! 'தெய்வச் சிலைகளுக்கு அவனிழைத்த கொடுமைகளும் தன் மாற்றாந்தாயுடன் அவன் கொண்ட தகாத உடலுறவும் அவனுடைய அறிவு கெட்டுவிட்டது என்பதை ஐயமறக்காட்டின. ஏற்கெனவே துன்புற்றிருந்த மக்களை கி. பி. 1099ஆம் ஆண்டு கொள்ளை நோயும் பெரு வெள்ளங்களும் தாக்கின. அவர்கள் பட்ட அவதிக்கு எல்லையில்லை. ஹர்ஷன் அவர்களுடைய கவனத்தைத் திருப்புவதற்காக ஆற்றல் வாய்ந்த நிலப் பிரபுக்களாயிருந்த தமரர்களைத் தாக்கினான். அவர்களுக் கிழைக்கப்பட்ட கொடுமைகளைக் கல்ஹணர் மன அதிர்ச்சி தரும் முறையில் வருணிக்கிறார்.

உலோகாரா மரபின் ஒரு கிளையைச் சேர்ந்த உச்சலன், சுஸ்ஸலன் என்ற இரு சகோதரர்களின் உருவில் ஹர்ஷனின் தீச் செயல்களுக்கு ஒரு பொருத்தமான முடிவு ஏற்பட்டது. தமரர் களும் புரட்சியாளர்களும் அறிவுகெட்ட அரசனையொழிப்பதற்காக இச் சகோதரர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ஹர்ஷன் அவர் களுடன் மூர்க்கமாகச் சண்டை போட்டு மாண்டான். அவ னுடைய தலை வெட்டப்பட்டு உச்சலனிடம் எடுத்துச் செல்லப் பட்டது. உச்சலன் அதை எரிக்கச் செய்தான். ஹர்ஷனின் நிர்வாணமான முண்டம் இரக்கச் சிந்தையுள்ள விறகு வெட்டி ஒருவனால் தகனம் செய்யப்பட்டது. ['கல்ஹணர் ஒரு கவிஞர்' என்ற இயலில் (இயல்-4) இந்த நிகழ்ச்சியை வருணிக்கும் சில செய்யுட்கள் தரப் பெற்றுள்ளன.]

ஹர்ஷனின் முடிவுதான் இராஜதரங்கிணியின் ஏழாவது தரங்கத் தில் பாடப்பட்டுள்ள கடைசி நிகழ்ச்சியாகும். [கல்ஹணர் காலம் வரை நிகழ்ந்த மற்ற நிகழ்ச்சிகள் 'கல்ஹணரும் அவர் காலமும்' என்ற தலைப்பில் (இயல்–3) விவரிக்கப்பட்டுள்ளன.]

இராஜதரங்கிணியின் அளவில் ஏறக்குறையப் பாதியாக உள்ள இறுதித்தரங்கமான எட்டாவது தரங்கத்தில் காவியம் தொடங்கப் பட்ட காலத்துக்கும் ஹர்ஷனின் வீழ்ச்சிக்கும் இடைப்பட்ட அரை

நூற்றாண்டுக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வருணிக்கிறார் கல்ஹணர். இந்த விரிவான வருணனையில் சில இடங்களில் குழப்பம் காணப் பெற்றாலும் இதில் காஷ்மீரத்தின் அக் காலத்தைய சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகளின் நம்பகமான விவரம் கிடைக்கிறது.

கலகக்காரர்களான தமரர்கள் நாட்டின் அமைதியைக் குலைத்து வந்தார்கள். அரசுரிமைக்காகப் போட்டியிட்டவர்கள் சிறிதுகாலம் ஆதிக்கம் பெற்றுப் பிறகு வீழ்ந்தார்கள். ஸ்ரீநகர மக்கள் கடுமை யான முற்றுகைக்குள்ளாயினர். சுஸ்ஸலனின் மகனான ஜயசிம்மன் ''கபடமான அரசியல் சூழ்ச்சித் திறனையும் தீவினையஞ்சாத சதிகளையும்'' கையாண்டு ஆட்சி செய்தான். இராஜதரங்கிணியின் இறுதிச் செய்யுட்கள் ஜயசிம்மனின் இராணி இரத்தாதேவியையும் அவர்களுடைய குழந்தைகளையும் புகழ்கின்றன. இந்த வருணனை நம்மை ஜயசிம்மனின் ஆட்சியின் இருபத்திரண்டாவது ஆண்டுக்கு (கி. பி. 1149–50) அழைத்துச் செல்கிறது. கல்ஹணர் ''அரசர் களின் ஆறு''ஐ தம் காவியத்தைத் தென்னிந்திய ஆறான கோதா வரியின் வேகம் நிறைந்த பெருக்கோடு ஒப்பிட்டு நிறைவு செய் கிறார்.

இராஜதரங்கிணி நல்கும் படிப்பினைகள்

பொதுவான இந்திய வரலாற்று நோக்கில் இராஜதரங்கிணி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மீண்டும் கூறுவதில் தவறில்லை. இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் பெரும் பகுதி அதன் வெவ்வேறு பகுதிகளின் வரலாறுகளிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். மற்ற பகுதிகளைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் மிகக் குறைவாகவே நமக்குக் கிடைப்பதால் கல்ஹணரின் நூல் ஒரு பகுதியின் விரிவான வரலாறு என்ற முறையில் மற்ற பகுதிகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரு முன்மாதிரியாக இருக்கிறது.

கல்ஹணரின் கருத்துப்படி வரலாறு என்பது வெறும் படிப்பு அல்ல; அது மக்கள் தங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள உதவும் கருவியாகும். ஏனெனில் அது மனித உறவுகளின் பலவிதமான சிக்கலான கூறுகளை விவரிக்கிறது. வேத காலத்தின் தொடக்கத்தில் மன்னன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான். பிற்காலத்தில் அரச பதவி வழி வழி வரும் சொத்தாக ஆயிற்று. நாட்டின் நிகழ் காலமும் எதிர்காலமும் அரசனின் குணங்களாலும் நடத்தையாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. அரசின் போக்கை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடிய சமூக அமைப்பு எதுவுமில்லை. மக்கள் கொடுங்கோலர்களின் செய்கைகளைப் பொறுமையோடு கவனித்துக்கொள்ள நேர்ந்தது. நிலப் பிரபுக்களின் நலனுக்கு ஊறு நேர்ந்தபோது அவர்கள் செய்த கலகத்தில் மக்களும் பங்குகொண்டார்கள். லலிதாதித்தியன் போன்ற ஆற்றல் மிக்க அரசர்களின் ஆட்சியில் மக்களின் வாழ்க்கை நிலை அடிமைகளின் நிலையை ஒத்திருந்தது. செல்வர்கள் வித விதமான இறைச்சியுணவையும் மலர்களின் மணம் நிறைந்த குளிர்ந்த மதுவையும் அனுபவிக்க, பொது மக்களுக்கு இரண்டு வேளை அரிசிச் சோறும் காய்கறியும் கிடைப்பதே அரிதாயிருந்தது. ''பழங்காலத்தின் முடிவற்ற நிகழ்ச்சிகளை விவரிக்கும்'' இராஜதரங்கிணியில் இத்தகைய செய்திகள் பல உள்ளன.

வரலாற்று நிகழ்ச்சிகள் அரசியல் தத்துவங்களையும் அரசியல் நிர்வாகக் கொள்கைகளையும் விளக்குவதாகக் காட்டப்படுகின்றன. காஷ்மீரத்துக்குப் பொருத்தமான நிர்வாகக் கொள்கைகளைக் கல்ஹணர் சுருக்கமாக விளக்கும் பகுதிகள் சுவையானவை.

இவை லலிதாதித்தியனின் ''காஷ்மீர நிர்வாகச் சட்ட''மாக வருணிக்கப்படுகின்றன. இந்த நீதிமொழிகளின் ''மாக்கிய வெல்லித்தனம்'' இந்திய நீதி சாத்திரங்களின் தொனியை நினைவுறுத்துகிறது. கல்ஹணரின் நீதிமொழிகளிலுள்ள ''உள்ளூர் மணம்'' அவற்றுக்கு வரலாற்று நோக்கில் முக்கியத்துவமளிக்கிறது.

முதல் நீதிமொழி காஷ்மீரத்திற்கே மிகவும் பொருத்தமானதாகும். நெருக்கமான இயற்கையெல்லைகள் காரணமாகக் காஷ்மீரத்திற்கு வெளிப் பகைவர் இலர். ஆகவே காஷ்மீர மன்னர்கள் உள் நாட்டுக் கலகங்களைத் தவிர்க்கச் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். பள்ளத்தாக்கைச் சுற்றியிருந்த மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் ''குற்றம் செய்யாவிட்டாலும் தண்டிக்கப்படவேண்டும்'' என்ற நியதி இருந்து வந்தது. காஷ்மீர மன்னர்கள் பலவீனர்களாக இருக்கும்போதெல்லாம் நாட்டுக்குள் புகுந்து கொள்ளையடிக்கும் பழக்கமுள்ள 'காஸர்' போன்ற மலைச் சாதியினரைக் குறித்துச் சொல்லப்பட்ட நீதிமொழி இது. இதுபோலவே நிலப்பிரபுக்களான தமரர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்காக, ஓராண்டுத் தேவைக்கு மேற்பட்ட உணவுச் சேமிப்பைச் சிற்றூர்வாசிகளிடம் விட்டு வைக்கக்கூடாது என்று அறிவுறுத்துகிறார் கல்ஹணர். அவர் காலத்திலும் அதற்கு முன்பும் தமரர்கள் அடிக்கடி செய்த கலகங்களால் நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. கல்ஹணர் அவர்களை வெறுத்து, 'தஸ்யுக்கள்' (கொள்ளைக்காரர்கள்) என்று அவர்களைப் பழித்துரைக்கின்றார். மக்கள்—உயர்ந்த நிலையிலிருந்தாலும் சரி, தாழ்ந்த நிலையிலிருந்தாலும் சரி—தங்கள் அரச விசுவாசத்தில் உறுதியாக இல்லாமல் ஆட்சி மாற்றத்துக் கேற்பத் தங்கள் விசுவாசத்தை மாற்றிக் கொள்வதை அவர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். ஆட்சி மாற்றங்களைச் சற்றும் பொருட்படுத்தாமல் சோம்பித்திரிந்த நகர மக்களைத் துல்லியமாக வருணிக்கிறார் அவர். தம் நாட்டு மக்களைப் பற்றிக் கல்ஹணர் தரும் மிகப் பொருத்தமான குறிப்புகள் உற்று நோக்கும் திறனும் விமரிசனப் பார்வையும் படைத்த ஒருவனுக்கே சாத்தியமானவை. நூலின் பல்வேறு இடங்களில் நிறைந்துள்ள இக் குறிப்புகளிலிருந்து நாம் எவ்வளவோ கற்றுக்கொள்ளலாம்.

வரலாற்று நிகழ்ச்சிகளைப் புரிந்துகொண்டு அவற்றிலிருந்து வருங்கால மக்களுக்குப் படிப்பினைகளை எடுத்துச் சொல்வதில் கல்ஹணர் வல்லவர். ஜயசிம்மன் கிஷன்கங்கைப் பள்ளத்தாக்கின் மேற்பகுதியின்மேல் படையெடுத்ததைப் பற்றிச் சொல்லும்போது அவர், ''எதிரியின் பலத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளாமல்

போடப்படும் திட்டங்கள் தோல்வியுறல் உறுதி'' என்று கூறு கிறார். அவர் ஜயசிம்மனின் எதிரிகள் செய்த தவறுகளையும் குறிப் பிட்டு இவை எவ்வளவு தூரம் ஜயசிம்மனின் வெற்றிக்கு உதவின என்பதையும் விளக்குகிறார்.

காஷ்மீர வரலாற்றின் இன்னொரு படிப்பினை அரசவை சூழ்ச்சி களும் அந்தப்புரப் பெண்கள் தங்களிடையே கொண்டிருந்த பொறாமையும் அரசன் மேலும் பொது மக்கள் மேலும் எவ்விதத் தாக்கத்தை விளைவித்தன என்பதாகும். கல்ஹணர் அரசவை நிகழ்ச்சிகளை அறிவுக் கூர்மையுடன் கவனித்து ஆராய்ந்து அவை பற்றிய தம் கருத்துக்களை—அவை தனக்குப் பின்வரும் மக்களுக்கு பயன்படும் என்ற நம்பிக்கையில்—வெளியிட்டிருக்கிறார். ஆர். சி. மஜூம்தார் சொல்கிறார்: ''[1]காஷ்மீர அரச, அரசியரின் அதீதமான சிற்றின்ப வேட்கை நாட்டை எல்லையற்ற துன்பத்தி லாழ்த்தியதோடு அந்தக் காலத்தின் பழக்கவழக்கங்களின் பயங் கரத் தன்மையையும் வெளிப்படுத்தி நம் நாட்டில் பண்டைய கால மன்னர்கள் தன்னிச்சையாகச் செயல்படுபவர்களாக இருந்தாலும் மக்களின் நலனையே கருதினார்கள் என்ற நம் அசட்டு நம்பிக்கையை அடியோடு தகர்த்து விடுகிறது.''

இவரே இன்னும் சொல்கிறார்: ''காஷ்மீர அரசர்களின் செய்கைகளிலிருந்து அவர்கள் இந்தியா முழுவதையும் தங்கள் தாய் நாடாகக் கருதினார்களென்று தோன்றவில்லை.'' இந்தக் கருத்து வாதத்துக்குரியது. புவியியல் அமைப்பால் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிரிந்திருந்த காஷ்மீர மக்களும் நிர்வாகமும் இந்திய வாழ்விலிருந்து வேறுபட்டிருப்பதாகத் தோன்றுவது உண்மையே. ஆனால் இந்திய வாழ்வுப் போக்கில் காஷ்மீர மக்களும் கலந்து கொண்டார்கள் என்பதை மெய்ப்பிக்க ஏராளமான சான்றுகள் இராஜதரங்கிணியில் உள்ளன. எடுத்துக்காட்டாக, காஷ்மீரத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் நிலவிய 'ஸதி' அல்லது உடன்கட்டையேறும் பழக்கம் எப்படி வளர்ந்தது என்பதை ஆராய இராஜதரங்கிணி உதவுகிறது. ஸதி ஷிதிய—தார்த்தார மக்களின் ஒரு வழக்கத்திலிருந்து பிறந்ததாகும். ஷிதிய—தார்த்தாரப் பிரபு ஒருவன் இறந்தால் அவனுடைய அடிமைகளும் தற்கொலை செய்து கொண்டுவிடுவார்கள். வீரமும் தியாகமும் போற்றப்பட்ட காலகட்டத்தில் இந்த வழக்கம் காஷ்மீரத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் தொடர்ந்து இருந்தது. இந்த வழக்கம் பின்பற்றப்பட்டது அரசு குலத்தாரால் மட்டுமல்ல. கல்ஹணரின் ஆதாரத்தைக் கொண்டு எஸ். சி. ராய்[2]

[1] 'பண்டைய இந்தியா,' பக்கம் 386.
[2] 'காஷ்மீரத்தின் தொடக்க கால வரலாறும் பண்பாடும்', 1969; பக்கம் 116.

சொல்கிறர்: ''அன்புக்குரிய ஒருவன் இறந்தால் அவனுடைய தாயும் சகோதரிகளும் நெருங்கிய உறவினர்களுங்கூட அவனுடன் தீயில் குதிப்பது நடைமுறையில் இருந்தது. காஷ்மீரத்தில் ஸதி அவ்வளவு தூரம் வேரூன்றியிருந்தது.''

இந்திய அரசுகளின் பொதுவான நிலைமை வருந்தத்தக்கதாக இருந்ததாலும் அவற்றில் மகிழ்ச்சிக்குரிய சில கூறுகளும் இருந்தன. அரசியல் வளர்ச்சியின் தரம் மிகவும் மட்டமானதாக இருந்தாலும் மக்களும் அவர்களுடைய—நல்ல, கெட்ட, இரண்டுமில்லாத—மன்னர்களும் இசை, நடனம் போன்ற மென்கலைகளைப் போற்றி வளர்த்தார்கள். மென் கலைகளும் கட்டடக் கலையும் நல்லமுறையில் வளர்ந்தன. சமயம், தத்துவம், அறிவியல் முதலிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இச் சாதனைகள் சமூகத்தில் தோன்றிய சில அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தன என்பதும், அந்தக் காலமும் இத்தகைய சாதனைகளுக் கேற்ற பக்குவம் பெற்றிருந்தது என்பதும் கல்ஹணரின் கருத்துகளி லிருந்து தெரிகிறது.

வாக்புஷ்டா, திட்டா, சுகமாலா, சூரியமதி போன்ற அரசி யரின் வாழ்க்கையும் அவ்வளவு முக்கியத்துவம் பெருத பிற அரசி யரின் வரலாறும் பொது வாழ்வில் பெண்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கிறது. பண்டைய இந்தியா வில் பெண்களின் கல்விச் சிறப்பைப்பற்றிக் கல்ஹணரும் மற்ற வர லாற்று ஆசிரியர்களும் எழுதியுள்ளார்கள். பெண்கள் ஆண்களிட மிருந்து ஒதுங்கி வாழும் வழக்கமோ முகத்திரையணியும் வழக்கமோ இல்லை. அவர்கள் குடும்ப எல்லையைக் கடந்து வந்து அரசியலிலும் ஈடுபட்டார்கள். ஆர். எஸ். பண்டிட்டின் மொழி பெயர்ப்புக்குத் தாம் எழுதிய முன்னுரையில் ஜவாஹர்லால் நேரு கூறுகிறர்: 'கல்ஹணரின் காவியத்தில் பெண்கள் திரைமறைவில் மட்டுமின்றி அரசவைகளிலும் போர்க்களத்திலும் ஆலோசகர் களாகவும் படைவீரர்களாகவும் முக்கிய பங்கு எடுத்துக்கொள் கிறர்கள்.' இராணிகளுக்குச் சொந்தமாகத் தனிக் கருவூலம் இருந்தது. அவர்கள் அரசு நிர்வாகத்தில் நேரடியாகச் செயற்பட் டார்கள். ஆண்—பெண் வேற்றுமையோ சாதி வேற்றுமையோ அரசு, இராணுவப் பதவிகளை வகிக்கத் தடையாக இல்லை. 'தேவ தாசி'கள்கூட அரசியலில் தீவிரப் பங்குகொண்டார்கள். கல்ஹணர் சொல்கிறர்: 'காஷ்மீரம் உள்நாட்டுக் கலகங்களில் மகிழ்ந்து திளைக்கும் நாடு. இந்த நாட்டில் கோவில்களிலுள்ள தாசிகள்கூட அரசனுக்கெதிராகக் கலகம் செய்ய விரும்பு கிறர்கள்.'

கார்க்கோடர்களுக்குப் பிந்தைய காலத்தில் நிலத்தின் முக்கியத்துவம் அதிகரித்தது என்பது இராஜதரங்கிணியில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் உழவர்களின் வாழ்க்கை நிலையைப்பற்றிய விரிவான செய்திகள் இந்நூலில் இல்லை; நிலப் பிரபுக்களான தமரர்கள் வரி வசூலிக்க எடுத்த நடவடிக்கைகளின் விவரங்களிலிருந்து உழவர்களின் நிலையை ஊகித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. தமரர்களைப் பற்றியும், நாட்டில் குழப்பநிலை ஏற்படும் போதெல்லாம் அரசர்களை ஆக்கி அழித்த போர் வீரர்களான தந்திரிகளைப்பற்றியும் தாம் கொண்டிருந்த வெறுப்பை வெளிக்காட்டிக்கொள்ளக் கல்ஹணர் தயங்கவில்லை.

காஷ்மீரத்தில் தீண்டாமை இல்லை. பௌத்த சமயம் அங்கு செல்வாக்குப் பெற்றபோது தீண்டாமை மறைந்திருக்கலாம். அரசன் சக்கரவர்மன் ஒரு 'தீண்டத்தகாத' தொம்பப் பெண்ணை மணந்துகொண்டான். ஆனால் தொம்பர்கள்—இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்ததுபோல்—காஷ்மீரத்தில் தீண்டத்தகாதவர்களாக இல்லை. தொம்பர்கள் நல்ல இசைவாணர்களாக இருந்தார்களென்றும் கல்ஹணர் குறிப்பிடுகிறார். நூலில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னொரு கீழ்ச்சாதியினர் சண்டாளர்கள்; இவர்கள் அரசர்களின் மெய்க்காப்பாளர்களாகப் பணிபுரிந்தார்கள். சில அந்தணர்கள் வீரம் மிக்க சேனைத் தலைவர்களாக இருந்ததை நூலிலிருந்து அறிகிறோம். பாராட்டுக்குரிய இந்த மரபு பிற்காலத்தில் மராத்தியர்களால் பின்பற்றப்பட்டது. இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து வந்த அந்தணர்களுக்கும் கீழ்ச்சாதிகளுக்கும் இடைப்பட்ட மற்ற சாதியினர் காஷ்மீரத்தில் இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இராஜதரங்கிணி காஷ்மீரத்தை ஆண்ட அரசர்களின் ஆட்சியின் வரலாறு மட்டுமல்ல, கல்ஹணர் இந்நூலில் தம் காலத்துச் சமூக, அரசியல் வாழ்வின் நம்பகமான சித்திரத்தையும் தருகிறார். காஷ்மீரத்தையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் பற்றிய ஏராளமான செய்திகளின் சுரங்கம் இந்நூல். கல்ஹணருக்குப் பிறகு காஷ்மீர வரலாற்றில் நிகழ்ந்த பல்வேறு மாற்றங்களையும் புரிந்து கொள்ள இந்த நூல் உதவுகிறது. இராஜதரங்கிணியின் பிற்பகுதியில் காணப்படுகிற வரலாற்றுப் போக்குகள் கல்ஹணரின் காலத்துக்கும் காஷ்மீரத்தில் மொகலாய ஆதிக்கத்துக்கும் (கி.பி. 1588) இடைப்பட்ட காலத்திலும் தொடர்ந்து வருவதைக் காண்கிறோம்.

நீதிகளைக் கூறும் செய்யுட்களும் வருணனைச் செய்யுட்களும் கல்ஹணரின் கவிதை நடையின் சிறப்புத் தன்மைகளாகும். முழுவதும் நம்பவியலாத மூல நூல்களைப் பின்பற்றவேண்டிய நிலையி

லிருந்த கல்ஹணர் தம்மைப்பற்றி அடக்கத்துடன் இவ்வாறு சொல்லிக் கொள்கிறார்:

> நான் மற்றவர்கள் எழுதியுள்ள வரலாற்றுச் செய்தி களையே திரும்பவும் விவரித்தாலும், சான்றோர் நான் சொல்லும் காரணங்களைச் செவிகொடுத்துக் கேளாது முகத் தைத் திருப்பிக் கொள்ளக்கூடாது.
>
> வெவ்வேறு அரசர்களின் ஆட்சிக் காலங்களில் வாழ்ந்த வர்கள் தங்கள் தங்கள் காலங்களின் வரலாற்றை நூல்களில் எழுதி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தக் காலங் களின் நிகழ்ச்சிகளை இப்போது நூலாக எழுதுபவன் எத்தகைய தனித் திறமையைக் காண்பிக்கமுடியும்? கடந்த கால நிகழ்ச்சிகளின் வரலாறு பொதுவாகப் புறக்கணிக்கப்படு கிறது. இந்த வரலாற்றில் என்னுடைய முயற்சி மற்ற நூல் களில் எழுதப்பட்டுள்ளவற்றைத் தொகுத்து அளிப்பதுதான்.

கல்ஹணருடைய நூலின் படிப்பினை இதுதான்: 'இவ்வுலக வாழ்வின் புகழ் நிலையற்றது, ஒழுக்க விதிகளை மீறுபவர்கள் கட்டாயம் தண்டனையடைவார்கள்.' நூலின் எட்டுத் தரங்கங் களுள் நான்கின் இறுதியில் இத்தகைய கருத்துகள் நுவலப்படு கின்றன. இறுதித் தரங்கத்தில் வெளியிடப்படும் கருத்துக்களில் ஒன்று: 'சூரிய ஒளி தன் இயற்கை காரணமாகப் பல மாற்றங் களுக்குள்ளாகிறது; நிழலுக்கோ தடைகள் எதுவும் இல்லை; அது போல் துன்பம் இன்பத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது; இன்பமோ முடிவற்ற துன்பத்தின் வலிகளாலும் வேதனைகளாலும் பாதிக்கப்படுகிறது.'

கல்ஹணர் விதியையே முழுவதும் நம்புபவரல்லர். அவர் தாமஸ் ஹார்டியைப்போல் 'விதியின் விஷமத்தன'த்தை நம்பு கின்றவரல்லர். அவர் பௌத்தர்களைப்போல் 'கர்மபலனை' நம்பினார். இந்த நம்பிக்கை அவரது நூல் முழுதும் அழுத்தமாகத் தெரிகிறது. கல்ஹணர் காலத்துக் காஷ்மீரத்தில் பௌத்த சமயத்துடன் சைவ சமயமும் பரவியிருந்ததைக் கவனிக்கும்போது அவரது இந்த நம்பிக்கை குறிப்பிடத்தக்கதுதான். 'எல்லாமே காலஞ் செல்லச் செல்லக் கருகியழிந்துவிடுகிறது; அழியும் உருவத்தை அழியாமையின் அச்சில் வார்த்துக் கொடுக்கக் கலைஞன் ஒருவனால்தான் முடியும்' என்பது கல்ஹணரின் கருத் தாகும்.

வாசகனைத் தம்மிடம் பொறுமை காட்டும்படி கேட்டுக்கொள் கிறார் கல்ஹணர். அவர் அரசனையோ அல்லது ஒரு பிரபுவையோ அண்டியவரல்லர். அவரது நூல் விருப்பு வெறுப்பின்றி எழுதப்

பட்டிருப்பதால் நம்பத்தகுந்தது. அதிலிருந்து வாசகன் பல படிப்பினைகளைப் பெறலாம்.

இராஜதரங்கிணியில் உள்ள தவறில்லாத செய்திகள்மூலம் பிற்கால வடமொழி வரலாறுகளில் காணப்படும் அரைகுறைச் செய்திகளையும் புரிந்துகொள்ளலாம். ஆகவே, கவிஞரும் வரலாற்று ஆசிரியருமான கல்ஹணர் காஷ்மீரத்தின் வரலாற்றையும் பழைய பண்பாட்டையும் இருளிலிருந்து மீட்டதன்றி, மற்ற வரலாற்று ஆசிரியர்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தரும் செய்திகளை வரலாற்று மாணவன் ஆராய்ந்து புரிந்துகொள்ள உதவுகிறார். இறுதியாக, காஷ்மீர வரலாற்றைப் பயில்பவன் இராஜதரங்கிணியின் உதவியால் அந்நாட்டின் பழங்காலத்து ஆன்மீக, பொருளாதாரக் கூறுகளை மன நிறைவுடன் புரிந்து கொண்டு பயன்பெறலாம். இந்தியாவின் வேறெந்தப் பகுதியின் விஷயத்திலும் இது சாத்தியமில்லை.

மற்ற வரலாற்று ஆசிரியர்கள்

காஷ்மீரத்தையும் அதைச் சார்ந்த மற்ற பகுதிகளையும்பற்றிய பழங்காலச் செய்திகளின் கருவூலம் இராஜதரங்கிணி. கல்ஹணர் காலத்துக்குப் பிறகு காஷ்மீரத்தில் நேர்ந்த மாறுதல்களைப் புரிந்து கொள்ளவும் இந்த நூல் உதவுகிறது. கல்ஹணருக்குப் பின்வந்த வரலாற்று ஆசிரியர்களும் அவரைப்போலவே புலவர்களாகவும் அறிஞர்களாகவும் இருந்தார்கள். அவர்களும் வரலாறு எழுது வதில் கல்ஹணரின் முறையையே பின்பற்றினுர்கள்.

கி. பி. 1383ல் பிறந்ததாகச் சொல்லப்படும் ஜோனராஜர் (இயற் பெயர் 'ஜியோத்ஸ்ஞகரர்') மிகவும் பெருமை வாய்ந்த வரலாற்று ஆசிரியர். இவருடைய கல்வித் திறமை பரந்த மனப் பான்மையுடைய சுல்தான் ஜைனுல் அபிதின் (கி. பி. 1420—1470) என்ற முஸ்லிம் மன்னனின் கவனத்தைக் கவர்ந்தது. சுல்தான் இராஜதரங்கிணியைத் தொடர்ந்து தன் காலம்வரை வரலாற்றை எழுதும்படி ஜோனராஜரைக் கேட்டுக்கொள்ள, அவ்வாறே அவர் கி. பி. 1409 வரையிலுள்ள வரலாற்றை வடமொழிச் செய்யுட் களில் எழுதினுர். அவரது நூலுக்குத் 'துவிதீய (இரண்டாவது) இராஜதரங்கிணி' என்று பெயர் வழங்கியது.

ஜோனராஜரின் நூலின் பெரும் பகுதி ஜயசிம்மன் முதல் இராணி கோதை வரையில் காஷ்மீரத்தின் இந்து மன்னர்களின் ஆட்சிக் காலத்தை விவரிக்கிறது. ஜோனராஜர் கல்வியில் வல்ல வர். அவர் அறிவு செறிந்த மூன்று உரைகளை இயற்றியிருக்கிறுர். அவருடைய கல்வியறிவு வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் அவரது திறமையைப் பாதித்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீகாந்த் கௌல் சொல்கிறுர்: ''இந்த நூலின் முக்கியமான குறை இதன் புரியாத நடையாகும். நூலாசிரியர் பயன்படுத்தும் சொற்கள் வரலாற்று உண்மைகளைச் சரியாக உணரத் தேவையான செய்தியைத் தெளிவாகத் தெரிவிப்பதில்லை.'' ஜோனராஜரின் நடைபற்றிய கௌலின் விமரிசனம் இந்தக் கண்டனக் குறிப்புடன் நிறைவு பெறுகிறது. ''ஜோனராஜர் கையாளும் இரத்தினச் சுருக்கமான சொற்ருெடர்கள் புதிர்களைப்போல் குழப்புகின்றன.'' ஓர் அரசனின் ஆணையால் எழுதப்பட்டதால் இது சில இடங்களில் அரசவை வரலாறு போலவே காணப்படுகிறது. வரலாற்று ஆதாரங்களிலிருந்து போதுமான செய்திகள் கிடைக்காத காரணத்

தால் போலும், ஆசிரியரின் காலத்துக்கு முற்பட்ட அரசர்களின் ஆட்சி சுருக்கமாகவே தரப்பெறுகின்றது; சில முக்கிய நிகழ்ச்சிகள் ஒரே செய்யுளில் சொல்லப்பட்டு விடுகின்றன; சில முற்றிலும் புறக் கணிக்கப்படுகின்றன. இவ்வளவு குறைகளிருப்பினும் ஜோன ராஜரின் நூல் முக்கியத்துவம் வாய்ந்ததுதான். கி. பி. 1150 முதல் கி. பி. 1459 (ஜோனராஜர் இறந்த ஆண்டு) வரையுள்ள காலத்தைப்பற்றி தமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய வரலாறு இதுதான். நூலில் கூறப்பட்டுள்ள காலவரையறை சரியாகவே உள்ளது. நில அமைப்பு வருணனையும் பொதுவாக நம்பகமானது தான். பொதுவாகப் பார்க்குமிடத்து இந்த நூலும் கல்ஹணரின் நூலைப்போல் விருப்பு வெறுப்பின்றி எழுதப்பட்ட கவிதை வரலாறாகும்.[1]

ஜோனராஜரின் மாணுக்கரும் சுல்தான் ஜைனுல் அபிதினின் ஆதரவு பெற்றவருமான ஸ்ரீவரர் கி. பி. 1459 முதல் கி. பி. 1486 வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நான்கு இயல்களில் விவரித்து 'ஜைன–இராஜதரங்கிணி' என்ற நூலை எழுதினார். ஸ்ரீவரர் புலவர் மட்டு மல்லர், நல்ல பாடகருங்கூட. அவர் தம் ஆசிரியரின் நடையைப் பின்பற்றாமல் கல்ஹணரின் நடையைப் பின்பற்றினார். ஆகவே அவருடைய காவியம் இராஜதரங்கிணியை ஒத்துள்ளது. அவர் காலத்து வாழ்க்கை பற்றிய பல முக்கிய செய்திகள் அவருடைய நூலில் உள்ளன. முக்கியமான இடங்களின் பெயர்களில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாறுதல்களை இந்த நூலிலிருந்து அறிந்துகொள்ள லாம். எடுத்துக்காட்டாக, லலிதாதித்தியனின் புகழ்பெற்ற மார்த்தாண்டர் கோவிலுக்கு அருகிலிருந்த மார்த்தாண்ட தீர்த் தம் அப்போதே 'பவன்' என்று வழங்கப் பெறத் தொடங்கி விட்டது. இந்தப் பெயரே இப்போதும் வழங்குகிறது. தம் பணி யில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த ஸ்ரீவரர் சுல்தான் ஜைனுல் அபிதினுக்குப் பின்வந்த சுல்தான் ஹஸன்ஷா (கி. பி. 1472–84) வின் ஆதரவையும் பெற்றார். சுல்தானால் நடத்தப்பட்டு வந்த

[1] ஜே. சி. தத் ஜோனராஜரின் நூலைக் கல்கத்தாவில் 1835ம் ஆண்டில் வெளி யிட்டார். டாக்டர் பீட்டர்சன் 1896ல் பம்பாயில் வெளியிட்டார். தத்தின் பதிப் பில் 980 செய்யுட்கள் உள்ளன. பீட்டர்சனின் பதிப்பிலோ 1334 செய்யுட்கள் இருக் கின்றன. இதைக் 'காஷீரம்' என்ற தம் நூலில் குறிப்பிடும் டாக்டர் ஜி. எம். டி. சூஃபி சொல்கிறார்: 'பிராக்ஞபட்டரின் நூலான 'இராஜாவளி பதாகா' இன்னும் ஆராயப்படவில்லை. சுகரின் 'இராஜதரங்கிணி'யைப் பிராக்ஞபட்டரும் சுகரும் சேர்ந்து எழுதியதாக தத்தும், டாக்டர் பீட்டர்சனும், ஸ்டெய்னும் எண்ணி விட்டார்கள். இந்தக் குழப்பத்துக்குக் காரணம் சுல்தான் ஃபதேஷா மும்முறை காஷ்மீர அரியணையில் ஏறியதுதான். ஸ்ரீவரர் தம் வரலாற்றை முடித்தபோது ஃபதே ஷா முதல்தடவை அரசனாக இருந்தான். சுகர் தம் வரலாற்றைத் தொடங்கிய போது ஃபதேஷா மறுபடி சுல்தானாக இருந்தான். ஒரே அரசன் பலதடவைகள் ஆட்சிக்கு வந்ததால் அந்த ஆட்சி தொடர்ச்சியாக இருந்ததாக இந்த அறிஞர்கள் எண்ணிவிட்டனர்.'

இசைக் கல்வித் துறைக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அடுத்த சுல்தானான முகம்மதுஷா (கி. பி. 1484–86)வும் ஸ்ரீவரரை ஆதரித்தான்.

ஸ்ரீவரரின் வரலாற்றில் விவரிக்கப்பட்ட காலம் முப்பது ஆண்டுகளுக்குக் குறைவாக இருந்தாலும் அதில் செய்திகள் நிறையவே உள்ளன. இந்த நூல் தரத்தில் ஜோனராஜரின் நூலை விடச் சிறந்ததென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் ஸ்டெய்ன்[2] இந்த நூல் கல்ஹணரை அப்படியே நகல் செய்து எழுதப்பட்டதாகக் கூறுகிறார். அவர் மேலும் சொல்கிறார்: ''இந்த நூலின் பெரும் பகுதி இராஜதரங்கிணியின் ஒரு பகுதியாகத் தோன்றுகிறதே தவிர வேறொரு எழுத்தாளனின் படைப்பாகத் தோன்றவில்லை. ஜோனராஜரின் நூலைப்போல் இதுவும் ஓர் அரசவை வரலாறுதான்...'' ஆயினும் ஸ்டெய்ன் ஸ்ரீவரரின் நூலுக்கு அதற்குரிய மதிப்பைத் தருகிறார்: ''இருந்தாலும் இந்த நூல் முப்பது ஆண்டுகளின் வரலாற்றை விவரிக்கும் ஒரே சமகாலப்படைப்பு என்ற முறையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.''

பண்டித பிராக்ஞபட்டர் ஸ்ரீவரரின் நூலின் வரலாற்றைத் தொடர்ந்து '**இராஜாவளி பதாகா**' என்ற நூலை இயற்றினார். சுல்தான் ஃபதே ஷாவும் சுல்தான் முகம்மது ஷாவும் இரண்டு முறைகள் ஒருவரையொருவர் அரியணையிலிருந்து அகற்றித் தாங்களே ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட காலமான கி. பி. 1486 முதல் 1513–14 வரையுள்ள இருபத்தேழு ஆண்டுகளின் வரலாற்றை இந்த நூல் கூறுகிறது. இவர்களுடைய ஆட்சிக் காலத்தின் வரலாறு சிறிது குழப்பத்தை உண்டாக்குகிறது. ஸ்ரீவரரின் மாணாக்கர் சுகர்[3] **இராஜாவளி பதாகா**வில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அக்பர் சக்கரவர்த்தி கி. பி. 1586ம் ஆண்டில் காஷ்மீரத்தைக் கைப்பற்றியது வரையிலுள்ள வரலாற்றை எழுதிக் கல்ஹணரைப் பின்பற்றித் தம் நூலுக்கும் '**இராஜதரங்கிணி**' என்றே பெயரிட்டார். காஷ்மீரத்தின் நகரங்கள், மற்ற இடங்கள் இவற்றின் பெயர்கள் இவற்றின் தற்காலப் பெயர்களையொத்த மாறுதல் அடைவதை சுகர், பிராக்ஞபட்டர் ஆகியோரின் நூல்களிலேயே காணலாம். ''பிராக்ஞபட்டரின் மூலப் படைப்பு அழிந்து போய்விட்ட'' தென்றும், ''சுகர் ஐம்பது செய்யுட்களில் எழுதியுள்ள அந்நூலின் சுருக்கமே இப்போது நமக்குக் கிடைக்கிற'' தென்றும் ஆர். கே. பர்மு[4] கூறுகிறார். சுகரின் வரலாறு வரிசை

[2] ஸ்டெய்ன், எம். ஏ. 'காஷ்மீர அரசர்களின் வரலாறு' (இராஜதரங்கிணியின் ஆங்கில மொழி பெயர்ப்பு).

[3] காஷ்மீர அரசர்கள்—III ஜோனராஜர், ஸ்ரீவரர், சுகர் ஆகியோரின் இராஜதரங்கிணியின் ஆங்கில மொழி பெயர்ப்பு, ஜே. சி. தத், கல்கத்தா, 1898.

[4] 'காஷ்மீரில் முஸ்லிம் ஆட்சியின் வரலாறு', 1320–1819; புதுடில்லி, 1969.

யாக இல்லாமல் தாறுமாருக இருக்கிறது. மேலும் அது விவரிக்கும் காலவரையறையும் நில அமைப்பு விவரங்களும் தவருக இருக்கின்றன.

இராஜதரங்கிணியின் வரலாற்று மரபினைத் தொடர்ந்து வரக்கூடிய இன்னெரு நூலும் உண்டு. 'லோகப் பிரகாசம்' என்ற பெயருள்ள அந்த நூல் கி. பி. பதினெஞன்ரும் நூற்ருண்டில் க்ஷேமேந்திரரால் தொடங்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இதன் இரண்டாம் இயலில் ஷாஜஹானைப்பற்றிய குறிப்பு இருப்பதால் இது பதினேழாம் நூற்ருண்டில் எழுதப்பட்டிருக்கலாம். வடமொழியும் பாரசீக மொழியும் ஓரளவு காஷ்மீரியும் கலந்துள்ள இந்த நூலின் மொழி நடை இந்த ஊகத்தை உறுதிப்படுத்துகிறது. இதில் அரசியல், அரச, மரபு முதலியவைபற்றிய செய்திகள் குறைவாகவும், நிர்வாகம், சமூகம், பொருளாதாரம் பற்றிய செய்திகள் அதிகமாகவும் இருப்பது இதன் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

கல்ஹணரின் இராஜதரங்கிணிக்குப் பிற்பட்ட நூல்கள் இலக்கியப் படைப்புகள் என்ற முறையில் அதைவிடத் தரங்குறைந்தவை தாம். ஆயினும் அவற்றில் வரலாறு எழுதப்பட்டுள்ள முறை கல்ஹணர் கையாண்ட முறையைவிடச் சிறந்தது. காஷ்மீரத்தின் ஆட்சி இந்துக்களிடமிருந்து முஸ்லிம்களுக்குக் கைமாறிய காலத்தின் அநேகமாகச் சரியான வரலாறு இந்நூல்களில் கிடைக்கிறது. இவை[5] 'அந்தக் காலத்துக் காஷ்மீர மக்களின் வாழ்க்கையைச் சித்திரித்து, காஷ்மீரத்தை அக்பர் கைப்பற்றிய காலம் வரையில், சுமார் இரண்டரை நூற்ருண்டுகள் (சில இடைவெளிகளைத் தவிர) தொடர்ந்து மக்கள் அனுபவித்த இன்னல்களையும் கொடுமைகளையும் வருணிக்கின்றன.' இந்நூலாசிரியர்கள் வருணிக்கும் நிகழ்ச்சிகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளால் பாதிக்கப்பட்டாலும் அவர்களுடைய வருணனைகள் மொத்தத்தில் சரியானவையே. ஜே. சி. தத் சொல்கிருர்: 'வேறு வரலாறுகள் இல்லாத காரணத்தால் இந்த நூல்கள் வரலாறு என்ற நோக்கில் முக்கியமானவை. ஆனுல் இவற்றில் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் பற்றி நூலாசிரியர்கள் தெரிவிக்கும் கருத்துகளை அப்படியே ஏற்க இயலாது. ஏனெனில் அவர்கள் அரசர்களின் அவைகளில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இந்த உலகத்தில் பெற்றிருந்த எல்லாப் பொருள்களுக்கும் அவர்கள் எழுதிய வரலாறுகளின் நாயகர்களான அரசர்களையே நம்பியிருந்தவர்கள்.'[6]

---

[5] பாம்ஸாய், பி. என். கௌல்: 'காஷ்மீரத்தின் வரலாறு', 1962.

[6] 'காஷ்மீர அரசர்கள்—III', நூல் முகம்.

முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டுச் சுமார் இருநூறு ஆண்டுகள் வரை வடமொழியிலேயே அரசு அலுவல் நடத்தப்பட்டு வந்தது. முஸ்லிம் மன்னர்கள் பாரசீக மொழிக்கும் இலக்கியத்துக்கும் மேலும் மேலும் ஆதரவளிக்கவே வடமொழியில் வரலாறு எழுதும் வழக்கம் சிறிது சிறிதாக மறைந்தது. காஷ்மீர அறிஞர்கள் இந்தச் சூழ்நிலைக்கேற்பத் தங்களையும் எளிதில் மாற்றிக்கொண்டு பாரசீக மொழியிலேயே வரலாறு எழுதத் தலைப்பட்டார்கள்.

சுல்தான் ஜைனுல் அபிதின் இராஜதரங்கிணியை வடமொழிச் செய்யுட்களில் தொடர்ந்து எழுத ஏற்பாடு செய்ததோடு, முல்லா அகமது என்பவரைக் கொண்டு அதைப் பாரசீக மொழியில் பெயர்க்கவும் ஏற்பாடு செய்தார். முல்லா அகமது மொழி பெயர்ப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது பொருத்தந்தான். அவர் ஒரு சிறந்த அறிஞர், புகழ்பெற்ற கவிஞர், வரலாற்று ஆசிரியருங்கூட. 'பஹ்ர்—உல்—அஸ்மார்' (கதைக் கடல்) என்ற பெயருள்ள அம்மொழிபெயர்ப்பு அவரால் நிறைவு பெறவில்லை என்று தோன்றுகிறது. அக்பரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த அப்துல் காதர் பாதாயுனி அதை முற்றுவித்ததோடு, சக்கரவர்த்தியின் விருப்பப்படி அதை அன்றுட வழக்கிலுள்ள பாரசீக மொழி நடையில் மாற்றியமைத்தார். இம்மொழிபெயர்ப்பின் இரண்டு வடிவங்களுமே இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் முல்லா அகமதின் மொழிபெயர்ப்புதான் மாலிக் ஹைதர் சௌதுராவின் நூலுக்கு அடிப்படையாக இருந்திருக்கவேண்டும்.

ஜஹாங்கீரின் காலத்தில் வாழ்ந்த மாலிக் ஹைதர் காஷ்மீரத்தின் வரலாற்றை ஆரம்ப காலத்திலிருந்து தம் காலம் வரையில் பாரசீக மொழியில் கல்ஹணரின் நடையில் எழுதினர். இவ்வரலாறு ஜஹாங்கீரின் ஆட்சியின் பன்னிரண்டாவது ஆண்டோடு (கி.பி. 1617) நிறைவு பெறுகிறது. மாலிக் ஹைதர் கல்ஹணரைப் போலன்றித் தம் காலத்து அரசியல் நிகழ்ச்சிகளுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார். இதன் விளைவாக 'தவாரீக்—இ—காஷ்மீர்' என்ற பெயருள்ள அவருடைய நூல் அவருடைய காலத்து நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் கண்ணுடியாகத் திகழ்கிறது. மாலிக் ஹைதரும் அவருடைய சகோதரர் மாலிக் அலியும் ஷேர் ஆப்கனின் விதவை மிஹ்ர்—உன்—நிஸ்ஸா (பிற்காலத்தில் 'நூர்ஜஹான்')வுக்கு அடைக்கலம் அளித்தவர்கள். இந்த நன்றிக்கு அடையாளமாக அவள் மாலிக் ஹைதருக்கு ஜஹாங்கீரின் ஆதரவு கிடைக்கும்படி செய்தாள். ஜஹாங்கீர் அவருக்குப் பட்டங்கள் அளித்ததோடு காஷ்மீர நிர்வாகத்தில் ஒரு பதவியும் கொடுத்தான். மாலிக் ஹைதர் இந்த ஆதரவுக்கு முற்றிலும் தகுதியானவர். கட்டடக் கலை வல்லுநரான அவர்

ஜாமா மசூதியையும் இன்னும் பல மசூதிகளையும் புதுப்பித்துக் கட்டினார். அவருடைய குலப் பெயரான 'சௌதுரா' ஸ்ரீநகரத்திலிருந்து பதினேழு கிலோமீட்டர் தொலைவிலுள்ள அவருடைய பூர்வீகக் கிராமத்தின் பெயரிலிருந்து வந்ததாகும். அது மாலிக் ஹைதரின் பிறந்த ஊர் என்று ஜஹாங்கீர் தன் நினைவுகளடங்கிய 'துஜுக்—இ—ஜஹாங்கீரி' என்ற நூலில் குறிப்பிடுகிறான். மாலிக் ஹைதர், அபுல் ஃபஸல் இன்னும் மற்றவர்கள் இராஜதரங்கிணியை அடிப்படையாகக் கொண்டு எழுதிய காஷ்மீர வரலாறுகளில் கட்டுக் கதைகளும் அற்புத நிகழ்ச்சிகளும் சுவையாக உள்ளன. தொடக்க காலத்து இந்து அரசர்களைப்பற்றிக் கல்ஹணர் எழுதிய கதைகளுக்குக் கண், மூக்கு வைத்து அவற்றை இன்னும் 'அலங்கரிக்க'வும் முற்படுகிறார். மாலிக் ஹைதர், அதே சமயத்தில் அவர் கல்ஹணர் கூறியுள்ள, உண்மைக் கூறு நிறைந்த, உலோகாரா அரச மரபின் வரலாற்றை ஒரு சில பக்கங்களில் தாறுமாறாக எழுதி முடித்துவிட்டார்.

'தவாரீக்—இ—காஷ்மீர்' என்ற இதே பெயரில் ஹாஸன் அலி காஷ்மீரி என்பவரும் ஒரு வரலாறு எழுதினார். மற்ற நூல்களுடன் ஒப்பிடும்போது அளவில் சிறிய இந்நூல் பழங்காலத்திலிருந்து கி.பி. 1616 வரையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. சுல்தான் ஹாஸன் ஷாவின் ஆட்சிக் காலத்தின் முடிவுவரை சுல்தான்களின் ஆட்சியில் காஷ்மீரத்தின் வரலாற்றை இந்த நூல் விவரமாகக் கூறுகிறது. கவிஞரே வரலாற்று ஆசிரியராக இருக்கும் மரபு கல்ஹணர் காலத்திலிருந்தே தொடர்ந்து வந்திருக்கிறது. கவிஞரும் பாரசீக மொழியில் அறிஞருமான நாராயண் கௌல் அஜீஸ் என்பவர் ('அஜீஸ்' என்பது பாரசீக மொழியில் அவரது புனை பெயர்) கி.பி. 1710-ல் மாலிக் ஹைதரைப் பின்பற்றித் தானும் ஒரு 'தவாரீக்—இ—காஷ்மீர்' எழுதினார். இதில் சுல்தான்களைப்பற்றியும் தொடக்க கால மொகலாயர்களைப்பற்றியும் ஆசிரியரின் விருப்பு வெறுப்புகளால் பாதிக்கப்படாத வரலாறு கிடைக்கிறது. இந்நூலின் பெரும்பகுதி மாலிக் ஹைதரின் வரலாற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கவிஞரும், பல நூல்கள் எழுதியவரும், பிற்கால மொகலாய மன்னர்களின் காலத்தில் ஸ்ரீநகரத்தில் வாழ்ந்தவருமான முகம்மது ஆஜம் கௌல் என்பவரும் காஷ்மீர வரலாற்றை எழுதினார். 'வக்கத்—இ—காஷ்மீர்' (காஷ்மீர நிகழ்ச்சிகள்) என்ற பெயருள்ள இந்நூல் கி.பி. 1746ல் நிறைவு செய்யப்பட்டது. ஆசிரியர் பதினோராண்டுகள் அக்கறையோடு உழைத்து இந்நூலை எழுதினார். இது முந்தைய வரலாறுகளின் சுருக்கந்தான். இருந்தாலும் இதில் அந்தந்தக் காலங்களின் சமூக, சமய, இலக்கியப் போக்குகள்

மிகத் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. முகம்மது ஆஜம் இலக்கியத் திறமை பெற்றிருந்ததோடு புனிதராகவும் போற்றப் பட்டார். அவர் கி.பி. 1765ல் இறந்தபின் அவருடைய புதல்வர் க்வாஜா முகம்மது ஆஸாம் தம் தந்தையின் நூலைத் தொடர்ந்து 'ஜௌஹர்–இ–ஆலம்' (உலகத்தின் இரத்தினங்கள்) என்ற நூலை இயற்றினர்.

பாரசீக மொழியில் தேர்ச்சி பெற்றிருந்த காஷ்மீரிக் கவிஞரும் வரலாற்று ஆசிரியருமான பண்டித பீர்பல் கச்ரு இரண்டாவது டோக்ரா மன்னரான இரஞ்சித் சிங்கின் ஆட்சிக் காலத்தில், கி.பி. 1835ம் ஆண்டில் 'முக்த்ஸார்தாரீக்–இ–காஷ்மீர்' (காஷ்மீரத்தின் சுருக்கமான வரலாறு) என்ற நூலை இயற்றினர். மாற்றங்கள் பல நிறைந்த காஷ்மீர வரலாற்றில் மொகலாயர்களும் ஆப்கானியர்களும் ஆண்ட காலத்தைப்பற்றி விவரமாக எழுதியுள்ள இவர் கல்ஹணரைப் போலவே மக்களின் பொருளாதார நிலைபற்றிய விவரங்களுக்கு முக்கியத்துவமளித்தார். இவர் இந்துக்களின் மரபுகளையும் சமூகப் பழக்கவழக்கங்களையும் பற்றியே அதிகம் எழுதியிருந்தாலும் அந்தக் காலத்தைப்பற்றிய இவரது மதிப்பீடு வரலாறு பயில்பவனுக்கு முக்கியமானதாகும். இந்த நூலில் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளும் உண்மையில் நடக்காத சில நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தாலும் இந்தக் குறை மன்னிக்கத்தக்கதுதான்.

இந்தியாவின் மற்ற பகுதிகளில் இயற்றப்பட்ட வடமொழி இலக்கியத்தில் காஷ்மீரத்தைப்பற்றிய செய்தி மிகவும் குறைவாகவே உள்ளது. இக்குறையே கல்ஹணரின் நூலுக்கு மறைமுகமாக அதிக முக்கியத்துவமளிக்கிறது. காஷ்மீரம் இவ்வாறு புறக்கணிக்கப்பட்டதில் வியப்பில்லை. பண்டைய காலத்தில் கல்வியிலும் இலக்கியப் பணியிலும் சிறந்திருந்த பகுதிகள்கூட இலக்கியத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன அல்லது அரிதாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எனினும் பாணினி தம் புகழ்பெற்ற வடமொழி இலக்கணத்தில் காஷ்மீரத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மகாபாரதத்திலும் புராணங்களிலும் காஷ்மீரத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. வராஹமிஹிரரின் (கி.பி. 500) 'பிருஹத் சம்ஹிதை'யில் இந்தியாவின் வட பகுதிகளில் ஒன்றுகக் காஷ்மீரமும் குறிப்பிடப்படுகிறது.

இதற்கு மாருக, இந்தியாவுக்கு வெளியே காஷ்மீரம் பற்றிய குறிப்புகள் அதிகமாகக் கிடைக்கின்றன. தாலமி தம் புவியியல் நூலில் (கி. பி. இரண்டாம் நூற்றுண்டு) 'காஸ்பைரியா' (காஷ்மீரம்) பகுதி ''பிடாஸ்பஸ் ('விதஸ்தா'—இப்போது 'ஜீலம்') ஆற்றின் மூலத்துக்குக் கீழ்ப் பகுதியில்'' இருப்பதாகச் சொல்கிருர்.

ஹெகாதையோஸ் (கி. மு. 546—486) தம் நூலில் 'காஸ்பாபிரோஸ்' (காஷ்மீரம்) காந்தாரர்களின் நகரம் என்று சொல்கிறார். ஏனெனில் பண்டைக்காலத்தில் காஷ்மீரத்துக்கும் காந்தாரத்து (காபூல் பள்ளத்தாக்கு)க்குமிடையே நெருங்கிய பண்பாட்டு, அரசியல் உறவுகள் இருந்தன. 'வரலாற்றின் தந்தை' என வழங்கப்பெறும் ஹெரோடோட்டஸும் காஸ்பாபிரோஸைக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலைநாடுகளில் காஷ்மீரத்துக்கு இருந்த புகழ் இந்தக் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. காஷ்மீரம் பற்றிய சீன நாட்டுக் குறிப்புகளோ இன்றும் விவரமானவை. இத்தகைய குறிப்புகள் கி. பி. 541ம் ஆண்டிலிருந்து கிடைக்கின்றன. கி.பி. 631 முதல் இரண்டு ஆண்டுகள் காஷ்மீரத்தில் தங்கியிருந்த புகழ் பெற்ற சீனப் பிரயாணி ஹியூன் சாங்கின் வருணனை மிகவும் விரிவாக உள்ளது. அவர் காஷ்மீர அரசின் அளவு, அரசனின் தாராள மனப்பான்மை, மக்கள், தட்பவெப்பநிலை, நில அமைப்பு ஆகியவைபற்றி மிகவும் சரியான விபரங்கள் அளித்துள்ளார். அந்தக் காலத்துப் பழக்க வழக்கங்களைப் பற்றி அவர் அளித்துள்ள விவரங்கள் வரலாறு பயில்பவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கவை. அவர் தாம் கி. பி. 633ல் காஷ்மீரப் பள்ளத்தாக்கைவிட்டுத் தோஸ்மைதான் மலைப்பாதை வழியாக 'புன்—னு-ட்சோ' (கல்ஹணர் குறிப்பிடும் 'பர்ணோட்சோ'- இப்போது 'பூஞ்ச்')வுக்கு வந்து சேர்ந்ததாக எழுதியுள்ளார்.

சீனாவின் 'தாங்' அரசமரபின் வரலாறுகளும் முக்கியமானவை. சீனப்பேரரசரின் அவைக்குக் காஷ்மீர அரசன் 'ச்செந்-தோ-லோ-பி—லி' (சுமார் கி. பி. 713ல்) அனுப்பிய தூதுக்குழுவும், அதன் பின் அவனுடைய சகோதரனும் வாரிசுமான 'மு-தோ—பி' அனுப்பிய தூதுக்குழுவும் இவ்வரலாறுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவை குறிப்பிடும் அரசர்கள் இராஜதரங்கிணியில் குறிப்பிடப்பெற்றுள்ள சந்திராபீடனும் மூக்தாபீடனும் (லலிதாதித்தியன்) என்று வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். மொ-ஹோ-தொ—மொ-லௌங்' ('மகாபத்மா'—வூலார் ஏரியின் பழைய பெயர்) ஏரி, 'போ—லோ-ஔ—லோ—போ-லோ' ('பிரவரபுரம்'—ஸ்ரீநகரத்தின் அக்காலப் பெயர்) நகரம் இவைபற்றிய சீன வரலாற்றுக் குறிப்புகளை இராஜதரங்கிணியும் மற்ற காஷ்மீர வரலாறுகளும் உறுதிப்படுத்துகின்றன.

ஹியூன் சாங்கைப் போல் உரஸா (ஹஜாரா) வழியே காஷ்மீரத்துக்கு வந்த இன்னொரு சீனப்பயணி ஔகாங். அவர் கி. பி. 759 லிருந்து நினைவில் வைக்கத் தகுந்த நான்கு ஆண்டுகள் காஷ்மீரத்தில் தங்கியிருந்தார். அவர் காஷ்மீர நாட்டைப்பற்றியும் மக்களைப் பற்றியும் அளித்துள்ள குறிப்புகள் ஹியூன் சாங்கின் குறிப்புகளைப்

போல் அவ்வளவு சரியாக இல்லாவிட்டாலும் இராஜதரங்கிணியில் காணப்படும் பல செய்திகளை உறுதிப்படுத்துவதால் அவற்றுக்கு வரலாற்று மதிப்பு உண்டு.

'தாங்' மரபின் வீழ்ச்சியுடன் இந்தியாவின் வடகிழக்கு அரசுகளுக்கும் சீனவுக்குமிடையே இருந்த அரசியல் தொடர்பு அற்றுப் போயிருக்கவேண்டும். அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் பல சீன பௌத்தர்கள் காஷ்மீரத்துக்கு வந்தாலும் அவர்கள் அந்த நாட்டைப் பற்றியோ மக்களைப் பற்றியோ குறிப்பு எதுவும் எழுதி வைக்கவில்லை.

அடுத்தபடியாகக் காஷ்மீரத்தின் வரலாற்றைப் பற்றியும் நில அமைப்புப்பற்றியும் எழுதியுள்ள வெளிநாட்டார் அங்கு வந்த முஸ்லிம் பயணிகளாவர். இவர்களில் முக்கியமானவர் சிறந்த அரபு அறிஞர் ஆல்பெரூனி. முகம்மது கஜினியின் வெற்றிகளால் இவருக்குக் காஷ்மீரத்தைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்பட்டது. ஏனெனில் கஜினியின் போர்வீரர்களிடமிருந்து தப்ப ''இந்துக்கள் (அப்போர்வீரர்கள் போக முடியாத) காஷ்மீரம் வாராணசி போன்ற இடங்களுக்கு ஓடியதாக'' ச் சொல்லப்பட்டது. காஷ்மீரமும் வாராணசியும் கல்விக்கும் அறிவியலுக்கும் பெயர் பெற்றவை என்று ஆல்பெரூனி சொல்கிறார். ஆனால் கஜினியால் காஷ்மீரத்தை வெல்ல முடியாததால் ஆல்பெரூனியால் காஷ்மீரத்திற்கு வர முடியவில்லை. எனினும் அவர் இந்தியாவின் மற்ற பகுதிகளைப்பற்றி எழுதியதைவிட அதிகமாகவே காஷ்மீர மக்களின் பழக்க வழக்கங்கள், அவர்களது வேளாண்மை, தொழில்கள், கலைகள் இவைப் பற்றி எழுதியுள்ளார்.

மொகலாய ஆட்சிக்காலத்துக் காஷ்மீரத்தைப்பற்றிப் பல வரலாறுகள் உள்ளன. அபுல்ஃபஸல் தம் 'ஆயின்-இ-அக்பரி'யில் காஷ்மீர வரலாற்றுச் சுருக்கத்தைச் சேர்த்து அதற்கு அடிப்படையாகக் கல்ஹணரின் நூலைக்குறிப்பிட்டிருக்கிறார். சில ஐரோப்பியர்களும்—குறிப்பாக, அக்பரோடும் ஔரங்கசீப்போடும் முறையே காஷ்மீரத்துக்கு வந்த பாதிரி ஜெரோம்சேவியரும் டாக்டர் பிரான்சிஸ் பெர்னியரும்–காஷ்மீரத்தைப் பற்றியும் அந்நாட்டு மக்களைப் பற்றியும் எழுதியுள்ளார்கள்.

டாக்டர் பெர்னியர் ஒரு ஃபிரஞ்சு மருத்துவர். கி.பி. 1665ல் ஔரங்கசீப்புடன் காஷ்மீரத்துக்கு வந்த அவர் தம் குறிப்புகளில் காஷ்மீர மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையைப் பற்றி நிறையச் செய்திகள் தருகிறார். காஷ்மீரப் பள்ளத்தாக்கின் அழகுகளை வருணித்துப் புகழும் (இந்த வருணனைக்கு 'இந்தியாவின் சுவர்க்கம்' என்ற பொருத்தமான தலைப்பு கொடுக்கப்பட்டிருக்

கிறது.) பெர்னியர் மாலிக்ஹைதரின் நூலைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்: ''ஜஹாங்கீரின் ஆணையால் எழுதப்பட்ட பழைய காஷ்மீர அரசர்களின் வரலாற்றைப் பாரசீகமொழியிலிருந்து பெயர்த்து எழுதுகிறேன்.'' இந்த மொழிபெயர்ப்பு இப்போது கிடைக்கவில்லை. டைரோலைச்சேர்ந்த சமய போதகரான 'லே பெரே பீஃபன்தாலர்' பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் எழுதிய 'டிஸ்கிரிப்ஷன் டிலே இண்டே' என்ற நூலிலுள்ள காஷ்மீர வரலாற்றுச் சுருக்கத்துக்கும் மாலிக்ஹைதரின் நூலே அடிப்படையாக இருந்தது. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும் சில ஐரோப்பியர்கள் காஷ்மீரத்தைப் பற்றி விவரமாக எழுதியுள்ளார்கள். வங்காள இராணுவத்தில் பதவி வகித்தவரும் கி. பி. 1783ல் காஷ்மீரத்துக்கு வந்தவருமான ஜார்ஜ் ஃபார்ஸ்டர் காஷ்மீரத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளைப்பற்றி எழுதியுள்ள குறிப்பு இவற்றுள் முக்கியமானதாகும். அளவுக்கு மீறிக்கொடுமையான ஆப்கானிய ஆட்சியில் காஷ்மீர மக்கள் அனுபவித்த இன்னல்களின் வருணனை இது போன்ற காலங்களைப்பற்றிய கல்ஹணரின் வருணனையை நினைவூட்டுகிறது. காஷ்மீரத்தில் சீக்கியரின் ஆட்சிக் காலத்தை (கி. பி. 1819–46)ப் பற்றிப் பல ஐரோப்பியப் பயணிகள் எழுதியிருக்கிறார்கள்; அவற்றுள் விக்னே எழுதியுள்ள வரலாறு காஷ்மீரத்தின் அரசியல், பொருளாதார அமைப்புப் பற்றிச் சொல்வதோடு, மக்களின் பழக்கவழக்கங்கள், பண்டைக்கலைகள், சால்வை வாணிகம் போன்றவற்றையும் விவரிப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மூர்க்ராஃபட் என்பவர் லடாக்கைப்பற்றி எழுதியுள்ளார். 'சிறிய திபெத்' என்றழைக்கப்படும் லடாக்கைப்பற்றி அலெக்சாந்தர் கன்னிங்ஹாம் எழுதியுள்ள 'லடாக்' ஒரு செய்திச் சுரங்கமாகும்.

'காஷ்மீரப் பள்ளத்தாக்கு' என்ற தம் நூலில் சர் வால்டர் லாரென்ஸ் கூறுகிறார்: ''காஷ்மீரப்பள்ளத்தாக்கு இந்துக்களின் புண்ணிய பூமி. அங்கே பழமையின் சின்னங்களற்ற சிற்றூரெதையும் நான் பார்க்கவில்லை.'' காஷ்மீரத்தில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் பல முக்கிய செய்திகளைத் தெரிவித்துள்ளன. ஜார்ஜ் ப்யூலர் (கி.பி. 1875) பழைய வடமொழி, பாரசீகக் கையெழுத்துப் படிகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இராஜதரங்கிணியிலும் மற்ற நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பல பழைய இடங்களைப் பற்றிய சான்றுகளை அந்தப் படிகளில் கண்டார். ஒரு நாட்டின் வரலாற்றை நன்கு அறிந்துகொள்ள அந்த நாட்டின் நில அமைப்புப்பற்றிய அறிவு எவ்வளவு இன்றியமையாதது என்று அவர் குறிப்பிட்டு, இராஜதரங்கிணியை முழுமையாக ஆராய்ச்சி செய்வதற்கான வழி முறைகளை வகுத்தார்.

இவ்வாறு ஊக்கப்படுத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் காஷ்மீர வரலாற்றைப் பற்றிய பல செய்திகள் கிடைத்துள்ளன. இவற்றில் பல இராஜதரங்கிணியில் கூறப்பட்டுள்ள செய்திகளை உறுதிப்படுத்துகின்றன. காஷ்மீரத்திலும் அதற்கு வெளியிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய தங்க, வெள்ளி, செம்பு, பித்தளை நாணயங்களும் இந்த ஆராய்ச்சிக்கு உதவி செய்தன. டாக்டர் கன்னிங்ஹாம் சேகரித்துள்ள ஏராளமான நாணயங்கள் இராஜ தரங்கிணி விவரிக்கும் காலவரையறையுடன் நேரடித் தொடர்பு கொண்டவை. அவர் தாம் பழைய நாணயங்களைச் சேகரிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவுகளை ஒரு கட்டுரை (**'நாணயங்களின் வரலாறு'** கி. பி. 1846) யில் வெளியிட்டுள்ளார். இது கல்ஹணரின் நூலையும் மற்ற வரலாறுகளையும் ஆய்வு செய்து மதிப்பிடுவதற்குப் பழைய நாணயங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குகிறது.

காஷ்மீரப்பள்ளத்தாக்கைச் சூழ்ந்த பகுதிகளில் வாழும் மக்களின் இன வரலாறு பற்றியும் இராஜதரங்கிணியின் மூலம் அதிகமாக அறிந்து கொள்ளலாம். புகழ்பெற்ற சாரதா கோவிலின் வடக்கே கிஷன்கங்கைப் பள்ளத்தாக்கின் மேற்பகுதிகளில், இப்போதிருப்பது போல்—அப்போதும் தரதர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களைக் காஷ்மீரத்திற்கு வடக்கே வாழ்பவர்களாகக் குறிப்பிடுகிறார் கல்ஹணர். ''அதற்கும் வடக்கிலுள்ள மிலேச்சர்கள்'' என்று அவரால் குறிப்பிடப்படுபவர்கள் அந்தக் காலத்திலேயே முஸ்லிம் சமயத்திற்கு மாறிவிட்ட தரதர்களாக இருக்கலாம். பள்ளத்தாக்கிற்குத் தெற்கிலும் மேற்கிலும் இருந்த பகுதிகளில் காஸர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் இராஜபுரி, பூஞ்சு போன்ற மலைப்பகுதிகளை ஆண்டார்கள். ஒரு காஸ மரபு பதினோராம் நூற்றாண்டில் காஷ்மீரத்தைக் கைப்பற்றியது. வடக்கே முஸஃபராபாத் வரையில் தொம்பர்கள் வாழ்ந்தனர். 'பௌட்டர்கள்' (லடாக்கிலும் அதற்கருகிலுள்ள மாவட்டங்களிலும் இப்போது வாழும் பூட்டியாக்கள்) பள்ளத்தாக்கின் வடகிழக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்தார்கள். காஷ்மீர மக்களைப் பற்றியும் மற்ற வட பகுதி மக்களைப் பற்றியும் முழுமையான இனத்துறையாராய்ச்சி நடத்தப்படும்போது இராஜதரங்கிணியிலிருந்து கிடைக்கும் மேலே குறிப்பிடப்பட்ட செய்திகள் அந்த ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

துணை நூல்கள்

ஆசிரியர்		நூல்
அபுல் ஃபஸல்	—	'ஆயின்–இ–அக்பரி'; மொழி பெயர்ப்பு—எச். எஸ். ஜாரெட், 'ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால்'—இன் 'பிப்ளியோ தெகா இண்டிகா சீரிஸ்' மற்றும் மொழிபெயர்ப்பு, விளக்கங்களுடன்—ஜே. என். சர்க்கார், 'ஏஷியாடிக் சொஸைட்டி,'—கல்கத்தா, 1949.
கௌல், முகம்மது ஆஜம்	—	'வக்கத்–இ–காஷ்மீர்'; ஸ்ரீநகரம்.
கௌல், எஸ்.	—	(பதிப்பு)—'ஜைன இராஜதரங்கிணி'; ஹோஷியார்பூர், 1966.
சாக்ஸேனா, கே. எஸ்.	—	'காஷ்மீரத்தின் அரசியல் வரலாறு'; 'அப்பர் இண்டியா பப்ளிஷிங் ஹௌஸ் (பி) லிட்', லக்னோ, 1974.
ஸூஃபி, ஜி. எம். டி.	—	'காஷ்மீர்'; மறுபதிப்பு — 'லைட் அண்ட் லைஃப் பப்ளிஷர்ஸ்', புது தில்லி, 1974.
ஜாது, ஜகதர், மற்றும் கஞ்சிலால்	—	(பதிப்பு)—'நீலமத புராணம்'; ஸ்ரீநகரம், 1928.
ஜோன்ஸ், சர் வில்லியம்	—	'ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ்', பகுதி V; கல்கத்தா, 1826.
தத், ஜே. சி.	—	'காஷ்மீர அரசர்கள்—iii'; ஜோனராஜர், ஸ்ரீவரர், சுகர் ஆகியோரின் 'இராஜதரங்கிணி'களின் மொழி பெயர்ப்பு, கல்கத்தா, 1898.
பண்டிட், ஆர். எஸ்.	—	'இராஜதரங்கிணி'; மொழி பெயர்ப்பு; மறுபதிப்பு, சாகித்திய அக்காதெமி, 1977.

பர்மு, ஆர். கே.	—	'காஷ்மீரத்தில் முஸ்லிம் ஆட்சியின் வரலாறு'; புது தில்லி, 1969.
பாம்ஸாய், பி. என். கே.	—	'ஒரு காஷ்மீர வரலாறு'; மெட்ரோ போலிடன் புக் கம்பெனி (பி) லிட்., தில்லி, 1962.
பீட்டர்சன், பி.	—	'இரண்டாவது இராஜதரங்கிணி'; ஜோனராஜரின் மூல நூலின் மொழிபெயர்ப்பு, பம்பாய், 1896.
ப்யூலர், ஜி.	—	'விக்கிரமாங்க தேவ சரிதம்'; மொழி பெயர்ப்பு, பம்பாய், 1875.
மஜூம்தார், ஆர். சி.	—	'பண்டைய இந்தியா'; வாராணசி, 1956.
,,	—	'வேத காலம்'; இலண்டன், 1950.
ராய், எஸ். சி.	—	'காஷ்மீரத்தின் தொடக்க கால வரலாறும் பண்பாடும்'; புது தில்லி, 1969.
ராலின்சன், எச். ஜி.	—	'இந்தியா'; இலண்டன், 1937.
லாரென்ஸ், வால்டர்	—	'காஷ்மீரப் பள்ளத்தாக்கு'; இலண்டன், 1895.
வில்சன், எச். எச்.	—	'காஷ்மீரத்தின் இந்து வரலாற்றைப் பற்றிய கட்டுரை'; வெளியானது—'ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ்', பகுதி XV, கல்கத்தா, 1825.
ஸ்டெய்ன், எம். ஏ.	—	'கல்ஹணரின் இராஜதரங்கிணி'; மொழிபெயர்ப்பு; மறுபதிப்பு—'மோதிலால் பனாரஸிதாஸ்', தில்லி, வாராணசி, 1961.
,,	—	'ஔகாங்கின் காஷ்மீர வரலாறு பற்றிய குறிப்புகள்'; வியன்னா, 1896.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்

லட்சுமி நாத பெஸ்பருவா (ஹேம் பருவா) க. த. திருநாவுக்கரசு | கபீர் (பிரபாகர் மாச்வே) தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார் | கேசவஸுதர் (பிரபாகர் மாச்வே) இராம கோபிநாதன் | ஈசுவர் சந்திர வித்யாசாகர் (ஹிரண்மய் பாணர்ஜி) இராம கோபிநாதன் | ராஜாராம் மோகன் ராய் (சௌமியேந்திரநாத தாகூர்) க. த. திருநாவுக்கரசு | பிரேம்சந்த் (பிரகாஷ் சந்திர குப்தா) சரஸ்வதி ராமநாத் | குமாரன் ஆசான் (கே. எம். ஜார்ஜ்) கே. சி. சங்கரநாராயணன் | தாருதத் (பத்மினி ஸென் குப்தா) ஆ. சீனிவாசராகவன் | வீரேசலிங்கம் (வி. ஆர். நார்லா) நா. பார்த்தசாரதி | ஸ்ரீ அரவிந்தர் (மனோஜ் தாஸ்) பி. கோதண்டராமன் | மீராபாய் (உஷா நில்சன்) எஸ். கந்தசாமி 'துறைவன்' | B. M. ஸ்ரீகண்டய்யா (A. N. மூர்த்திராவ்) இரா. மதிவாணன் | சந்துமேனன் (டி. சி. சங்கரமேனன்) கு. இராஜவேலு | காஸி நஸ்ருல் இஸ்லாம் (கோபால் ஹால்டார்) கே. பி. எஸ். ஹமீத் | வள்ளத்தோள் (ஹிருதயகுமாரி) மா. இளையபெருமாள் | பசவேஸ்வரர் (H. திப்பேருத்ர சுவாமி) T. K. நாகாம்பாள் | பாணபட்டர் (கே. கிருஷ்ண மூர்த்தி) பெ. திருஞான சம்பந்தன் | பக்கிம் சந்திர சாட்டர்ஜி (சு. ச. ஸென் குப்தா) அசோகமித்திரன் | மகரிஷி தேவேந்திரநாத தாகூர் (நா. சௌதுரி) கா. மீனாட்சிசுந்தரம் | தாராசங்கர் பந்தோபாத்யாயர் (மஹாஸ்வேதாதேவி கு. இராஜவேலு | நானாலால் (U. M. மணியார்) நா. பார்த்தசாரதி | ஜீவனானந்ததாஸ் (சி. தாஸ் குப்தா) க. த. திருநாவுக்கரசு | பாரதியார் மூலமும் தமிழாக்கமும் (பிரேமா நந்தகுமார்) | வேதம் வேங்கடராய சாஸ்திரிகள் (வேதம் வேங்கடராய சாஸ்திரி) எஸ். செல்லப்பன் | புத்த தேவபோஸ் (அலோகரஞ்சன்தாஸ் குப்தா) த. வே. வீராசாமி | மாணிக்கவாசகர் மூலமும் தமிழாக்கமும் (G. வன்மீக நாதன்) | ஜெயதேவர் (சுநீதி குமார் சாட்டர்ஜி) டி. எஸ். பார்த்தசாரதி | மாணிக் பந்தோபாத்யாயர் (சரோஜ் மோகன் மித்ரா) எஸ். கந்தசாமி 'துறைவன்' | தமிழ்த் தாத்தா (கி. வா. ஜகந்நாதன்) | கல்ஹணர் (சோம்நாத் தர்) எஸ். கிருஷ்ணமூர்த்தி.

(அடைப்புக்குள் உள்ளது மூல ஆசிரியரின் பெயர்)